விலை: 50.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 மாசி 06 செவ்வாய்க்கிழமை (18.02.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 61

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன
# பொதுத் தேர்தலில் கூட்டணி

### 'மொட்டு' சின்னத்தில் போட்டியிட முடிவு

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஒன்றிணைந்து "ஸ்ரீலங்கா நிதஹஸ் பொதுஜன சந்தானய" என்ற கூட்டணியில் தாமரை மொட்டுச் சின்னத்தில் போட்டியிடும் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

23

## மின்சாரம் தாக்கியதில்
# இளைஞன் உயிரிழப்பு

### யாழ்.நகரில் அமைந்துள்ள குளிர்பானக் கடையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மின்சாரம் தாக்கிய நிலையில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

23

## கோட்டா ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர்
# காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்களுக்கு புலனாய்வு தொடர்ந்து அச்சுறுத்தல்

### சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

**(கொழும்பு) இலங்கையின் ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்ட பின்னர் காணாமல்போகச் செய்யப்பட்டவர்களின் குடும்பத்தவர்கள் மற்றும் அவர்களுக்கு ஆதரவாகச் செயற்படும் மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கு எதிராக படையினரதும் புலனாய்வு பிரிவினரதும் அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளதாக சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கம் உறுதியளித்த வகையில் காணாமல்போனோர் தொடர்பில் இலங்கை அரசாங்கம் பொறுப்புள்ளவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியுள்ளது.

காணாமல்போனோர் தொடர்பில் வடக்கு, கிழக்கின் 6 இடங்களில் நடவடிக்கையாளர்கள் செயற்படுகின்றனர். இவர்களை கண்காணிக்கும் நடவடிக்கைகளும் அச்சுறுத்தல் நடவடிக்கைகளும் அதிகரித்துள்ளதாக சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

காணாமல் போனவர்களின் உறவினர்களின் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. அதற்கு செல்வதற்கு முன்னர் காணாமல் போனவர்களின் உறவுகளுக்கு சுமார் 6 இடங்களில் இருந்து தொலைபேசி அழைப்புக்கள் விடுக்கப்பட்டுள்ளன.

இதன்போது எதற்காக இந்த கூட்டம் இடம்பெறுகிறது உட்பட்ட பல்வேறு கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன.

23

## அப்பாவி மக்களைக் கொன்றது வீரமல்ல
# அமெரிக்கா மட்டுமல்ல ஏனைய நாடுகளும் சவேந்திர சில்வாவை தடை செய்ய வேண்டும்

### நீதியரசர் விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

ஆயுதப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் சவேந்திர சில்வா சட்டத்திற்குப் புறம்பான சாகடித் தல்களை நடத்துமாறு ஆணையிட்டார் என்பதற்கு ஆதார பூர்வமான குற்றச்சாட்டுக்களை சனல் 4 ஆவணப்படுத்தியுள்ளது. "செய்யக் கூடியதைச் செய்க" என்ற சில்வா

23

## தீக்காயத்துக்குள்ளான
# மூதாட்டி ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தீக்காயத்துக்குள்ளான மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று திங்கட்கிழமை தெல்லிப்பழையில் இடம்பெற்றுள்ளது.

23

## பொதுத் தேர்தலுக்கான
# நடவடிக்கையை ஜனாதிபதி முன்னெடுக்க வேண்டும்

### பிரதமர் மகிந்த வலியுறுத்து

(கொழும்பு)

பாராளுமன்றத்தை கலைத்து உடனடியாக பொதுத்தேர்தலுக்கு நடவடிக்கைகளை ஜனாதிபதி முன்னெடுக்க வேண்டும் எனத் தெரிவித்த

04

# தமிழர்களின் கோரிக்கைக்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

### கலகொட அத்தே ஞானசார தேரர்



(கொழும்பு)

சாய்ந்தமருதில் புதிய பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டதைப் போன்று, தமிழர்களின் நீண்டகாலக் கோரிக்கையாக இருக்கும் கல்முனையிலும் தனிப் பிரதேச செயலகத்தை உருவாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரி

23

## 20 பவுண் நகைகளுடன்
# ஐந்து இளைஞர்கள் அரியாலையில் கைது

### 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பணமும் மீட்பு

03ஆம் பக்கம் பார்க்க

# கிளிநொச்சியில் குழு மோதல்

### 4 பேர் படுகாயம்

(தருமபுரம்)

கிளிநொச்சி மயில்வாகனபுரம் பகுதியில் இடம்பெற்ற குழு மோதலில் 4 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன்

23

## இந்தோனேசியா ஜகார்த்தாவில்
# இந்து ஆலயம் அமைக்க தமிழர்களுக்கு அனுமதி

(ஜகார்த்தா)

இந்தோனேசிய தலைநகர் ஜகார்த்தாவில் இந்து ஆலயம் அமைக்க அங்குள்ள தமிழ் மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பெரும்பாலும் வடக்கு சுமத்திராவில்வாழும்

04

# அத்தே ஞானசார தேரரை நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

(கொழும்பு)

நீதிமன்ற தீர்ப்பை மீறி செயற்பட்ட குற்றச்சாட்டில் பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞான சார தேரர் உட்பட மூவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

முல்லைத்தீவு நீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்தில் நீதிமன்ற உத்தரவை மீறி பௌத்த பிக்குவின் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த சம்பவத்திற்கு எதிராக கலகொட அத்தே ஞானசார தேரர், முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோருக்கு எதிராக முல்லைத்தீவு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜாவினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கு நேற்று திங்கட்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் ஏ.ச்.எம். நவாஸ் மற்றும் அர்ஜுன ஒபயசேகர முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது நீதிபதிகள்கலகொட அத்தே ஞானசார தேரர் உட்பட மூவரை எதிர்வரும் மே மாதம் 13 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்த உத்தரவிட்டுள்ளனர். (ம-3,281)


## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1977
உத்தரட்டாதி கிரகபாவம்: 17 1/4
உயரம் 5' 2" சொந்த தொழில் செய்யும்
மணமகனுக்கு மணமகள் தேவை.
குறிப்பு : தரகர் தேவையில்லை.
நேரடித் தொடர்பிற்கு
தொ.இல: 077 076 3328
(2303)


# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 10 | 17 |
| 10 | 02 |
| 1949 | 2020 |

## சிதம்பரப்பிள்ளை மாணிக்கவாசகர்

சோளாவத்தை வதிரி கரவெட்டியை பிறப்பிடமாகவும் புலவராவோடை வதிரியை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை மாணிக்கவாசகர் 17.02.2020 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - மாணிக்கம் தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான கதிர்காமத்தம்பி - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் பாசமிகு கணவரும் கார்த்திகா, சத்தியேந்திரா, காலஞ்சென்ற மணிவேந்தன் மற்றும் யோகேந்திரா ஆகியோரின் அன்பு தகப்பனும் காலஞ்சென்ற தேவராசா மற்றும் தவமணிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவகுமார், துஷ்யந்தி, சசிதா ஆகியோரின் மாமனாரும் நிகஸ்திகா, சஸ்வின், சஸ்விந், கவின், அக்ஷயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.02.2020) புதன்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலவராவோடை,
வதிரி.

தகவல் : குடும்பத்தினர்.
021 226 3919

(C-9272)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

## சிமைஸ் திரேசா

தோற்றம் : 1938.08.26 மறைவு : 2020.01.20



(C-9273)

சோகத்தின் சுமையதனை
சுமக்கின்றோம் இதயமதில்
பாசத்தின் உறவுகள் நாம்
பரிதவித்து வாடுகின்றோம்
நேசத்தை மறந்தது ஏன்
நெடுந்தூரம் சென்றீர்களோ!

செல்வபுரம்,
முல்லைத்தீவு.

நீங்காத நினைவுடன்,
குடும்பத்தினர்.

## அறிவித்தல்

### லயன்ஸ் கழகம் – சாவகச்சேரி

மேற்படி கழகத்தின் கட்டிட புனரமைப்பு நிதிக்காக விற்கப்பட்ட அதிர்ஸ்டலாபச் சீட்டிழுப்பு 18.02.2020 அன்று அதிர்ஸ்டம் பார்க்கப்பட இருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தால் மேற்படி அதிர்ஸ்டலாப சீட்டிழுப்பு 08.03.2020 அன்று அதிர்ஸ்டம் பார்க்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

லயன்ஸ் கழகம், சாவகச்சேரி.

(C-9275)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் ஜெகன் ராஜேந்தினி



மண்ணில்
11.07.1985

விண்ணில்
18.02.2019

கர்த்தர் எனக்காக
யாவையும்
செய்து முடிப்பார்
சங்கீதம் :-
138.08

(2305)

தகவல் - குடும்பத்தினர்
பூம்புகார், அரியாலை.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## செல்வன் இராசதுரை ஜனகன்

(Attorney - at - Law)

கொழும்பு சட்டக் கல்லூரியில் கல்வி கற்று கடந்த(14.02.2020) வெள்ளிக்கிழமை அன்று கொழும்பு உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட கொடிகாமம் வீதி, புலோலியைச் சேர்ந்த **செல்வன் இராசதுரை ஜனகன்** அவர்களை பாராட்டி நிற்பதுடன், அவர் மேலும் பல சாதனைகளைப் படைக்க வேண்டும் என வாழ்த்தி நிற்கின்றோம்.

தேவரன்,
புலோலி.

வாழ்த்துவோர்:
பசுமை இல்ல
நண்பர்கள்.

(C-9274)

# "யாழ்.மண்ணுக்கு தலைவணங்குகிறேன்!"



## உங்களை நாடிவரும் மக்களை வெறுங்கையுடன் அனுப்பாதீர்கள்

### அதிகாரிகளுக்கு அரச அதிபர் அறிவுரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரச அதிபராக பணியாற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தை பாக்கியமாகக் கருதுவதோடு என்னைக் கல்வியால் உயர்த்திய யாழ்.மண்ணுக்குத் தலைவணங்குகிறேன் என அரச அதிபராக கடமைகளைப் பொறுப்பேற்ற கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று தனது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றதன் பின் அதிகாரிகள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மண்ணின் பண்பாடு, கந்தபுராணப் பண்பாடு, கலை, கலாசார விழுமியங்களை தன்னகத்தே கொண்ட யாழ்ப்பாணத்தில் சேவையாற்றக் கிடைத்தமையையிட்டுப் பெருமையடைகின்றேன்.

யாழ்ப்பாணம் தற்போது பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுத்து வருகிறது. நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்து நிற்பதன் மூலம் சவால்களை வெற்றிகொண்டு முன்னோக்கிச் செல்ல முடியும்.

நான் முன்னர் சேவையாற்றிய இடங்களில் என்னை நாடிவரும் மக்களை வெறும்கையோடு அனுப்பியது கிடையாது.

பிரச்சினைகளுடன் வரும் மக்களுக்கு எம்மால் முடிந்த பணியைச் செய்ய வேண்டும். யாழ்.மாவட்டம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டம்.

இங்குள்ள மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியிலும்



பலவிதமான போராட்டங்களுக்கு மத்தியிலும் தமது வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள் என்பதை நான் அறிவேன்.

எனது சேவைக்காலத்தில் பதவியைத் தேடிச் சென்றதில்லை. இருந்தாலும் உயர் பதவிகள் என்னைத் தேடிவந்தன.

இந்நிலையில் எனக்குக் கிடைத்த இந்த அரச அதிபர் பதவியை இறைவனுக்கு விசுவாசமாகவும் மக்களுக்கு விசுவாசமாகவும் பயன்படுத்துவேன்.

இலங்கையிலுள்ள அரச உயர் பதவிகளை வகிப்போர் என்னோடு கல்வி கற்றவர்களாகக் காணப்படும் நிலையில் மக்களின் தேவைகளை இலகுவாக அரச உயர் மட்டங்களுக்கு எடுத்துச் சென்று சேவையாற்ற உறுதுணையாக இருக்கும்.

அதிகாரிகளின் செயற்பாடுகள் மக்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டே அமைய வேண்டும். மக்களின் வரிப்பணத்தைப் பெறும் ஊழியர்கள் நாங்கள் என்ற மனோநிலை ஒவ்வொரு அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அதிகாரிகளிடம் இருந்தால் சிறப்பாக சேவையாற்ற முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10-101)

# 20 பவுண் நகை, இலட்சக்கணக்கான பணத்துடன் அரியாலையில் 5 இளைஞர்கள் பொலிஸாரால் கைது


(யாழ்ப்பாணம்)


அரியாலைப் பகுதியில் நேற்றுக்காலை 20 பவுண் நகையுடன் 5 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அரியாலையிலுள்ள வீடு ஒன்று சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் முன்னெடுக்கப்பட்ட போது அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் 20 பவுண் நகைகள் மீட்கப்பட்டன.

இதேவேளை வீட்டில் தங்கியிருந்த அரியாலையைச் சேர்ந்த ஐந்து இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

யாழ்.குடாநாட்டில் பல்வேறு இடங்களில் வழிப்பறி மற்றும்





திருட்டுக்கள் இடம்பெற்றுவரும் நிலையில் பொலிஸார் குறித்த நடவடிக்கையை முன்னெடுத்து நகைகளை மற்றும் பணத்தை மீட்டனர்.

சந்தேக நபர்கள் 5 பேரும் 20-25 வயதிற்கு இடைப்பட்டவர்கள் எனவும் சந்தேக நபர்களை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளதாகவும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (இ-101)

## மர்ம நபர்கள் துப்பாக்கிச்சூடு

### குடும்பஸ்தர் உயிரிழப்பு!

(காலி)

காலி பலப்பிட்டிய - வெலிவதுகொடை பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளியில் வந்த மர்ம நபர்களால் இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான 36 வயதுடைய குடும்பஸ்தர், பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (இ-7)

## சஹ்ரானின் சகாக்களுக்கு மீண்டும் விளக்கமறியல்

(கல்முனை)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையோர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைதானோரில் 12 பேரை மீண்டும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதவான் நீதிமன்று உத்தரவிட்டது.

குறித்த வழக்கு நேற்று திங்கட்கிழமை கல்முனை நீதிமன்ற நீதவான் ஐ.என்.றிஸ்வான் முன்னிலையில் விசாரணைக்கு இருவேறு சந்தர்ப்பங்களில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த தாக்குதல் சம்பவத்துடன் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்ட அனைவரும் சட்டமா அதிபரின் பணிப்புரைக்கமைய வெவ்வேறு சிறைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கும் நிலையில் மீண்டும் நேற்று விசாரணைக்காக ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவ்வாறு விசாரணைக்காக வந்த சந்தேக நபர்கள் அனைவரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் குற்றப்புலனாய்வு பிரிவு மற்றும் பாதுகாப்பு தரப்பினரால் அவசரகால சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த காலங்களில் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் இருந்து கைதாகி பல மாதங்களுக்கு மேலான விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

மேலும் பொலிஸாரின் ஆட்சேபனையுடன் அனைத்து சந்தேக நபர்களதும் விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டு இவ்வழக்கு விசாரணை எதிர்வரும் மார்ச் 2 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைதான சந்தேக நபர்கள் அனைவரும் காத்தான்குடி, கல்முனை, சாய்ந்தமருது, சம்மாந்துறை உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

இதில் கல்முனை சாய்ந்தமருதில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கு உதவி ஒத்தாசை வழங்கிய சந்தேக நபர்களும் கடும் பாதுகாப்பிற்கு மத்தியில் அழைத்து வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழில் துப்பாக்கி மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழில் முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையொன்றில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியொன்று மீட்கப்பட்டது.

கடற்படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தேடுதலின் போதே இந்தத் துப்பாக்கி மீட்கப்பட்டது.

புதருக்குள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் இந்தத் துப்பாக்கி மீட்கப்பட்டது. (இ-7)

# மேற்கிந்தியத்தீவுகளுடனான பயிற்சிப்போட்டியில் தரங்கவின் சதத்தினால் இலங்கைக்கு வெற்றி




மேற்கிந்தியத்தீவுகள் அணியுடனான பயிற்சிப் போட்டியில் இலங்கை அணி 2 விக்கெட்டுக்களினால் வெற்றிபெற்றுள்ளது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு வருகை தந்துள்ள கிரான் பொல்லார்ட் தலைமையிலான மேற்கிந்தியத்தீவுகள் அணியானது இலங்கையுடன் ஒரு ஒருநாள் பயிற்சிப் போட்டி, 3 ஒருநாள் போட்டி மற்றும் 3 இருபதுக்கு :20 போட்டிகளில் விளையாடி வருகிறது.

இந் நிலையில் நேற்று கொழும்பு சரவணமுத்து கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமான பயிற்சிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணியானது 49.4 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 282 ஓட்டங்களை குவித்தது.

மேற்கிந்தியத்தீவுகள் அணி சார்பில் டரன் பிராவோ 88 பந்துகளில் 14 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 100 ஓட்டங்களையும், சுனில் அம்ரிஸ் 41 ஓட் டங்களையும், நிகோலஷ் பூரன் 41 ஓட்டங்களையும் அதிகபடியாக பெற்றனர்.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் தில்ஷான் மதுசங்க 3 விக்கெட்டுக்களையும், அசித பெர்னாண்டோ 2 விக்கெட்டுக்களையும், தக்ஷில டிசில்வா, கவிந்து நதீஷன், புலின தரங்க ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதன் பின்னர் 283 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியானது 47.3 ஓவரில் 8 விக்கெட்டுக்களை இழந்து மேற்கிந்தியத்தீவுகள் அணி நிர்ணயித்த வெற்றியிலக்கை அடைந்தது.

இலங்கை அணி சார்பில் இப்போட்டிக்கு தலைமை தாங்கிய உபுல் தரங்க சிறப்பாக துடுப்பெடுத்தாடி 124 பந்துகளில் ஒரு சிக்ஸர்,



16 பவுண்டரிகள் அடங்கலாக 120 ஓட்டங்களையும், அசேல குணரத்ன 64 ஓட்டங்களையும் அதிகபடியாக பெற்றனர்.

பந்து வீச்சில் மேற்கிந்தியத்தீவுகள் அணி சார்பில் ஷெல்டன் கொர்ட்ரல், ஹெய்டன் வேல்ஸ் மற்றும் பேபியன் அலென் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், கீமோ பவுல் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.



## பரபரப்பான இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில்

# நொதேணை வீழ்த்தி சம்பியனாகியது அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம்





பரபரப்பான இறுதிப்பந்துப் பரிமாற்றத்தில் 01 ஓட்டத்தினால் நொதேண் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி சம்பியனாகியது அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம்.

நல்லூர் பிரதேச செயலக பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் அரி யாலை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

முதலாவதாக நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் பொற்பதி விளையாட்டுக் கழகமும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டது.கோகுலன், பத்ம முரளியின் அதிரடி மூலம் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது.

இரண்டாவதாக நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில நொதேண் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பாரதி விளையாட்டுக் கழகம் மோதியது.

இப்போட்டியில் நொதேண் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது.


நடைபெற்ற இறுதிப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 10 ஓவர்களில் 79 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நொதேண் விளையாட்டுக்கழகம் 78 ஓட்டங்கள் பெற்று ஒரு ஓட்டத்தினால் தோல்வியடைந்தது.(ம)

# பத்தாவது இடத்திற்கு சரிந்தார் கோலி இரண்டாவது இடத்தில் நீடிக்கும் ராகுல்

ஐசிசி வெளியிட்டுள்ள ரி20 கிரிக்கெட் தரவரிசையில் இந்திய அணி கேப்டன் 10-வது இடத்திற்கு சரிந்துள்ள நிலையில், கேஎல் ராகுல் 2-வது இடத்தில் நீடிக்கிறார்.

ரி20 கிரிக்கெட் போட்டிக்கான பேட்ஸ்மேன் தரவரிசை பட்டியலை ஐசிசி வெளியிட்டுள்ளது. இதில் இந்திய அணி கேப்டன் விராட் கோலி 10-வது இடத்திற்கு சரிந்துள்ளார். இதற்கு முன் 9-வது இடத்தில் இருந்தார். தென்ஆபிரிக்காவுக்கு எதிரான தொடரில் சிறப்பாக விளையாடியதன் மூலம் மோர்கன் 9-வது இடத்திற்கு முன்னேறியுள்ளார். விராட் கோலி 10-வது இடத்திற்கு சரிந்துள்ளார்.



கேஎல் ராகுல் 823 புள்ளிகளுடன் 2-வது இடத்தில் நீடிக்கிறார். பாகிஸ்தான் வீரர் பாபர் அசாம் 879 புள்ளிகளுடன் முதல் இடத்தில் நீடிக்கிறார். ஆரோன் பிஞ்ச் 3-வது இடத்திலும், கொலின் முன்றோ 4-வது இடத்திலும், மேக்ஸ்வெல் 5-வது இடத்திலும், தாவித் மலன் 6-வது இடத்திலும், எவின் லீவிஸ் 7-வது இடத்திலும், ஆப்கானிஸ்தான் வீரர் ஹஸ்ரதுல்லா 8-வது இடத்திலும் உள்ளனர்.

# இந்து ஆலயம்...

தமிழர்கள், கோவில் கட்டுவதற்கான அனுமதிக்கு கிட்டத்தட்ட 60 ஆண்டுகள் காத்திருந்ததாகத் தகவல்கள் கூறுகின்றன.

ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை நடந்ததாக ஆர்ச்சிபெலாகோ செய்தித்தளம் குறிப்பிட்டுள்ளது.

ஜகார்த்தாவின் ஆளுநர் அனீஸ் பஸ்வெடான் நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

(ம-3)

# நடவடிக்கையை ஜனாதிபதி...

பிரமர் மகிந்த ராஜபக்ஷ, அரசியல் பழிவாங்கல், முரண்பாடான அரசியல் நிர்வாகம் ஆகியவற்றை கொண்டு நாட்டை சிறந்தமுறையில் கட்டியெழுப்ப முடியாது என்றும் சுட்டிக்காட்டினார்.

பதுளை, அதம்பிடிய பிரதேச நீர் வழங்கல் திட்டத்தை நேற்று திங்கட்கிழமை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயேபிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தற்போது புதிய அரசாங்கமும், புதிய ஜனாதிபதி , பிரதமரும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஆனாலும் பாராளுமன்றத்தில் எங்களுக்கு பெரும்பான்மை பலம் இல்லை. கடன்களை மீள்செலுத்துவதற்கு நாம் சட்டமூலமொன்றை கொண்டு வர தயாராகி வருகின்றோம். எதிரணி விரும்பினால் அதனை தோற்கடிக்க முடியும். அவ்வாறு தோற்கடிக்கும் பட்சத்தில் நாட்டின் எதிர்கால அபிவிருத்தி பயணம் பாதிப்படையும்.

ஆனாலும் நாட்டின் அபிவிருத்திக்கு அவர்களால் (எதிர்தரப்பினரால்) மிக சொற்ப காலத்திற்கே இடையூறு விளைவிக்க முடியும். ஏனெனில் எதிர்வரும் மார்ச் மாதத்தில் பாராளுமன்றத்தை கலைப்பதற்கான முதலாவது வாய்ப்பு கிடைக்கும் அந்த முதல் வாய்ப்பிலேயே பாராளுமன்றத்தை கலைத்து பொதுத்தேர்தலுக்கு செல்வதற்கு ஜனாதிபதியை கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

(ம-3)

# தமிழ் மக்களுக்கான நீதி, நிலையான தீர்வுக்கு பொறுப்புக்கூறலை இந்தியா பயன்படுத்த வேண்டும்


## நீதியரசர் விக்னேஸ்வரன் இடித்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் ஏனைய உறுப்பு நாடுகளுடன் சேர்ந்து மனித உரிமைகள் சபையின் ஊடாக இறுதி யுத்தம் தொடர்பில் இலங்கைக்கு இருக்கும் பொறுப்புக்கூறல் தொடர்பில் கடும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு இந்தியா முன்னின்று செயற்பட வேண்டும்.

வெறுமனே இலங்கையுடன் பேரம் பேசுவதற்கான ஒரு கருவியாக பொறுப்புக்கூறல் விடயத்தை இந்தியா பயன்படுத்தக் கூடாது.

தமிழ் மக்களுக்கான நீதி, நிலையான தீர்வு என்பவற்றுக்கான ஒரு கருவியாகவே பொறுப்புக்கூறலை இந்தியா பயன்படுத்த வேண்டும். இதுவே இந்தியாவுக்கு பல வழிகளிலும் அனுகூலமாக அமையும் என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். அவர் நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிய அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.



**கேள்வி:-** இந்தியவிஜயத்தினை மேற்கொண்டிருந்த பிரதமர் மகிந்த ராஜபகஷவுக்கு இந்திய அரசு பெருவரவேற்பளித்து இராணுவ பொருளாதார உதவிகளை வழங்குவதாக அறிவித்துள்ளது. இது குறித்து உங்கள் நிலைப்பாடு என்ன?

**பதில்:-** இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே இந்திய அரசு தனது தார்மீகப் பொறுப்பில் இருந்து தப்பியோட முடியாது. தமிழ் நாடு அதன் அங்கத்துவப் பிரதேசம் என்றபடியால் மட்டுமல்ல எதிர்கால பாரத நாட்டுப் பாதுகாப்பையும் உத்தேசித்தே இக்கூற்று பொருத்தமாகின்றது.

1987 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைக் காட்டி போராட்ட இயக்கங்களை ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு ஆயுதப் போராட்டத்தைக் கைவிடச் சொன்னது இந்தியாவே. இந்தியாவின் நேர்மை மீது நம்பிக்கை இழந்த புலிகள் இந்தியாவுடன் நேரடியாக மோதிய காரணத்தால் இந்தியா-இலங்கைத் தமிழ் மக்கள் உறவில் விரிசல் ஏற்பட்டது. இதற்கு அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி ஒரு சிலரால் தவறாக வழி நடத்தப்பட்டமை காரணம் என்று பலர் எழுதி இருக்கின்றார்கள். அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ராஜீவ்காந்தியை தனது சாணக்கியத்தால் விடுதலைப் புலிகளுக்கு எதிராக திருப்புவதில் வெற்றி கண்டார் என்று சிலர் கூறுவதிலும் உண்மைகள் இல்லாமல் இல்லை. பின்னர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதும் விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு மேலும் விரிசல் அடைந்ததுடன் இலங்கை இனப் பிரச்சினையில் தலையிடாக் கொள்கையை நீண்டகாலம் இந்தியா கடைப்பிடித்தது.

ஆனால், இறுதி யுத்தத்தில் முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டு, பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டு, வெள்ளைக்கொடிகளுடன் சரணடைந்த போராளிகளும் கொல்லப்பட்டபோது இந்தியா அதனை வேடிக்கை பார்த்து நின்று ஒருபெரும் வரலாற்றுத் தவறை இழைத்திருந்தது. யுத்தத்தை நிறுத்துவதற்கான பல வெளிநாட்டு இராஜதந்திர முயற்சிகள் நடைபெற்ற போதும் இந்தியா அவற்றுக்கு ஆதரவு அளிக்காமல் குந்தகமாக செயற்பட்டமை வெள்ளிடை மலையான ஒரு உண்மையே.

இலங்கைத் தமிழர்களின் இனப் பிரச்சினை தொடர்பில் அப்போதைய இந்திய கொள்கை வகுப்பாளர்கள் மத்தியில் தெளிவான புரிதல் இல்லாமல் இருந்தமையும் எமது நாட்டு அரசியல்வாதிகள் இந்திய உயர்ஸ்தானிகர்களை உச்சிகுளிரச் செய்து எம் நாட்டுத் தமிழர்கள் பற்றிப் பிழையான கருத்துக்களை அவர்களுக்குப் புகட்டி வந்தமையும் இலங்கை அரசாங்கங்கள் சீனாவைப் பயன்படுத்தி பூச்சாண்டி காட்டி இந்திய அரசாங்கத்தை இலகுவாக ஏமாற்றி வந்தமையும் இந்த வரலாற்றுத் தவறுக்கான காரணங்கள் எனலாம்.

இதே ஏமாற்று வித்தையை தற்போதும் இலங்கை அரசாங்கம் பயன்படுத்த எத்தனித்து வருகின்றது. ஆனால், மோடி தலைமையிலான அரசாங்கமும் தற்போதுள்ள இந்திய கொள்கை வகுப்பாளர்களும் இவற்றை நன்கு புரிந்து வைத்துள்ளார்கள் என்றே நம்புகின்றேன். ஆனாலும், எமக்கு எதிராகத் தொடரும் இன அழிப்பை நிறுத்தி எமது இருப்பையும் அடையாளத்தையும் பாதுகாப்பதற்குக் காத்திரமான எந்த நடவடிக்கைகளையும் இந்திய அரசு எடுக்காமல் ஒருசில கூற்றுக்களைக் கூறிவிட்டு கைகட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றமை எமக்கு ஏமாற்றம் அளிக்கின்றது.

1987 இன் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் மூலமாக வந்த 13 ஆவது திருத்தத்தின் மூலம் கிடைத்த குறைந்தபட்ச அதிகாரம் கொண்ட மாகாண சபை அமைப்பை மையமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட வடக்கு-கிழக்கு இணைப்பு இன்று இல்லை. அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர், கிராம உத்தியோகத்தர் போன்றோர் இப்போது மாகாண அரசின் அதிகாரத்தின் கீழ் இல்லை. கல்வி, சுகாதாரத் துறைகள் சம்பந்தமாக மாகாண சபைக்கு தரப்பட்ட அதிகாரங்கள் மீளப் பெறப்பட்டுள்ளன. 13 ஆவது திருத்தத்தின் கீழ் தரப்பட்ட காணி, பொலிஸ் அதிகாரங்கள் அன்றிலிருந்து தரப்படவே இல்லை. அதேபோல 16 ஆம் திருத்தத்தின் மூலமாக கூறப்பட்டமொழி உரிமைத் தத்துவத்தின் கீழ் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழே ஆட்சி மொழி என்ற அரசியல் அமைப்பின் 22 ஆவது விதி கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. மத்தியில் இருந்து கடிதங்கள் பல தடவைகள் மாகாணத்திற்குத் தனிச்சிங்களத்திலேயே இன்றும் அனுப்பப்படுகின்றன. 99 வீத தமிழர் வாழும் பிரதேசங்களில் கூட தமிழைப் பெயர்ப்பலகைகளில் முதலாவதாக எழுதக்கூட முடியாதுள்ளது.

ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசாங்கம் 2015 ஆம் ஆண்டு கூட்டாக கொண்டு வந்த 30:1 தீர்மானத்தை இன்னமும் நிறைவேற்றாத நிலையில்,அதில் இருந்து இலங்கை வெளியேறுவதற்கான நடவடிக்கைகளை அது எடுத்துவரும் நிலையில், இந்தியாவின் ஆதரவினைத் தமக்கு அது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளும் ஒரு முயற்சியாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் அண்மைய விஜயம் அமைந்திருக்கலாம் என்ற சந்தேகங்களும் எம்மக்கள் மத்தியில் இருக்கின்றன.

ஆனால்,மனித உரிமைகள் சபையின் ஏனைய உறுப்பு நாடுகளுடன் சேர்ந்து மனித உரிமைகள் சபையின் ஊடாக இறுதி யுத்தம் தொடர்பில் இலங்கைக்கு இருக்கும் பொறுப்புக்கூறல் தொடர்பில் கடும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு இந்தியா முன்னின்று செயற்பட வேண்டும். வெறுமனே இலங்கையுடன் பேரம் பேசுவதற்கான ஒரு கருவியாக பொறுப்புக்கூறல் விடயத்தை இந்தியா பயன்படுத்தக் கூடாது. தமிழ் மக்களுக்கான நீதி, நிலையான தீர்வு என்பவற்றுக்கான ஒரு கருவியாகவே பொறுப்புக்கூறலை இந்தியா பயன்படுத்த வேண்டும். இதுவே இந்தியாவுக்கு பல வழிகளிலும் அனுகூலமாக அமையும்.

இந்தியா எது செய்தாலும் இலங்கை அரசாங்கங்கள் இந்தியாவிற்கு விசுவாசமாக இருக்கப் போவதில்லை என்பதை இந்தியா உணரவேண்டும். எவ்வளவு தான் இராணுவ பொருளாதார உதவிகளை வழங்கினாலும் இலங்கையின் சிங்கள அரசாங்கங்கள் இந்தியாவைத் தமிழர் சார்பான நாடாகவே பார்ப்பன. ஆகவே தமிழர் சார்பாக இந்தியா நடவடிக்கைகள் எடுப்பதை எவரும் பிழைகூற மாட்டார்கள். எவரும் பிழை கூற முடியாது. இந்தியா துணிந்து நீதியை நிலைநாட்டலாம். நிலையான தீர்வைக் கொண்டு வரலாம்.

அண்மையில் ஒரு அரச தலைவர் வருகின்றபோது கடைப்பிடிக்க வேண்டியசில இராஜதந்திர சம்பிரதாய வரைமுறைகளையே இந்தியா மகிந்த ராஜபக்ஷவுக்கு அளித்துள்ளது. இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. எனக்கு இந்தியா மீது மிகுந்த நம்பிக்கை உண்டு.

தற்போதைய இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்ஷங்கர் இலங்கை விடயத்தில் நீண்ட அனுபவமுடையவராகவும் சர்வதேச அரசியலில் மிகச்சிறந்த இராஜதந்திரியாகவும் இருக்கிறார். அவரது திறமை, சாணக்கியம், இராஜதந்திரம் ஆகியவற்றை தற்போதைய ஆட்சியாளர்கள் நன்கு உணர்வர். ஆகவே, இந்திய வெளியுறவு அமைச்சர் எமது பிரச்சினையைத் திறம்பட கையாள்வார் என்று நாம் நம்புகின்றோம்.

இந்தியாவின் பாதுகாப்பானது தென்கோடியில் இருக்கும் தமிழ் மக்களின் பாதுகாப்பிலேயே தங்கியுள்ளது என்பதை கடந்தகால பட்டறிவிலிருந்து இந்தியா உணர்ந்திருக்கும் என்று நம்புகின்றேன். அதற்கேற்ப திரைமறைவில் நகர்வுகளை மேற்கொள்வர் என்பது எனது எண்ணப்பாடாகும். ஆனால் அதற்காக நாம் விரும்பும் எல்லாம் எமக்குக் கிடைக்கும் என்பதல்ல இதன் அர்த்தம். "தட்டுங்கள் திறக்கப்படும்" என்பதற்கேற்ப நாம் திரும்பத்திரும்ப எமது நிலைப்பாடுகளை அவர்களிடத்தில் வலியுறுத்திக்கொண்டே இருக்கவேண்டும். எமது நிலைப்பாடுகளில் நாம் உறுதியாக இருக்கவேண்டும். என்றோ ஒரு நாள் எமக்கான கதவு திறக்கப்படும்.


ஆனால், தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட எமது தமிழ்த் தலைமைகளோ இந்தியாவிடம் கேள்விகேட்டு இந்தியாவின் தார்மீகப் பொறுப்பை வலியுறுத்தாமலும் தாம் பெற்றுக்கொண்ட சலுகைகள், சுகபோகங்களுக்காக இலங்கை அரசாங்கத்துக்கு எதிர்ப்புகள் காட்டாமலும் "விலாங்குமீன் பாம்புக்கு வாலையும் மீனுக்கு தலையையும் காட்டுவது போல" செயற்பட்டு வந்துள்ளார்கள். சலுகைகளுக்காக தமது மௌனத்தை இதுகாறும் இவர்கள் விலைபேசி விற்றுவிட்டார்களோ என்று எண்ணத் தோன்றுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மகிந்தானந்தவின் வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை ஜூன் மாதம் 22 ஆம் திகதி வரையில் ஒத்திவைக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

குறித்த வழக்கு நேற்று திங்கட்கிழமை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் ஹெட்டியாராச்சி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே குறித்த வழக்கை ஜூன் மாதம் 22 ஆம் திகதி வரையில் ஒத்திவைக்க நீதிபதி உத்தரவிட்டார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கீழ் இயங்குகின்ற ஸ்ரீலங்கா சுதந்திர தொழிலாளர் காங்கிரசின் தலைவராக இருந்தபோது, அந்த தொழிற்சங்கத்துக்கு சொந்தமான 39 இலட்சம் ரூபாய் நிதியை தவறாகப் பயன்படுத்திய நாடளுமன்ற உறுப்



பினர் மகிந்தானந்த அளுத்கமகே மீது குற்றம்சாட்டப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மகாசிவராத்திரியை முன்னிட்டு யாழிலிருந்து திருக்கேதீஸ்வரத்திற்கு பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

மகா சிவராத்திரியை முன்னிட்டு எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 5 மணி முதல் பயணிகளின் வருகைக்கேற்ப பருத்தித்துறை பேருந்து நிலையத்திலிருந்து திருக்கேதீஸ்வரத்துக்கு விசேட பேருந்துச் சேவைகள் நடைபெறும். இன்று 18 ஆம் திகதி தொடக்கம் ஆசனப் பதிவுகளை பருத்தித்துறை சாலையில் மேற்கொள்ளலாம் என சாலை முகாமையாளர் அறிவித்துள்ளார். (இ)

## உலகத் திருக்குறள் மாநாடு

(யாழ்ப்பாணம்)

சென்னை உலகத் தமிழா ராட்சி நிறுவனம், தமிழ்நாடு அரசு, மதுரை காமராசர் பல்கலைக்கழ கம், ஸ்ரீராம் சந்த்ர மிஷன்- இதய நிறைவு தியான அமைப்பு ஆகிய நிறுவனங்களுடன் தஞ்சாவூர் தமிழ்த்தாய் அறக்கட்டளை இணைந்து நடத்தும் உலகத் திருக்குறள் இரண்டாவது மாநாடு (2020) எதிர்வரும் 21 வெள்ளி, 22 சனி, 23 ஞாயிறு ஆகிய திகதிகளில் காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை யாழ்.பல்க லைக்கழக கைலாசபதி கலைய ரங்கில் நடைபெறவுள்ளது. (இ-5)

## செயற்பட்டு மகிழ்வோம் இன்று

(குப்பிழான்)

வயாவிளானில் இயங்கி வரும் யாழ்.ஒட்டகப்புலம் றோ.க. த.க. பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதா னத்தில் பாடசாலை அதிபர் து.இந்திரஜித் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் பிர தம விருந்தினராக வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன், சிறப்பு விருந்தி யினர்களாக வலிகாமம் வலய விசேட கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் செ.தினேஸ் குமார், தெல்லிப்பழைப் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தி யோகத்தர் திருமதி சுஜாந்தினி ரஜீவன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-18)



இரத்தின தீபம் அமைப்பு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் அண்மையில் நடத்திய எம்.ஜி. ஆரின் 103 ஆவது பிறந்த தின நிகழ்வில் பிரதம விருந்தினராக எஸ்.ரீ. ஆர்.பிலிம் ஸ்தாபகர் தங்க ராசா, சிறப்பு விருந்தினராக யாழ். மாநகர சபை உறுப்பினர் லயன் கலாநிதி -நா.தனேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நாச்சியம்மையார் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபா லன சபையின் புண்ணிய நாச்சி யம்மையார் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை 19 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி யளவில் நாவலர் ஆச்சிரம மண் டபத்தில் (யாழ்.நீராவியடி கல்லூரி வீதியில்) சைவ பரிபாலன சபைத் தலைவர் இ.வசந்தனேசன் தலை மையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணி ப்பாளர் சு.சுந்தரசிவம், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ச.முகுந்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## இராசிக் குறியீடுகளை பயன்படுத்தும் விதம்

மகர இராசியின் உருவம் முதலை யாகும். முதலை தன் இரைக்காக ஒரே இடத்தில் ஆடாமல் அசையாமல் காத்துக் கிடக்கும் குணமுடையவை. இதனால் மகர இராசிக்காரர்கள் உட்கார்ந்த இடத்திலேயே இருந்து கொண்டு தங்கள் காரியங்களை நடத்தி செல்வதில் வல்லவர்கள் எனக் கூறப்படுகிறது.

இவர்கள் எப்பொழுதும் தங்கள் காரி யத்திலேயே கண்ணாக இருப்பார்கள். முதலைகள் போல் பாசாங்கு காட்டுவ்தில் வல்லவர்கள். தன்னைச் சுற்றி நடப்ப வைகளை உன்னிப்பாக கவனிப்பார்கள் ஆனால் எதுவும் தெரியாதது போல் நடந்து கொள்வார்கள்.




வாய்ப்புகளுக்காக தவம் கிடப்பார்கள். கிடக்கின்ற வாய்ப்புகளை தவறாமல் பயன்படுத்திக் கொள்வார்கள். பொறுமை இவர்களுக்கு அதிகம்.

## வடமாகாணத்திலுள்ளபெண்களின் வளமான எதிர்காலத்துக்கு வழிஅமைத்துக் கொடுப்பேன்

### அமைச்சர் டக்ளஸ் உறுதி

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திலுள்ள பெண்கள் எதிர்நோக்கும் பிர ச்சினைகளுக்குத் தீர்வை முன் வைப்பதோடு அவர்களின் வள மான எதிர்காலத்துக்கு வழி அமைத்துக் கொடுப்பேன் என கடற்றொழில் நீரியல் வள அமை ச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரி வித்தார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத் தில் நேற்று இடம்பெற்ற கடற் றொழில், நீரியல் வள அமை ச்சும் இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்திச் சபையும் இணைந்து முன்னெ டுத்த "நீர்வள தொழில்சார்" மாதர் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்ட நிகழ் வில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பெண்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு முன் வைக்கப்படாமல் உள்ளது.

இந்நிலையில் கடற்றொழில் சார்ந்த கரையோர மீனவக் குடு ம்பங்களின் பெண்களின் வாழ் க்கையை விருத்தி செய்யப்பாடு படுவதோடு யுத்தத்தால் பாதிக் கப்பட்ட பெண்களின் வாழ்வாதா ரத்தையும் முன்னேற்ற நடவடி க்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கரையோர மீனவக் குடும் பங்களில் வாழும் பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்று வதற்கான தொழிற் பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்துவேன். இதற்காக அதி களவிலான நிதியை வட பகு திக்கு ஒதுக்கியதுடன் அதற்கான ஆரம்பகட்ட வேலைத் திட்டங் கள் உரிய அதிகாரிகளால் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.



கடலட்டை வளர்ப்பு, இறால் வளர்ப்பு, கருவாடு பதனிடல் போன்ற திட்டங்களை விரைவு படுத்துவதற்காக அரச காணிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள தோடு குளங்களில் நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர் களின் நன்மை கருதி மீன் குஞ்சுகளும் இறால் குஞ்சுகளும் விடப்பட்டுள்ளன.

எனவே, மக்கள் என் மீது நம்பிக்கை வைத்து பயணித்தால் மக்களுக்கான பயணத்தை வெற் றிப் பயணமாக மாற்றுவேன் என அமைச்சர் மேலும் தெரிவித் தார். (இ-10)

## இராசி பலன்

**மீனம்:** மற்றவர்கள் மத்தியில் உங் களின் மதிப்பும் மரியாதையும் உயரும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன் மையு ண்டு, ஆரோக்கியமான நாள்.

**மேடம்:** அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வீட்டை அழகாக வைத் திருப்பதில் ஆர்வம் காட் டுவீர்கள், வருமானம் திரு ப்தி தரும் வகையில் அமை யும், பயணங்கள் கைகூடும்.

**இடபம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், உடல்நலன் பற்றிய கவலை உருவாகி மறையும், பயணங் களால் மனச் சோர்வு ஏற்பட லாம், விரயங்கள் மேலோ ங்கும் நாள்,

**மிதுனம்:** நண்பர்கள் நம்பிக்கைக்கு ரியவர்களாக நடந்து கொள் வர், ஆசைப்பட்ட பொரு ளொன்றை வாங்கி மகிழ் வீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.

**கும்பம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், பொருளா தார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், எடுத்த காரியத் தில் முன்னேற்றம் காண்பீர் கள்.

**கடகம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், பல நாட்க ளாக செய்ய நினைத்த வேலை யொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், பொல்லாதவர் கள் உங்களை விட்டு வில காலம், ஆரோக்கியமான நாள்.

**மகரம்:** எடுத்த காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிரப லமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வாகன பழு துச் செலவுகள் குறையும், எண்ணங்கள் எளிதில் நிறை வேறும் நாள்.

இராசி பலன்
கிரகநிலை
சுக் | ராகு | சூரி, புத | சனி,செவ் குரு,கேது | சந்
சந்திராஷ்டமம்
கார்த்திகை

18.02.2020
மாசி 06,செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.34 மணிக்கு
தசமி முன்னிரவு 6.33 மணிவரை
கேட்டை முற்பகல் 9.17 மணிவரை
சுபநேரம்- 11.02-12.32 மணிவரை
இராகுகாலம்-3.32-5.02 மணிவரை
அமைதியாக வாழ எதையும் விட்டுக்கொடுக்கலாம்
வளவன்

**தனுசு:** சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முற்படுவீர்கள், சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர் கள், உடல் நலனில் கவனம் தேவை, திடீர் பயணத்தால் வழக்கமான பணிகளில் சுண க்கம் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** வருங்கால நலன் கருதி சேமி க்க முற்படுவீர்கள், நண்பர் களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழில் வளர்ச்சி கூடும் நாள், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும் வாய்ப்புண்டு.

**துலாம்:** நீண்ட நாளைய விருப்பம் ஒன்று நிறைவேறும் நாள், சகோதர வழியில் எதிர்பார் த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், தேகநலனில் அக்கறை செலுத்த வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**கன்னி:** இல்லத்தில் சுகங்களும் சந் தோசங்களும் அதிகரிக்கும் நாள், கடன் சுமை குறையும் நாள், கொள்கைப் பிடிப் போடு செயற்படுவீர்கள், விரதம், வழிபாடுகளில் நம் பிக்கைகூடும்.

## மணமகன் தேவை

1995 கத்தோலிக்கம்
படிப்பு: A/L (அழகுக்கலை டிப்ளோமா)
எதிர்பார்ப்பு:- வெளிநாடு

(C-9268)

தொடர்புக்கு: 077 266 5496

## கணனி திருத்தம்

**IPhone, Android Phone களும் திருத்தி கொடுக்கப்படும்.**
உங்கள் கணனிகள், Laptop பழுதடைந்து விட்டதா? உங்கள் வீடுகளுக்கும், அலுவலகங்களுக்கும் வந்து திருத்தித் தருகின்றோம். கணனிகள் விற்றல், வாங்குதல். பழைய கணனிகளும் வாங்கப்படும்.

தொடர்புகளுக்கு :
ALM Computer System - 077 243 8537

(C-9268)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி சாந்தகலா சர்வானந்தன்

"சாந்தமான பணியாற்ற சமாதான நீதவானாய் சர்வமெங்கும் பணிபுரிந்து சரித்திரத்தில் பெயர் பதித்து சகல சிறப்புடனும் நங்கையவள் வாழ்க! வாழிய!! வாழியவே!!!

கடந்த 13.02.2020 அன்று கிளிநொச்சி மாவட்ட நீதிபதி கௌரவ T.சரவணராஜா முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட திருமதி சாந்தகலா சர்வானந்தன் அவர்களின் பணி சிறப்புடன் தொடர பாராட்டி வாழ்த்துவோம்.

Best Wishes

கேஷனா கிருஸ்ணகுமார்,
கைதடி நுணாவில் சாவகச்சேரி.

(C-9269)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

## சேவை நலன் பாராட்டு



திரு.நாகலிங்கம் வேதநாயகன்

மதிப்புக்குரிய முன்னாள் யாழ்.மாவட்ட அரச அதிபர் திரு.நாகலிங்கம் வேதநாயகன் அவர்கள் யாழ்.மாவட்டத்திற்குரிய அர்ப்பணிப்பான சேவையினை பாகுபாடு இன்றி எமது மாவட்டத்திற்குரிய அபிவிருத்தியினை மிகவும் திறம்படவும் செய்திருந்தார். ஒவ்வொரு அமைச்சின் மூலமாகவும் மேலதிக நிதிகளையும் பெற்று அபிவிருத்தியினை செய்திருந்தார். மீள் குடியேற்றத்தினையும் வீட்டுத் திட்டத்தினையும் நலன்புரி முகாம் மக்களினை தமது சொந்த இடங்களில் கொண்டு சென்று குடியமர்த்தியமையும் உண்மையான தேவைப்பாட்டினை யார் கொண்டு சென்றாலும் அதனை நிறைவேற்றித் தருபவர். இதற்குத் துணையாக நின்ற மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சு.முரளிதரன் மற்றும் வடக்கு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி ஐயா அவர்களும் எமது மாவட்டத்தின் 60% அபிவிருத்தியை நல்லாட்சி அரசாங்கத்தின் ஊடாக நிறைவேற்றியுள்ளனர். இவர்களுக்கும் எமது சேவை நலன் பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றோம். முன்னாள் அரச அதிபர் திரு.நாகலிங்கம் வேதநாயகன் அவர்கள் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் மக்களுக்கான சேவையினை செய்ய வேண்டும் என்றும் சீரும் சிறப்புமாக நீடூழி காலம் வாழ நாம் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

வ.பிரபாகரன், பிரதேச உறுப்பினர்,
வலி.வடக்கு பிரதேசசபை. (ஐக்கிய தேசியக் கட்சி)

(2302)

## தவறிவிட்டது

கோண்டாவிலை வசிப்பிடமாகக் கொண்ட வ.உலகநாதன் என்பவருடைய விவசாய ஒய்வூதியப் புத்தகம் கோண்டாவில் சந்திக்கும் மூப்போ சந்திக்கும் இடையில் தவற விடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 077494 9934

(2296)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உடுத்துறை மருதங்கேணி வத்திராயன் கிராம அலுவலகத்திற்கு அருகாமையில் 10 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:—0755935814

(C-819)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய தேசகீர்த்தி கலாநிதி இராசையா குவேந்திரநாதன் அவர்களின் தன்னலங்கருதா மனிதாபிமான சேவையினை அடையாளம் கண்டு அதனை அங்கீகரித்து 28.12.2019 அன்று கனடா பாராளுமன்ற உறுப்பினர்

Best wishes

கௌரவ ஹரி ஆனந்தசங்கரி
Gary Anandasangaree
Member of Parliment
Scarborough - Roug Park

அவர்களால் வாழ்த்துப்பத்திரம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையை பாராட்டுவதோடு அவர்களின் சேவை மேன்மேலும் தொடர நாமும் அவர்களை மனதார வாழ்த்துகின்றோம்.

(2779)

உரிமையாளரும், ஊழியர்களும்
ஐங்கரன் களஞ்சியம்
6, பலாலி வீதி, திருநெல்வேலி.

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 2<br>கி.பா: 19 1/4 செவ் 12 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: B.sc, மேலதிக மாவட்ட பதிவாளர்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு, படித்த உத்தியோகம் பார்க்கும் பெண்<br>தொ.இ: B/10502 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 24 1/2 செவ் 2 இல்<br>உயரம்: 155cm<br>தகைமை/தொழில்: B.sc (M.L.T), Demo<br>எதிர்பார்ப்பு: உயர் தொழில் (Doctor, Engineer)<br>தொ.இ: G/10501 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 3<br>கி.பா: 48 செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை./தொழில்: M.B.B.S. Doctor<br>எதிர்பார்ப்பு: M.B.B.S. Doctor மட்டும்<br>தொ.இ: B/10503 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: 53<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்B.sc.IT. Software Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச உத்தியோகம்<br>தொ.இ: G/10504 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 1<br>கி.பா: 73 செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை./தொழில்: Cargills Plc (pvt)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/10505 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>கி.பா: 45 1/2 செவ் 3 இல்<br>தகைமை/தொழில்: B.Tech., Lab Technician<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/10507 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 3<br>கி.பா: செவ் 3 இல்<br>உயரம்: 155cm<br>தகைமை/தொழில்: தனியார் தொழில் (கென்றாக்ற் எடுத்து செய்பவர்)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/10506 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா: 37 செவ் 9 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: B.sc. ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: கல்வியில் உயர் தகைமை<br>தொ.இ: G/10513 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்க D பிரிவு வழங்கும்

# மாணவர்களுக்கு கல்வியை வழங்குவதில் ஆசிரியரின் புரிந்து கொள்ளல்கள்

# வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் செயன்முறை நிலைகளை ஒழுங்கமைத்தல்

(நேற்றைய தொடர்ச்சி...)


### ஆசிரியரின் ஊக்கமும் கற்பித்தலிலான ஆர்வமும்

ஆசிரியர் தான் கற்பிக்கும் விடயங்கள் தொடர்பான விருப்பையும் ஆர்வத்தையும் கொண்டிருத்தல் வேண்டும். ஆசிரியர் குறித்த ஒரு பாடத்தை பல வருடங்கள் கற்பித்துப் பெற்றுக்கொண்ட அனுபவத்தினூடாக மிகப் பொருத்தமான புதிய கற்பித்தல் அணுகுமுறைகளையும் உத்திகளையும் கண்டறிந்து பயன்படுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும். பயனுறுதியுடைய கற்றலை உறுதிப்படுத்துவதற்காக மாணவனது பல்வகைமைக்கு பொருத்தமான வகையில் ஊக்கல் நுட்பமுறைகளை ஆசிரியர் பயன்படுத்துதல் வேண்டும்.

### கற்பித்தலுக்கான பல்வேறு மாணவர் மைய முறைகளைக் கையாளல்

கற்றலில் விருப்பையும் ஆர்வத்தையும் பயனுறுதியையும் ஏற்படுத்துவதற்கு கற்றல் , கற்பித்தல் செயன் முறையின் போது ஆசிரியர் பல்வேறு கற்பித்தல் முறைகளைக் கையாளுதல் வேண்டும். அதிலும் மாணவர் மையமானது கற்பித்தல் முறைகளான செயற்றிட்டமுறை. கண்டறிதல் முறை. கலந்துரையாடல் முறை. பிரச்சினை தீர்த்தல் முறை போன்ற முறைகளைக் கையாளுதலில் ஆசிரியர் கவனம் செலுத்துதல் வேண்டும். எந்தவொரு பாடத்தைக் கற்பிக்கும் போதும் தெளிவான சிந்தனைக்கும் தெளிவான கருத்து வெளிப்பாட்டிற்கும் வழிகோலக் கூடியவாறான வசதிகளைக் ஆசிரியர் உருவாக்கிக் கொடுத்தல் வேண்டும். ஒவ்வொரு மாணவனதும் தேவைக்குப் பொருத்தமான வகையில் கற்றல், கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்துவதனால் ஓரளவு மற்றும் மீத்திறனுடைய மாணவர்கள் மட்டுமன்றி மெல்லக் கற்கும் மாணவர்களும் இதன்மூலம் பயனடைவர். பாடசாலைக் கொள்கை, கலைத்திட்டம், கற்பித்தல் பாணி போன்ற பல்வேறு காரணிகள் கல்வி அடைவில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

கற்றல் செயன்முறையில் அடங்கும் ஊக்கல், தெளிவுபடுத்திக் கொள்ளல், தூண்டல் ஆகிய மூன்று அம்சங்களையும் நிறைவு செய்து கொள்வதற்காக ஆசிரியர் இயன்றவரை பல்வேறு வகைப்பட்ட கட்புல - செவிப்புல சாதனங்களைப் பயன்படுத்த வேண்டியது அவசியமாகும். எட்காட்டேல். பர்டன் ஆகியோரின் கருத்துப்படி கட்புல - செவிப்புல சாதனங்கள் யாவும் கற்றலைத் தூண்டுவனவும் மீளவலியுறுத்துவனவுமான தொடர்பாடற் பொருள்களாகும். இதனை ஆசிரியர் பூரணமாகக் கருத்தில் கொண்டு கற்பிக்கும் போது மட்டும் தான் மாணவர்கள் பெறும் அனுபவங்கள் பயனுறுதியுடையனவாக அமையும். வகுப்பறையில் ஆசிரியரின் செயற்பாடுகள் மாணவர்களின் கல்வி அடைவை உயர்த்தவல்லன. பாடப்பரப்பில் ஆழமான விடயத்தைப் பிரயோகித்தல், விமர்சன ரீதியான எண்ணத்தை விருத்தி செய்தல். மாணவர்களின் உற்சாகத்தை மேம்படுத்தல், சிறிய குழுக்களாக்கித் தனிப்பட்ட கவனத்தைப் பயன்படுத்தல், மேலதிக வளங்களை மாணவர்களுக்கு வழங்குதல், ஆசிரியர்களுடன் கூடி வேலை செய்தல் என்பன கற்பித்தலுக்காக கையாளும் பல்வேறுபட்ட மாணவர் மைய முறைகளாகும்.



### மதிப்பிடும் நிலை

ஆசிரியரும் மாணவரும் தமது செயலடைவினால் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றத்தை அடைந்துள்ளனரா? இல்லையா? என்னும் பின்னூட்டலைப் பெறுவதே மதிப்பீட்டின் எதிர்பார்ப்பாகும். மாணவனை மதிப்பிடும் நிலையில் ஆசிரியர்கள் சில பணிகளை முறையாக மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தீர்மானிக்கப்பட்ட கற்பித்தல் நோக்கங்களின் பொருத்தப்பாட்டை மதிப்பிடல், குறித்த விடய உள்ளடக்கத்தை மீண்டும் கற்பிப்பதா? அல்லது தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதா? என்பதனைத் தீர்மனித்தல், கற்பித்தல் முறை மற்றும் கற்றல், கற்பித்தல் துணைச்சாதனங்களின் பொருத்தப்பாட்டை மதிப்பிடல், வழங்கப்பட்ட கற்றல், கற்பித்தல் அனுபவங்கள் எந்தளவுக்குப் பயனுறுதி உடையனவாக அமைந்தன என மதிப்பிடல் போன்ற அம்சங்கள் ஆசிரியரால் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

மாணவரது பெறுபேற்றினை மேம்படுத்தல் என்பது மாணவரது கற்றலின் தரத்தில் தங்கியுள்ளது. வகுப்பறைக் கணிப்பீட்டின் மூலமே மாணவரது கற்றலின் தரத்தை விருத்தி செய்ய முடியும். எனவே ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் கலைத்திட்டக் குறிக்கோள்கள் க்ற்றல், கற்பித்தல் செயன்முறை, கணிப்பீட்டு எதிர்பார்ப்புக்கள் தொடர்பாகத் தெளிவான விளக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

தமது வேலைகளைத் தாமே மதிப்பிடுவதில் மாணவர்கள் கொண்டுள்ள இயலுமையே கற்றலின் முக்கியமான அடிப்படையாகுமென கல்வியியலாளர்கள் கருதுகிறார்கள். ஆகவே மாணவர்களும் தமது கற்றலை மேம்படுத்துவதற்காக கலைத்திட்டத்தினதும் கணிப்பீடுகளினதும் எதிர்பார்புக்கள் தொடர்பான விளக்கத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

பாட உள்ளடக்க நியமங்களை மாணவர் அடைவதற்கு உதவும் விதத்தில் கற்றல், கற்பித்தல் செயன்முறையைத் திட்டமிட வேண்டுமாயின் மாணவரின் பல்வேறு தேவைகள் பற்றி ஆசிரியர் அறிந்திருப்பதுடன் அவற்றை நிறைவேற்றுதலும் அவசியமாகும். பரீட்சைகளில் மாணவரின் ஆற்றுகை பாட விடயங்கள் பற்றி அவர்கள் பெற்ற அறிவு, திறன் என்பவற்றை இனங்காண்பதற்கு பொருத்தமான திறவுகோலாக மதிப்பீடு/கணிப்பீடு அமையும். அத்துடன் மாணவர்களின் தேவைகள்ள நிறைவேற்றும் விதத்தில் கற்றல் , கற்பித்தல் செயன்முறையைத் தயாரிப்பதற்கும் இது உதவிபுரியும்.



ஆசிரியர் தமது மாணவரின் விடைகள் அல்லது ஆற்றுகைகள் சரியானவையா? பிழையானவையா? என்பதில் மட்டும் கவனம் செலுத்தி புள்ளிகளை வழங்குவாராயின் அவர் மாணவரின் அறிவு, திறன் என்பவற்றை விருத்தி செய்வதில் முழுமையாக உதவிபுரிபவர் அல்லர் எனலாம். ஆசிரியர் மாணவரின் ஆற்றுகை மட்டம் பற்றி மிக அவதானமாக ஆராய்ந்து அவர்களின் விசேட தேவைகளுக்குப் பொருந்தும் விதத்தில் அவர்களைக் குழுக்களாக்கி பொருத்தமான பின்னூட்டல்களை வழங்குவதன் மூலம் மாணவர்களின் கற்றலை மேம்படுத்துதல் வேண்டும்.

### முடிவுரை

இத்தீர்மானங்களுக்கு ஏற்ப ஆசிரியர் போதிப்பவராக அல்லாமல் அறிவை வழங்குபவராக அல்லாமல் கற்றலை மாணவனுக்கு எளிதாக்குபவராகச் செயற்படுவது முக்கியமானதாகும். ஆசிரியர் தனது கலைத்திட்ட அமுலாக்கல் செயன்முறையில் பிரதான அம்சமாக விளங்குகின்ற கற்பித்தல் செயன்முறையினுடைய திட்டமிடல் நிலை நடைமுறைப்படுத்தல் நிலை மற்றும் மதிப்பீட்டு நிலை ஆகிய ஒவ்வொன்றிலும் கணிசமான அளவு கவனத்தை செலுத்தி பொருத்தமான பணிகளை ஆற்ற வேண்டியது அவசியமாகும். மாணவர்களின் கல்வி அடைவில் "ஆசிரியரின் பண்பு" (Teacher quality) செல்வாக்குச் செலுத்துகின்றமை உறுதியானதாகும்.

தற்போது கல்வியானது மாணவர் மையமாக்கப்பட வேண்டும் எனும் அடிப்படையில் மாணவன் சுயமாகக்கற்றல் என்னும் எண்ணக்கரு முக்கியத்துவம் பெற்றுள்ளது. அதேபோன்று ஆசிரியரின் தலையாய கடமையாக விளங்குவது மாணவன் தனது சுய முயற்சியினூடாகக் கற்பதற்கான திறன்களை வழங்குவதாகும். போதிப்பவராக அல்லது அறிவை வழங்குபவராக இருந்த ஆசிரியர் தற்போது கற்றலை எளிதாக்குபவர் என்ற வகையில் கற்றல் சூழ்நிலையை மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் வசதியளிப்பவராகச் செயற்பட வேண்டியுள்ளது. இதுவே கற்பித்தல் செயன்முறையின் முக்கியமான ஆசிரியரின் நடவடிக்கை யாகவும் உள்ளது. கற்பித்தல் தொடர்பான பல்வேறு தத்துவக் கோட்பாடுகள், உளவியல் அடிப்படைகள் அனைத்தும் இதனையே வலியுறுத்துகின்றன. (முற்றும்)

ம.சத்தியகுமார்,
கல்வியியற்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

நகரமும் சூழலும் அழகாக இருக்க வேண்டும் என்ற செயற்றிட்டத்தின் கீழ் சங்கானை நகரை இளைஞர்களும் ஆர்வலர்களும் இணைந்து சுவரோவியங்கள் வரைந்து அழகுபடுத்தினர்.

# தமிழ் மக்களுக்காக உழைக்கும் அமைச்சர் டக்ளஸ் மத்தியின் சவால்களை மீறிச் சேவையாற்ற வல்லவர்

## ஆளுநர் சார்ள்ஸ் புகழாரம்



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்காக அயராது உழைத்துக் கொண்டிருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எவ்வித சவால்களையும் மீறிச் சேவையாற்ற வல்லவர் என வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் புகழாரம் சூட்டினார்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சும் இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அதிகார சபையும் நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இணைந்து நடத்திய நீர்வளத் தொழில்சார் மாதர் ஊக்குவிப்புத் திட்ட விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணம் பல்வேறு சவால்களை சந்தித்துவரும் நிலையில் தமிழ் மக்களுக்காக மத்தியின் சவால்களை முறியடித்து முன்னோக்கிச் செல்லும் அமைச்சராக டக்ளஸ் தேவானந்தாவைக் காண்கின்றேன்.

அதிகம் நீர்ப்பரப்பால் சூழப்பட்ட வடக்கு மாகாணத்தைப் பொருளாதார ரீதியில் முன்னேற்றுவதற்கும், கரையோர மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கும் அமைச்சர் பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறார்.

நான் கிழக்கு மாகாணத்தில் அரச அதிகாரியாகச் சேவையாற்றும் போது கடற்றொழிலில் ஈடுபடும் தேவைகள் குறித்து முன்னோக்கி நகரும் போது பல்வேறு நெருக்கடிகளையும் சவால்களையும் சந்தித்தேன்.

ஆனால் இன்று கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் தனதுஅமைச்சின் மூலம் அதிகளவிலான நிதியை வடக்குக்கு ஒதுக்கி, மக்களின் வறுமையை ஒழிக்க முயன்று வருகிறார். கடற்றொழில் மாதர் ஊக்குவிப்புத் திட்



டங்களை உருவாக்கி அத் திட்டங்களின் ஊடாக பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்லப்படுகிறார்.

எனவே அமைச்சின் குறித்த செயற்பாட்டிற்கு நானும் ஒரு பெண் என்ற ரீதியில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## தேர்தலில் களமிறங்குகிறார் முரளியின் சகோதரர்

(கொழும்பு)

இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனின் சகோதரர் முத்தையா பிரபாகரன் எதிர்வரும் பொதுத் தேர்தலில் களமிறங்கவுள்ளார்.

அவர் நுவரெலியா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தியே எதிர்வரும் தேர்தலில் போட்டியிடப் போவதாகவும் முத்தையா முரளிதரன் தெரிவித்தார்.

இதேவேளை தான் பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சி சார்பில் போட்டியிடப்போவதாக சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ள செய்தி உண்மைக்குப் புறம்பானது என்றும் முத்தையா முரளிதரன் இதன்போது தெரிவித்தார்.

புதிய அரசாங்கத்தால் தோட்ட தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்க முடியாமல் போயுள்ளமை வருத்தத்துக்குரியது என்றும் எனவே மலையக மக்களுக்காக தனது சகோதரர் இம்முறை தேர்தலில் போட்டியிடுவதாகவும் முத்தையா முரளிதரன் சுட்டிக்காட்டினார். (ஜ)

# இலங்கைக்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்

## பிரதி சீனத் தூதுவர் தெரிவிப்பு



(கொழும்பு)

கொரோனா வைரஸ் தாக்கத்திற்கு எதிரான நடவடிக்கையில் இலங்கையின் உதவிக்காக நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். சீன அரசாங்கம் இந்நோயைக் கட்டுப்படுத்த தன்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாக இலங்கைக்கான பிரதி சீனத் தூதுவர் வூ வைய் தெரிவித்தார்.

சீன மக்கள் இந்தச் சுகாதார நெருக்கடியிலிருந்து மீண்டு விரைவில் நலமடைய வேண்டி கொழும்பு-கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் விசேட திருப்பலி ஆராதனை ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இந்த திருப்பலி ஆராதனையில் இலங்கைக்கான பிரதி சீன தூதுவர் வூ வைய், வீதி, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

சீன மொழியில் முதல் வாசகம் மற்றும் மன்றாட்டு ஆகியன ஒப்புக்கொடுக்கப்பட்டமை இந்தத் திருப்பலி பூஜையின் சிறப்பம்சமாகும்.

திருப்பலி ஆராதனைகள் நிறைவடைந்ததையடுத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த இலங்கைக்கான சீனத் தூதுவர் வூ வைய் நாங்கள் அனைவரும் மனித இனத்தை சேர்ந்தவர்கள். அந்த வகையில், இன, மத, பேதங்களுக்கு அப்பால், எமக்கு உதவி கிடைத்துள்ளது. இலங்கையின் உதவிக்காக நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

சீன அரசாங்கம் இந்நோயை கட்டுப்படுத்த தன்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# றிசாத்தின் சகோதரனுக்கு நேற்றுப்பிணை



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனின் சகோதரனும் வடமாகாண சபை முன்னாள் உறுப்பினருமான றிப்கான் பதியுதீன் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் அவரை நேற்று திங்கட்கிழமை காலை முன்னிலைப்படுத்தியபோதே நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

போலி காணி உறுதிப்பத்திரங்களைக் கொண்டு மன்னாரில் காணிகளை அபகரித்த குற்றச்சாட்டில் றிப்கான் பதியுதீன் அண்மையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் நேற்று வரை வைக்கப்பட்டிருந்தார்.


இந்நிலையில் அவரது சட்டத்தரணி பிணை கோரிக்கையை முன்வைத்திருந்ததன் அடிப்படையில், நீதிமன்றம் அவரை பிணையில் விடுவித்தது.

இதேவேளை றிப்கான் பதியுதீன், முறைப்பாட்டாளர்களுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் தொலைபேசியூடாக அச்சுறுத்தல் விடுத்ததாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் மன்றில் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், இந்த விவகாரத்துடன் தொடர்புடைய தொலைபேசி உரையாடல் தொடர்பான அறிக்கையை பெற்று விசாரணைகளை முன்னெடுப்பதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் நீதிமன்றத்தில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 2 கோடி ரூபா பெறுமதியான தங்கக் கட்டிகள் பறிமுதல்

## கடத்தல்காரர்கள் ஏழு பேர் கைது



(இராமேஸ்வரம்)

இலங்கையில் இருந்து சர்வதேச கடல் எல்லை வழியாக இந்தியாவுக்கு கடத்தல் தங்கத்துடன் சென்ற இலங்யையைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டனர். அதேவேளை 4 தமிழக கடத்தல்கா்ரர்களிடம் மத்திய, மாநில உளவுத்துறை அதிகாரிகள் தீவிர விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

கடந்த சில நாட்களாக இலங்கையில் இருந்து தங்கம், இந்தியாவில் இருந்து போதைப் பொருட்கள் என அதிகளவில் கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இதனைத் தடுக்கும் விதமாக இந்திய இலங்கை சர்வதேச கடல் எல்லையில் பாதுகாப்பு பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து இராமேஸ்வரத்தையடுத்து உச்சிப்புளியில் அமைந்துள்ள இந்திய கடற்படையின் ஐஎன்எஸ் பருந்து விமானப் படை முகாமிற்கு சொந்தமான ரோந்து ஹெலிகொப்டர் நேற்று முன்தினம் காலை இந்திய - இலங்கை சர்வதேச கடல் எல்லையில் ரோந்து பணியில் ஈடுபட்டு கொண்டிருந்த போது இந்திய கடற்பரப்பில் சந்தேகத்திற்கு இடமான முறையில் இந்திய விசை படகுடன் நின்று கொண்டிருந்த இலங்கை படகை நோக்கி ஹெலிகொப்டர் தாழ்வாக சென்றதை கண்ட இந்திய படகு அங்கிருந்த தப்பி சென்றது. ஆனால் இலங்கை படகு அங்கிருந்து தப்ப முடியாமல் இந்தியக் கடற்படையிடம் சிக்கியது.

நடுக்கடலில் சிக்கியவர்களை இந்திய கடற்படை வீரர்கள் படகையும் அதில் இருந்த 3 பேரையும் தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரைக்கு செல்லும்படி தெரிவித்தனர்.

ஆனால் படகில் இருந்தவர்கள் இலங்கை கடல் பகுதிக்குள் செல்ல முயன்ற போது இந்திய கடற்படை வீரர்கள் ஹெலிகொப்டரை தாழ்வாக செலுத்தி படகையும் அதிலிருந்த மூவரையும் அரிச்சல்முனை கடல் பகுதிக்குக் கொண்டு சென்று விட்டனர்.

மேலும் கைது செய்யப்பட்ட மூவரும் மன்னார் பகுதியை சேர்ந்தர்கள் இவர்களிடம் உளவுத்துறை மற்றும் தமிழக கடலோர பொலிஸ் குழும அதிகாரிகள் நடத்திய விசாரணையில் இவர்கள் முன்னுக்கு பின் முரணாகப் பதில் அளித்ததால் சந்தேகம் அடைந்த அதிகாரிகள் நடுக்கடலில் இலங்கை படகுடன் இருந்த இராமேஸ்வரம் விசை ப்டகை பிடித்து அதில் இருந்தவர்களிடம் விசாரித்தனர்.

விசைப்படகில் இருந்த நான்கு பேரிடம் நடத்திய விசாரணையில் இலங்கையில் இருந்து தங்க கட்டிகளை கடத்தி வந்து எங்க ளிடம் கொடுக்கும்போது கடற்படை ஹெலிகொப்டர் வந்ததால் நாங்கள் விசை படகுடன் தப்பி சென்றதாக கூறினர்.

இலங்கையில் இருந்த 35 தங்ககட்டிகள் கட்டி ஒன்று சுமார் 100 கிராம் வீதம் மூன்றரை கிலோ தங்கம் தலைமன்னாரில் இருந்து கடத்தி வந்ததாகவும் கடற்படை கைது செய்ததால் தங்கத்தை படகில் மறைத்து வைத்திருப்பதாகவும் ஒப்புக்கொண்டனர்.

இதனையடுத்து இலங்கையை சேர்ந்த மூவரை அழைத்து சென்ற பொலிஸார் படகில் இரகசிய அறை அமைத்து அதில் பதுக்கி வைத்து இருந்த தங்கத்தை பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்தை இராமேஸ்வரம் சுங்கத்துறை அதிகாரிகளிடம் பொலிஸார் ஒப்படைத்தனர். பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்தின் பெறுமதி சுமார் 2 கோடி ரூபாய் என அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-100)

# சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் விசேட நடவடிக்கை

## வடக்கு ஆளுநர் அறிவிப்பு

(பனிக்கன்குளம் )

முல்லைத்தீவு முத்துஐயன் கட்டு பிரிவு நீர்ப்பாசன பொறியிய லாளர் பணிமனை திறப்பு விழா வில் கலந்துகொள்வதற்காக நேற்று முல்லைத்தீவு மாவட்டத்துக்கு விஜ யம் செய்த வடமாகாண ஆளுநர் நிகழ்வில் கலந்துகொண்ட விவ சாயிகளை சந்தித்து கலந்துரை யாடினார்.

மாவட்டத்தில் பரவலாக சட்ட விரோத மணல் அகழ்வு இடம்பெறு வதாகவும் அதனால் விவசாயிகள் பாதிக்கப்படுவதாகவும் தெரியப்படுத் தியிருந்தனர்.

மேலும் மன்னாங்கண்டல் கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள் பேராற்றில் இடம்பெறும் சட்டவி ரோத மணல் அகழ்வு தொடர்பில் தெரியப்படுத்தினர்.

இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட மேலதிக அரச அதிபருக்கு அறிவிக்குமாறு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர்க ளுக்கு ஆளுநர் தெரிவித்ததோடு இராணுவம், பொலிஸாருக்கும் உத்தரவிட்டார்.

இதனை தொடர்ந்து இந்த விட யம் தொடர்பில் ஆளுநரிடம் ஊடக வியலாளர்கள் கேள்வி எழுப்பிய போது அவர் கருத்து தெரிவிக்கை யில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் மண் அகழ்வு ஊடாக அவர்களின் இயற்கை வளங்கள் பாதிக்கப்ப டுவதாக முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பிலான இடங்களை முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபரை பார்வையிடும் படியும் எதிர்வரும் தினங்களில் பொலிஸ் உள்ளிட்ட இது சம்பந்தப்பட்ட அனை த்து திணைக்களங்களையும் அழை த்து வட மாகாணத்தில் நடைபெறு கின்ற சட்டவிரோமான மண் அக ழ்வு போன்றவற்றை தடுப்பதற்கு சகல முயற்சிகளையும் மேற்கொள் வோம் எனவும்பொதுமக்கள்மணல் அகழ்வு தொடர்பான முறைப்பாடு களை ஆளுநர்செயலகத்திற்கு அனு ப்பி வைக்குமாறும்எதிர்வரும் வாரத் தில் இது தொடர்பான முழுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.(9-281)




## யாழ்.பல்கலை. வவு.வளாகத்தில் அம்மாச்சி உணவகம் திறந்து வைப்பு



(நெளுக்குளம்)

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் பாரம்பரிய உணவ கமான அம்மாச்சி உணவகம் நேற்றுக் காலை திறந்து வைக்கப் பட்டது.

பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் சகிலா பாணு தலை மையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முத ன்மை விருந்தினராக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பி னர் காதர் மஸ்தான் உணவக த்தை திறந்து வைத்தார்.

சுமார் ஐந்து மில்லியன் செல வில் அமைக்கப்பட்டுள்ள குறித்த உணவகத்தால், பல்கலையில் கல்வி பயிலும் 1500 ற்கும் மேற் பட்ட மாணவர்களும்அதனை அண் டிய கிராமங்களை சேர்ந்த பொது மக்களும் பயனடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த அம்மாச்சி உணவகம் வவுனியா வளாகத்தினுள் அமைக் கப்பட்டிருந்தாலும் வீதிப்பயணிகள் மற்றும் அயல் கிராமத்தவர்கள் எவ் வேளையிலும் பயன்படுத்த முடி யும் என வவுனியா வளாக முதல் வர் கலாநிதி ரி.மங்களேஸ்வரன் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் மாகாணசபை உறுப்பி னர் ஜி.ரி.லிங்கநாதன், அரச அதி பர் சமன் பந்துலசேன, வளாகத் தின் முதல்வர் ரி.மங்களேஸ் வரன், ஒருங்கிணைப்புகுழு தலை வரின் இணைப்பாளர் க. கணே சலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர். (9-299)




**கிளிநொச்சி மருதநகரில் அமைந்துள்ள எஸ். வீ. முருகேசு முன்பள்ளிக்கான புதிய கட்டடம் கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. தேசிய கொள்கைகள் பொருளாதார அமைச்சின் நிதியொதுக்கீட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட முன்பள்ளிக் கட்டடம் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், எஸ்.வீ. முருகேசு வின் மகனும் தொழிலதிபருமான குணரட்னம் ஆகியோர் இணை ந்து திறந்து வைத்தனர். (படம்:கண்டாவளை செய்தியாளர்)**

## நிலக்கடலை செய்கை வெற்றி

(அக்கராயன்)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவின் கீழு ள்ள திக்காய் குளத்தின் கீழ் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நிலக் கடலைச் செய்கை வெற்றியளித்து இருப்பதாக கிளிநொச்சி பிரதி விவ சாயப் பணிப்பாளர் எஸ்.அற்புதச்சந்திரன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி மாவட்டத்தின் பிரமந்தனாறு, கனகாம்பிகைக்குளம், வன்னேரிக்குளம், கண்ணகைபுரம் ஆகிய இடங்களில் நடைபெற்ற உப உணவுப் பயிர்ச் செய்கை மற்றும் சிறுபோக நெற்செய்கைக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உப உணவுப் பயிர்ச் செய்கையினை விவசாயிகள் கூடுதலாக முன்னெடுக்க வேண்டும். நீர் கூட அதிகமாகப் பயன்படுத்தாமல் வரட்சியான காலங்களில் குறைந்தளவிலான நீரினைப் பயன்படுத்தி உப உணவுப் பயிர்ச் செய்கையினை முன்னெடுக்கலாம். கடந்தாண்டு கூட திக்காய் குளத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட நிலக்கடலைச் செய்கை வெற்றியளித்து இருக்கின்றது. இது போன்று உப உணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகள் கூடுதலாக நிலக்கடலைச் செய்கையினை முதன்மைப்படுத்தலாம் என மேலும் தெரிவித்தார். (9-350)

## துவிச்சக்கரவண்டிகள் வழங்கல்



(நெளுக்குளம்)

வவுனியா சிதம்பரபுரம் நாக ராஜா வித்தியாலயத்தில் கல்வி பயி லும் 18 மாணவர்களிற்கு சுவிஸ் தமிழ் கல்விச் சேவையின் ஊடாக துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

குறித்த உதவித்திட்டத்திற்கான ஒழுங்கமைப்பு வவுனியா நகர சபை யின் உறுப்பினரும் பாடசாலை யின் ஆசிரியருமான சுந்தரலிங் கம் காண்டீபன் ஏற்பாடு செய்திருந் தார்.

பாடசாலையின் அதிபர் இ.தமி ழழகன் தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தி னராக வவுனியா தெற்கு கல்வி வலய விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் இ.மாதவன் கலந்து கொண்டு துவிச்சக்கரவண்டி களை வழங்கிவைத்தார்.

நிகழ்வில் தமிழ் கல்வி சேவை யின் இணைப்பாளர் புஸ்பலதா, பிரதி அதிபர் ம.ஜெயபிரகாஷ், மாண வர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர். (9-299)

# நீர்ப்பாசன பொறியியலாளர் பணிமனை முத்துஐயன்கட்டு பிரிவு அலுவலகம் வடக்கு ஆளுநரால் திறந்து வைப்பு






(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்துஐயன்கட்டு பிரிவுக்கான நீர்ப் பாசன பொறியியலாளர் பணி மனை அலுவலக கட்டடம் நேற்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எச். எம். சாள்ஸினால் திறந்து வைக் கப்பட்டது.

முத்துஐயன்கட்டு நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவானது 3 பாரிய மற்றும் 5 நடுத்தர குளங்க ளில் 13645 ஏக்கர் விவசாய நிலப் பரப்புகளையும் 4514 பயனாளி களையும் கொண்டு விவசாயத்தி ற்கும் மக்களுக்கும் சேவையாற்றி வருகின்றது.

இந்த திணைக்களம் பல்வேறு தேவைப்பாடுகளுடன் இயங்கி வந்த நிலையில் 2018 ஆம் ஆண்டு பிரமாண அடிப்படையிலான மூல தன நன்கொடை நிதியின் கீழ் 15 மில்லியன் ஒதுக்கீட்டில் நிரந்தர கட்டடம் நிர்மாணிக்கும் பணி ஆரம்பித்து வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் இரண்டாம் கட்டமாக பணிகளை மேற்கொள்வதற்கான 2019ஆம் ஆண்டு பிரமாண அடிப்படையி லான மூலதன நன்கொடை நிதி யின் கீழ் ரூ 5.3 மில்லியன் ஒதுக் கீட்டில் மேற்கொள்ளப்பட்டு குறித்த கட்டடம் நேற்று திறந்து வைக்கப் பட்டுள்ளது.

நீர்ப்பாசன திணைக்களத்தின் முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப் பாசனப் பணிப்பாளர் பொறியியலா ளர் ந.சுதாகரன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் வடமாகாண ஆளுநர் பி.எச்.எம்.சாள்ஸ், வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்தி நாதன், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் த.அகிலன்,இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், நீர்ப்பாசன திணைக்கள அதிகாரி கள்,விவசாய அமைப்பின் பிரதி நிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

குறித்த அலுவலகத்திற்கான பணிநிலை அணியினர் 60 ஆக காணப்படுகின்ற போதிலும் தற் போது 42 உத்தியோகத்தர்களே பணியாற்றி வருகின்றனர். இந்த நீர்ப்பாசன பொறியியலாளர் அலு வலகம் மற்றும் இதனுடன் இணை ந்த விடுதிகள் உட்பட 20 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட காணியில் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் சிறப்பாக இயங்கி வந் தது. எனினும் யுத்தகாலத்தின் பின் னர் அலுவலகம் இடம்பெயர்ந்து பல இடங்களில் இயங்கி வந்தது.

நீர்ப்பாசன பொறியியலாளர் பணிமனையின் சுமார் 20 ஏக்கர் காணி ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இராணுவத்தினரின் 64 படை பிரிவினரால் அபகரிக்கப்பட்டு 64 ஆவது படைப்பிரிவின் கட்டளை தலைமையகம் அமைக்கப்பட் டுள்ள நிலையில் குறித்த காணி யில் கட்டடங்கள் அமைக்க முடி யாத நிலையில் காணப்பட்டது.

நீண்டகாலமாக தனக்கென நிரந்தர கட்டடம் இல்லாது பல நெருக்கடிகளுக்கு மத்தியில் இய ங்கி வந்த நிலையில் காணி இரா ணுவத்தினரால் விடுவிக்கப்படாத நிலையில் வருகை தந்த நிதி திரு ம்பிச் செல்லக்கூடாது என்ற அடிப் படையில் குறித்த நிதியை கொண்டு குறித்த கட்டடம் நீர்ப்பாசனத் திணைக்களத்தினூடாக மாற்றுக் காணியில் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (9-281)

# தமிழ் மக்களின் உரிமைகளை அடைமானம் வைக்கமாட்டோம்

## செல்வம் எம்.பி.தெரிவிப்பு



(நெளுக்குளம்)

தமிழீழ விடுதலை இயக்கமோ அல்லது தமிழ்த்தேசிய கூட்டமைப்போ எமது மக்களின் உரிமைகளை யாருக்கும் அடைமானம் வைக்காது என்பதை நான் உறுதியாகக் கூறுகிறேன் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ரெலோவின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், எமது தலைவர்களது தியாகம், மக்களது விடுதலை என்ற இலட்சிய நோக்கத்தோடு இருந்தது. அரசாங்கத்தை அரவணைத்துப் போகும் சிந்தனையில் அவர்கள் இருக்கவில்லை. இன்று எமது கட்சி வலுவாக இருக்கிறதென்றால் அவர்கள் அன்று இட்ட அத்திபாரமே காரணம்.

எமது இயக்கத்தின் செயற்பாடு தொடர்ந்து வந்த அரசாங்கங்களுக்கு எதிராகவே இருந்தது. அன்று மகிந்த அரசாங்கம் எமது நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறவுகளை பணயக் கைதிகளாக வைத்து வரவு-செலவுத் திட்டத்தை ஆதரிக்க வேண்டும் என்று சொன்ன போது கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இடமளிக்கவில்லை. எதிர்த்து வாக்களித்தார்கள் அதுதான் கூட்டமைப்பு இன்றும் மக்களின் பலமான சக்தியாக இருப்பதற்குக் காரணம்.

கூட்டமைப்பை உருவாக்கியதிலே எமது பங்கு கூடுதலாக இருந்தது. கிழக்கில் சிவராம் மற்றும் பத்திரிகையாளர்கள் அந்த முயற்சியை எடுத்த போது கூடுதலாக நான் அவர்களோடு இருந்தவன். விடுதலை புலிகளின் ஆசீர்வாதத்தோடு கூட்டமைப்பு உருவாகிய பின்பு அது விடுதலை புலிகளின் அரசியல் அமைப்பாக செயற்பட்ட வரலாற்றையும் இங்கு கூற வேண்டும். இன்று கூட்டமைப்பை திட்டித்தீர்ப்பவர்கள் புதிதாகமுளைத்தவர்கள். எங்களோடு இருந்து போன அவர்கள் இன்று எள்ளிநகையாடுகின்றனர். நாம் அதற்கு பதில் சொல்லத் தேவையில்லை. இனப்பிரச்சினை தீர்வுக்காக பல விட்டுக் கொடுப்புகளை செய்தோம். நாம் அடிவருடிகாளக அரசாங்கத்துடன் என்றும் செயற்படவில்லை.

புதிய ஜனாதிபதி சிங்கள வாக்குகளால் வெற்றி பெற்றதாக பெருமை பேசுகிறார். ஒரு தேசிய இனம் கொழும்பிலே நிர்ணயிக்க கூடிய சக்தியாக இருக்கக்கூடாது என்று சிங்கள மக்களிடம் பிரச்சாரம் மேற்கொண்டார்கள். நாம் இனவாதிகள் அல்ல என்ற நோக்கத்தோடு பெரும்பான்மை இனத்தை சார்ந்தவருக்கு வாக்களித்தோம். எமது நல்ல சமிக்ஞையை ஏற்றுக் கொள்ள ஜனாதிபதி தயாரில்லை. அதன் பின்னணியே வட கிழக்கி லுள்ள சோதனைச் சாவடிகள். இந்த சோதனைச் சாவடிகளை நிறுத்த முடியாத முதுகெலும் பில்லாதவர்களாக சில தமிழர்கள் அரசாங்கத்துடன் இருக்கிறார்கள்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அல்லது தமிழீழ விடுதலை இயக்கம் எங்களது மக்களின் உரிமைகளை யாருக்கும் அடைமானம் வைக்காது என்பதை நான் உறுதியாகக் கூறுகிறேன். இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவை அமெரிக்கா திருப்பி அனுப்புகின்றமை எமக்கான காலம் கனிந்திருப்பதற்கான ஒரு செய்தி. இது ஆரம்பம். எமது இனப்பிரச்சினைக்கான தீர்வினைப் பெற்றுத்தருவதற்கான வாய்ப்புகள் இப்பொழுது கிடைத்திருக்கின்றன. அதற்காக எமது இயக்கம் மற்றும் கூட்டமைப்பு என்ன விலை என்றாலும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என மேலும் தெரிவித்தார். (9-250-299)

# கைகொடுக்கும் நண்பர்கள் அமைப்பின் கருத்தமர்வு



(குருமன்காடு)

வடக்கில் யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் தற்கொலைகள் அதிகரித்து வரும் நிலையில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும் தற்கொலைகளை தடுக்கும் முயற்சியுடனும் "கை கொடுக்கும் நண்பர்கள்" எனும் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மன அழுத்தம் காரணமாக தற்கொலை முடிவு எடுப்பவர்களைப் காப்பாற்றும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இவ் அமைப்பானது மன அழுத்தத்தில் உள்ளவர்கள் தனிமையில் பிழையான முடிவுகளை எடுக்காமலிருப்பதற்காக எவ்வித ஊதியமும் இன்றி அவர்களுக்காக சேவையாற்ற தயாராகவுள்ள கைகொடுக்கும் நண்பர்கள் அமைப்பின் வவுனியா மாவட்ட தொண்டர்களுக்கான பயிற்சிப் பாசறை வவுனியா குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள ஆலய மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது.

இதன்போது தற்கொலைகள் ஏன் இடம் பெறுகின்றன, அதற்கான தீர்வினை எவ்வாறு வழங்குவது, அவர்களுடன் எவ்வாறு அணுகுவது தொடர்பாக சமூக ஆர்வலர் நித்தியானந்தன் வளவாளராகக் கலந்து கொண்டு விளக்கமளித்தார். (9-250)

# அறநெறி பாடசாலை திறப்பு



(அக்கராயன்)

கிளநொச்சி அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பில் அறநெறி பாடசாலை ஆரம்ப விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. கிளிநொச்சி திருநெறிக் கழக செயலாளர் அ.சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக ஸ்கந்தபுரம் முருகன் ஆலய முன்னாள் தலைவர் வே.அம்பலவாணர் கலந்து கொண்டார். அக்கராயன் சமூக ஆர்வலர் வீ.சிவகுமார், அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.சா.துஸ்யந்தன், ஆசிரியை திருமதி. கு.கனகலிங்கம் ஆகியோர் கலந்து கொண் டதுடன் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. அக்கராயன் கிராம உத்தியோகத்தர் ப.சபாரட்ணத்தின் ஏற்பாட்டில் இவ் அறநெறிப் பாடசாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது. (9-350)

# நீதிமன்ற அறிவித்தல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் வழக்கு இலக்கம்-AR/1095/18 வழக்குடன் தொடர்புடைய சான்றுப் பொருட்களான NP JT 2005 Hero Honda ,EP GN 7883 Hero Honda இலக்க மோட்டார் சைக்கிள்கள் வனப் பரிபாலன திணைக்களத்தின் கிளிநொச்சி வட்டார வன அதிகாரியினால் பாரப்படுத்தப்பட்டுள்ளன.

இதனை உரிமை கோருபவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் அலுவலக நாட்களில் 19.03.2020 ஆம் திகதிக்கு முன்னர் மன்றுக்கு சென்று நீதிமன்ற பதிவாளரை தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (9)

# வன்னித் தமிழ் மக்கள் ஒன்றியத்தின் தலைமை செயலக திறப்பு விழா





(முறிகண்டி)

வன்னித் தமிழ் மக்கள் ஒன்றியத்தின் தலைமைச் செயலகம் நேற்று முன்தினம் கிளிநொச்சி பாரதிபுரத்தில் திறந்து வைக்கப்பட்டது. குறித்த ஒன்றியத்தின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.யோகேஸ்வரன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் இணைந்து அலுவலகத்தினை திறந்து வைத்தனர்.

மறைந்த முன்னாள் பாரதிபுரம் மதலயாளபுரம் அமரர். மாணிக்கம் கணபதியின் நினைவாக அவரின் மகன் கணபதி ஸ்ரீதரனின் வழிபாட்டலில் தமிழ் மக்களுக்குத் தேவையான அபிவிருத்தி மற்றும் அரசியல் பணிகளை கிராம மற்றும் மாவட்ட மட்டங்களிலிருந்து முன்னெடுக்க, இளையோர் சமூகத்தை ஒன்றிணைக்கும் முயற்சியில் இந்த ஒன்றியம் ஆரம்பிக்கப்ப ட்டதாக ஊடக பேச்சாளர் தெரிவித்தார். (9-100)

# முல்லை-பரந்தன் வீதியில் விபத்து மாடு பலி; பெண் படுகாயம்!

(முரசுமோட்டை)

முல்லைத்தீவு - பரந்தன் வீதியில் 1 ஆம் கட்டைப் பகுதியில் நேற்று இரண்டு விபத்து சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. முல்லைத்தீவு - பரந்தன் வீதியூடாக நேற்று அதிகாலை வந்த டிப்பர் ரக வாகனம் வீதியில் குறுக்காகச் சென்ற மாட்டின் மீது மோதியதால் அவ்விடத்திலேயே மாடு உயிரிழந்துந்துள்ளது. இந்த மாடு இறந்த காட்சியைப் பார்த்த வண்ணம் மோட்டார் சைக்கிளில் வந்த பெண் ஒருவர் முன்னே சென்ற ஆட்டோ மீது மோதியதால் விபத்து இடம் பெற்று காலில் படுகாயம் ஏற்பட்டுள்ளது. குறித்த பெண் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (9-318)

# முல்லை.பாடசாலைகளில் விடுதிகள் இல்லாததால் ஆசிரியர்கள் நெருக்கடியில்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பாடசாலைகளில் விடுதிகள் இல்லாததன் காரணமாக ஆசிரியர்கள் நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முல்லைத்தீவு கல்வி வலயம், துணுக்காய் கல்வி வலயத்தில் குறித்த விடுதி வசதிகள் தொடர்பாக அடிக்கடி கூட்டங்களில் தெரிவிக்கப்பட்டு வந் தாலும் ஆசிரிய விடுதிகள் இல்லாத நெருக்கடி தொடர்கின்றன. பிற மாவட்டங்களில் இருந்து முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வருகை தரும் ஆசிரியர்கள் பாடசாலைகளில் விடுதிகள் இல்லாததன் காரணமாக வெளியிடங்களில் தங்க வேண்டும். அல்லது மாலையில் தமது இருப்பிடங்களுக்கு திரும்ப வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

துணுக்காய் கல்வி வலயத்தில் மட்டும் பதினைந்திற்கு மேற்பட்ட பாடசாலைகளில் ஆசிரியர்கள் விடுதிகள் இல்லாத நிலைமை காணப்படுகின்றன.

ஆசிரியர்களுக்கான விடுதிகள் அமைப்பதன் மூலம் ஆசிரியர்கள் தங்கி நின்று மாணவர்களுக்கு கற்பிக்கக் கூடிய நிலைமை ஏற்படும். முல்லைத்தீவு கல்வி வலயத்திலும் புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று கல்விக் கோட்டங்களில் உள்ள பாடசாலைகளிலும் ஆசிரிய விடுதிகள் நெருக்கடி காணப்படுவதாக சுட்டிக் காட்டப்படுகிறது. (9-350)

# பாரதம்

# எவ்வளவு நெருக்கடிகள் வந்தாலும் குடியுரிமைத் திருத்தச் சட்டம் மாற்றப்படாது

## பிரதமர் மோடி திட்டவட்டம்


(டில்லி)

எவ்வளவு அழுத்தங்கள், நெருக்கடிகள் வந்தாலும் குடியுரிமைத் திருத்தச் சட்டம் மற்றும் ஜம்மு-காஷ்மீருக்கான 370 ஆவது பிரிவு சிறப்பு அந்தஸ்து இரத்து ஆகியவற்றைத் திரும்பப்பெறும் பேச்சுக்கே இடமில்லை என பிரதமர் மோடி திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

உத்தரப்பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்ட அவர், அங்கு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், "எவ்வளவு அழுத்தங்கள், நெருக்கடிகள் வந்தாலும், குடியுரிமைத் திருத்தச் சட்டம், ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கான சிறப்பு அந்தஸ்து வழங்கும் 370 பிரிவு இரத்து ஆகியவற்றைத் திரும்பப் பெறும் பேச்சுக்கே இடமில்லை.

நீண்டகாலமாக இந்த வரலாற்று முடிவுக்காக நாடு காத்திருந்தது. நாட்டின் நலனுக்காக இந்த முடிவுகள் மிகவும் அவசிய மானவை. அனைத்துத் தரப்பிலிருந்தும் அழுத்தங்கள் வந்தாலும் எங்கள் முடிவிலிருந்து பின்வாங்கமாட்டோம்.



சில முக்கிய முடிவுகளை இந்த அரசு எடுத்துள்ளது. அயோத்தியில் இராமர் கோயில் கட்டுவதற்காக அறக்கட்டளையை அரசு உருவாக்கியுள்ளது. இந்த அறக்கட்டளை இராமர் கோயில் கட்டும் பணியைத் தீவிரமாகவும் வேகமாகவும் செயற்படுத்தும்" என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-2)

# இந்தியா- பாகிஸ்தான் சமரசத்திற்கு உதவத் தயார் ஐ.நா. பொதுச்செயலரின் கருத்தை நிராகரித்த இந்தியா



(டில்லி)

காஷ்மீர் பிரச்சினையில் இந்தியா- பாகிஸ்தான் இடையே சமரசத்திற்கு உதவத் தயார் என்று ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டனியோ குற்றேரஸ் விடுத்த அழைப்பை இந்தியா நிராகரித்துள்ளது.

ஐ.நா.பொதுச்செயலாளர் அன்டனியோ குற்றேரஸ் நான்கு நாள் பயணமாக பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டார். அங்கு இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட அவர், இரு நாடுகளும் விரும்பும் பட்சத்தில் காஷ்மீர விடயத்தில் சமரச முயற்சிக்கு தயார் எனத் தெரிவித்தார்.

ஐ.நா.பொதுச்செயலாளரின் இந்தக் கருத்தை இந்தியா நிராகரித்துள்ளது. இது குறித்து டில்லியில் செய்தியாளர்களிடம் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரவீஷ்குமார், காஷ்மீர் விவகாரத்தில் மூன்றாம் நபர் சமரசத்தை ஏற்க முடியாது என்ற இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்று தெரிவித்தார்.

ஜம்மு காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாகவே இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். காஷ்மீர் பற்றி பேசும்போது பாகிஸ்தானால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் குறித்தும் சேர்த்து பேச வேண்டும் என்றும் ரவீஷ்குமார் தெரிவித் தார்.

எல்லை தாண்டி வரும் தீவிரவாதத்தால் ஜம்மு காஷ்மீர் உட்பட இந்தியாவுக்கே அதன் அடிப்படை உரிமைக்கே அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும் ஐ.நா. பொதுச் செயலாளர் அதன் மீது கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-2)

# பயங்கரவாதிகளின் கொடூரத் தாக்குதல்; அப்பாவி மக்கள் 30 பேர் உயிரிழப்பு

(அபுஜா)

நைஜீரியாவில் 2 கிராமங்களுக்குள் பயங்கரவாதிகள் ஒரே சமயத்தில் புகுந்து தாக்குதல் நடத்தினர். இதில் 30 பேர் கொன்று குவிக்கப்பட்டனர்.

நைஜீரியாவில் ஆதிக்கம் செலுத்தி வரும் போகோஹறாம் பயங்கரவாதிகள் அங்குள்ள கிராமங்களுக்குள் நள்ளிரவில் புகுந்து, கொடூர தாக்குதல் நடத்தி அப்பாவி மக்களை கொன்று குவிப்பதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

இதனால் அங்குள்ள பல்



வேறு கிராமங்களுக்கு இராணுவம் மற்றும் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டன. இந்நிலையில் நேற்று முன் தினம் அந்த நாட்டின் வடக்கு மாகாணமான காட்சினாவில் உள்ள 2 கிராமங்களுக்குள் பயங்கரவாதிகள் ஒரே சமயத்தில் புகுந்து தாக்குதல் நடத்தினர்.

சிறுவர்கள் மற்றும் முதியவர்களை குறிவைத்து பயங்கரவாதிகள் இந்த கொடூரத்தாக்குதலை நிகழ்த்தினர். இதில் 30 பேர் கொன்று குவிக்கப்பட்டனர். 2 கிராமங்களிலும் பொலிஸ் பாதுகாப்பை மீறி இந்த தாக்குதல் நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# கொ…

# உயிரி…

## 70 …

(பீஜிங்)

உலகை அச்சுறுத்தி வரு… தொற்றுக்கு இலக்காகி … அதிகரித்துள்ளது.

சீனாவின் ஹூபே மாகாணத்தில் மட்டும் கொவைட்-19 வைரஸ் காய்ச்சலுக்கு கடந்த 24 மணி நேரத்தில் 105

## கொரோனா …

# உலக பொருளாத… சர்வதேச நாண…

(பீஜிங்)

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக பாதிக்கப்படலாம் என சர்வதேச நாணய நிதியம் எச்சரித்துள்ளது.

வைரஸ் காரணமாக 0.1 முதல் 0.2 வரையான வீழ்ச்சியை எதிர்பார்க்கின்றோம் என சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜ்கிவா தெரிவித்தார்.

எவ்வளவு வேகமாக வைரஸினைக் கட்டுப்படுத்துகின்றோம் என்பதை பொறுத்தே தாக்கத்தின் அளவு காணப்படும் என அவர் தெரிவித்தார்.

முன்கூட்டிய முடிவுகளுக்கு வர

# மத்திய கிழக்கு … பாதுகாப்பைப் … எங்களின் உத…

## ஈரான் ஜனாதிப…

(டெஹ்ரான்)

மத்திய கிழக்குப் பகுதிகளில் பாதுகாப்பை அதிகப்படுத்துவதற்கு ஈரானின் உதவி அவசியம் என ஈரான் ஜனாதிபதி ஹசன் ரவுஹானி தெரிவித்தார்.

அமெரிக்கா மற்றும் ஈரானுக்கிடையில் பதற்றமான சூழ்நிலை நில

# ரோனா உச்சக் கட்டம்

# ரிழப்பு 1775 ஆக உயர்வு

## 0 ஆயிரத்து 548 பேர் பாதிப்பு

**த்தி வரும் கொவைட்-19 என அழைக்கப்படும் கொரோனா வைரஸ் க்காகி உயிரி ழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிர த்து 775 ஆக .**

பேர் உயிரிழந்தனர். இதனையடுத்து. கொவைட்-19 வைரஸ் பாதிப்பால் உயிரி ழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 775ஆக உயர்ந்துள்ளது.

இதுதவிர, கடந்த 24 மணி நேரத்தில் சீனா முழுவதும் கொவைட்-19 வைரஸ் கூடுதலாக 2,048 பேரைத் தொற்றியிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் கொவைட்-19 வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 70ஆயிரத்து 548 க்கும் அதிகமாக உயர்ந்துள் ளது.

எனினும் சீனாவில் 'கொவைட் -19' வைரஸால் (கொரோனா வைரஸ்) பாதிக்கப்பட்ட புதிய நோயாளிகளின் எண்ணிக்கை யைத் தொடர்ந்து 3ஆவது நாளா கக் குறைந்துள்ளதாக அந்த நாட்டு சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொரோனா வைரஸைக் கட் டுப் படுத்துவதற்காக அதிகாரிகள் மேற் கொண்டு வரும் நடவடி க்கைகள் பலனளிக்கத் தொட ங்கியுள்ள தையே இது காட்டுகிறது என்று அதிகாரிகள் தெரிவித்த னர். (ஜ-2)

### னா தாக்கத்தின் எதிரொலி

## ளாதார வளர்ச்சி பாதிக்கப்படும் நாணய நிதியம் எச்சரிக்கை

வேண்டாம் என நான் அனைவருக்கும் ஆலோசனை வழங்குகின்றேன் என குறிப்பிட்டுள்ள அவர் இன்னமும் பெரு மளவு நிச்சயமற்ற நிலை காணப்படு கின்றது. பலவகையான சூழல்களுக்கு மத்தியில் நாங்கள் செயற்பட்டுக்கொண்டி ருக்கின்றோம் என அவர் குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸினால் ஏற்பட்டு ள்ள தாக்கத்தினை தற்போது முழுமை யாக கணிப்பிட முடியாது. ஆனால் சுற்று லாத்துறை, போக்குவரத்துத் துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

இந்த வைரஸ் என்ன வகையானது என்பது இன்னமும் தெரியாததால் தற் போதைய நிலையில் எதனையும் தெரிவிக்க முடியாதுள்ளது என குறிப்பிட்டுள்ள அவர் சீனாவால் எவ்வளவு வேகமாக இந்த வைர ஸினை கட்டுப்படுத்த முடியும் என தெரிவிக்க முடியாது. உலகின் ஏனைய பகுதிகளுக்கு இது பர வுமா என்பதும் தெரியாது என அவர் தெரிவித்தார்.

வைரஸினை விரைவில் கட் டுப்படுத்த முடிந்தால் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படுவது குறை வடையும். அதேவேளை வேக மாக மீண்டும் சர்வதேச பொரு ளாதாரம் வளர்ச்சியடையும் என வும் அவர் தெரிவித்தார்.(ஜ-2)

## க்கு பகுதிகளில் பைப் பலப்படுத்த உதவி தேவை



### ாதிபதி பெருமிதம்

வும் நிலையில், அமெரிக்கா, ஈரானை பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளது.

இந்நிலையில் இதுகுறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரி விக்கையில்,


"பேச்சுவார்த்தைகளுக்காக அமெ ரிக்கா அளிக்கும் அழுத்தங்களுக்கு ஈரான் என்றும் அடிபணியாது. பலவீனமான நிலையில் நாங்கள் பேச்சுவார்த்தைகளை அணுக மாட்டோம்.

நம் மீதான அமெரிக்காவின் அழுத்தங்கள் தோல்வியில் உள் ளது. இது நமது எதிரிக்கு நன்கு தெரியும்.

மத்திய கிழக்குப் பகுதிக ளில் பாதுகாப்பை அதிகப்படுத்து வதற்கு ஈரானின் உதவி அவசி யம்" என அவர் மேலும் தெரி வித்தார். (ஜ-2)

## ஜெய்ஷ்-இ முகமது அமைப்பின் தலைவர் மசூத் அசாரைக் காணவில்லை

### பாகிஸ்தான் அறிவிப்பு



(இஸ்லாமாபாத்)

ஜெய்ஷ்-இ முகமது அமைப் பின் தலைவர் மசூத் அசாரையும் அவரது குடும்பத்தினரையும் காணவில்லை என சர்வதேச தீவிரவாத நிதித்தடுப்பு கண்கா ணிப்பு அமைப்பிடம் பாகிஸ் தான் அரசாங்கம் தெரிவித்தது.

சர்வதேச தீவிரவாத நிதித் தடுப்பு அமைப்பின் சார்பில் கடந்த ஒக்டோபரில் நடைபெற்ற கூட்டத் தில் பங்கேற்ற பாகிஸ்தான் அதி காரிகள் இந்த விடயத்தை தெரி வித்தனர்.

ஜம்மு காஷ்மீர், புல்வாமா வில் கடந்த வருடம் மத்திய துணை இராணுவப் படை (Central Reserve Police Force) வீரர்கள் மீது புல்வாமாவில் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குத லில் 40இற்கும் மேற்பட்ட வீரர் கள் கொல்லப்பட்டனர்.

இந்தத்தாக்குதலுக்கு பாகிஸ் தானில் செயற்படும் ஜெய்ஷ்-இ முகமது அமைப்பு பொறுப்பேற் றது. இதற்குப் பதிலடியாக பாகிஸ் தானில் பாலகோட் பகுதியில் செயற்பட்டுவரும் ஜெய்ஷ்-இ முக மது அமைப்பின் முகாம்களை இந்திய விமானப்படை குண்டு வீசி அழித்ததாகக் கூறப்பட்டது.

இந்தச் சூழலில், ஐ.நா.பாது காப்புச் சபை, ஜெய்ஷ்-இ முகமது அமைப்பின் தலைவர் மசூத் அசாரை சர்வதேச தீவிரவாதியாக கடந்த ஆண்டு மே முதலாம் திகதி அறிவித்தது.

இந்நிலையில் சர்வதேச தீவி ரவாத நிதித் தடுப்பு அமைப்பின் சார்பில் கடந்த ஒக்டோபரில் கூட் டம் இடம்பெற்றது. குறித்த கூட்டத் தில் பாகிஸ்தான் தரப்பில், தங்கள் நாட்டில் 16 சர்வதேச தீவிர வாதி கள் மட்டுமே இருந்ததாகவும் அவர்களில் 7 பேர் இறந்துவிட்ட தாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஏனைய 9 பேரில் லஷ்கர்-இ தொய்பா தலைவர் ஹபீஸ் சையத், அல்-கொய்தா அமைப்புக்கு நிதி உதவி வழங்கிய அப்துல் ரகு மான் உள்ளிட்ட 7 பேர் தங்களு க்கு விதிக்கப்பட்ட நிதி மற்றும் பய ணக் கட்டுப்பாடுகளில் இருந்து விலக்கு அளிக்கக்கோரி ஐ.நா. அமைப்பிடம் விண்ணப்பிக்க இருந்தனர் என பாகிஸ்தான் கூறியுள்ளது.

அத்துடன் ஜெய்ஷ்-இ முகமது அமைப்பின் தலைவர் மசூத் அசா ரையும் அவரது குடும்பத்தின ரையும் காணவில்லை எனத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தீவிரவாத தடு ப்பு நடவடிக்கை மேற்கொள்ளாத பாகிஸ்தானை அண்மையில் கறுப்புப் பட்டியலில் சேர்த்து சர்வ தேச பயங்கரவாத நிதித்தடுப்பு அமைப்பு நடவடிக்கை எடுத்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# ரணில் விலகினால் கட்சி வீழ்ச்சியடையும்

## வஜிர சுட்டிக்காட்டு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கட்சியில் இருந்து விலகினால் கட்சி வீழ்ச்சியடைந்துவிடும் என பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

காலி நெலுவ பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். கட்சித் தலைவர் என்ற ரீதியில் ரணில் விக்கிரமசிங்க எடுக்கும் தீர்மானங்களுக்கு தான் இணக்கம் தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.


தற்போது பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகவும் அதற்கு தீர்வு வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

யாரையும் கட்சியில் இருந்து விரட்டிவிட முடியாது எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஐ)

### தமிழர்களுக்கு கட்டாயம்

# பிரதேச சபையைக் கொடுக்க வேண்டும்

## அதாவுல்லா கோரிக்கை



(அம்பாறை)

தமிழர்களுக்கு கட்டாயம் பிரதேச சபையை கொடுக்க வேண்டும் எனவும், அதில் எந்த வித மாற்றுக் கருத்தும் இல்லை எனவும் முன்னாள் அமைச்சரும், தேசிய காங்கிரஸ் தலைவருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா தெரிவித்தார்.

அம்பாறை - அட்டாளைச்சேனை பகுதியில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் பிற்பகல் மாற்றுக்கட்சிகளை சேர்ந்த ஆதரவாளர்கள் உத்தியோகபூர்வமாக தேசிய காங்கிரஸில் இணையும் நிகழ்வு இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற விடயத்தையும், சாய்ந்தமருதுக்கு நகரசபை கிடைக்க வேண்டும் என்ற விடயத்தையும் தமிழ் சகோதரர்களும், முஸ்லிம் சகோதரர்களும், தமிழ் மற்றும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஏனைய சிங்கள அரசியல் பிரமுகர்களும் அலரிமாளிகையில் கூறியிருந்தோம்.

தமிழர்களுக்கு தேவையானது உள்ளூராட்சி சபை. அது ஏற்கனவே இருக்கிறது.

சாய்ந்த மருது விடயத்தில் அங்கு எல்லைப் பிரச்சினை இருக்கவில்லை. எல்லைப் பிரச்சினை இருப்பது 3 சபைகள் உள்ள இடத்தில் தான்.

இந்த மூன்று சபைகளுக்குமான எல்லைப் பிரச்சினைகள் தீர்க்கப்படும் போதும் 4 பிரதேச செயலகங்கள் உருவாகும் என்று அந்தக் கருத்தினை அங்கு எல்லோரும் ஏற்றுக்கொண்டனர்.

எனவே தமிழர்களுக்கு கட்டாயம் பிரதேசசபை கொடுக்க வேண்டும். அதில் எந்தவித மாற்றுக்கருத்தும் இல்லை என அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (ஐ)

# லயன் தொகுதியில் தீ!




(ஹற்றன்)

ஹற்றன், நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இன்ஜஸ்ட்ரி குரூப் பிலிங் போனி தோட்டத்தில் நேற்று முன்தினமிரவு ஏற்பட்ட தீ விபத்தில் 7 தொழிலாளர் குடியிருப்புகள் முற்றாக தீக்கிரையாகின. அதுமட்டுமன்றி குறித்த தீ விபத்து காரணமாக லயன் தொகுதியில் அமைந்திருந்த 7 வீடுகள் சேதமடைந்ததுடன் இந்த வீடுகளில் குடியிருந்த குடும்பங்களைச் சேர்ந்த 40 பேர் பாதிக்கப்பட்டனர். வீட்டில் இருந்தவர்கள் கூச்சலிட்டதை அடுத்து அயலவர்கள் ஓடி வந்து தீயை அணைக்க முற்பட்ட போதும் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை. அதனையடுத்து நோர்வூட் பொலிஸார் மற்றும் ஹற்றன் டிக்கோயா நகர சபையின் தீயணைப்பு பிரிவினர், பொது மக்கள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்ததுடன், சுமார் 3 மணித்தியாலயத்தின் பிறகு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. எனினும் சில வீடுகளில் இருந்த சில பொருட்களை மாத்திரம் அவர்களால் தீயிற்கு இரையாகாமல் வெளியில்கொண்டுவரமுடிந்தது. (ஐ)

# இன்று ஒரு தகவல்

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# ஆசையும் – சினமும்

''இந்த உலகத்திலே மனிதர்கள் எவ்வளவோ தவறுகள் செய்கிறார்கள். அதுக்கெல்லாம் என்ன காரணம்? அதனைப் பற்றிய ஆராய்ச்சிதான் இன்றைக்கு! "இதற்கு ஆராய்ச்சி எதற்கு? அது தெரிந்த விடயம் தானே...! அப்படி என்று நீங்கள் நினைக்கலாம்.

ஆனால் அப்படி அலட்சியமாக இந்த விடயத்தை விடக்கூடாது! பொதுவாக எல்லோரும் நினைக்கலாம். "எது சரி? எது தவறு? அப்படி என்று தெரியவில்லை என்றாலே மனிதன் தவறு செய்கிறான் என்று கூறலாம்! அப்படி சொல்லிவிட முடியாது! மனிதன் தெரிந்தேதான் தவறுகள் செய்கிறான்.

இப்போது உதாரணத்துக்கு ஒரு சாலையிலே இடது பக்கமாக செல்ல வேண்டிய ஒருத்தர் நடுக்கோட்டை தாண்டி வலது பக்கமாக வண்டியை ஓட்டிக் கொண்டு போகின்றார். என்னப்பா இது தப்பு இல்லையா? அப்படி என்று அவரிடம் கேட்டால். ''அதெல்லாம் எனக்குத் தெரியும்... நீ உன் வேலையை பார்த்துக்கிட்டு போ! '' என்கிறார்.

வலது பக்கமாக போவது தவறு என்று தெரிந்தே தான் அவர் அப்படி போகின்றார். பெரிய உத்தியோகத்திலே இருக்கிறவர்கள் கூட " லஞ்சம் " வாங்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் " லஞ்சம் " வாங்குவது தவறுஎன்று தெரியவில்லை என்றா அர்த்தம்? திருடுவது தவறுஎன்று தெரியாமலா மனிதன் திருடுகிறான்.

நல்லா தெரியும். நீங்க வேணும்னா கேட்டுப்பாருங்கள்! " வேறு வழியில்லை. அதனாலே திருடுகிறேன் " என்பான்! திருடுகிறது ஒரு புண்ணியமான காரியம் என்று திருடனே கூட சொல்ல மாட்டான்! "திருடுவது தவறு என்பது திருடனுக்குத் தெரியும் " என்பதை விளக்குவதற்காக ஒரு பெரியவர் ஒரு கதை சொன்னார்.

இரண்டு திருடர்கள். இரண்டு பேரும் சேர்ந்து ஒரு வீட்டுக்குப் போய் 10,000 ரூபாயை திருடிக்கொண்டு வந்துவிடுகின்றார்கள். ஒரு காட்டு வழியாக வந்து கொண்டிருக்கின்றார்கள்.

இன்னும் விடியவில்லை! இரண்டு பேருக்கும் தூக்கம் கண்ணை சுத்துது! " சரி... இப்படி ஒரு மரத்தடியிலே நித்திரை கொள்வோம்!" "காலையில் விடிந்ததும் இந்த பணத்தை இரண்டு பேரும் பங்கு போட்டுக் கொள்வோம்! '' அப்படி என்று முடிவு செய்கின்றார்கள்!

"அதே மாதிரி நித்திரை கொள்கின்றார்கள்!" நடு இரவில் ஒரு திருடன் முழித்துக் கொள்கின்றான். "விடியும் வரைக்கும் காத்துக் கொண்டிருந்தால்...5000 தான் கிடைக்கும்... இப்பவே கம்பி நீட்டினால் 10000 கிடைக்கும் யோசித்துப் பார்த்துவிட்டு " ஒரு முடிவுக்கு வருகின்றான்.

மெதுவாக அந்தப் 10000 ரூபாவையும் சுருட்டிக் கொண்டு ஓடிப் போய்விட்டான். "விடிகின்றது! அடுத்தவன் எழுந்திரிச்சிப் பார்க்கிறான்! பணத்தையும் காணவில்லை! பாகஸ்தனையும் காணவில்லை! இந்தத் திருடன் அந்தத் திருடனை திட்டுறான்!"

''திருட்டு பயல்! அயோக்கியப் பயல்! இப்படி அநியாயமா கிளப்பிக்கிட்டுப் போயிட்டானே! ''என்கிறான். இதிலே இருந்து என்ன தெரிகின்றது.? தெரியாமல் எடுத்துக் கொண்டு போறது திருட்டு அயோக்கியத்தனம். அநியாயம் அப்படி என்பதற்கு இவனுக்குத் தெரிஞ்சுதான் இருக்கு! அதனாலே தான் அடுத்தவனைப் பார்த்து இப்படி திட்டுறான். அதனாலே தெரியாததனாலே மனிதன் தவறு செய்கின்றான் என்று சொல்வது சரி இல்லை.

அப்படி என்றால் மனிதன் செய்யும் தவறுகளுக்கு உண்மையான காரணம் என்ன? இதே சந்தேகம் அர்ச்சுனனுக்கும் வந்தது. அதனாலே தான் அவன் பகவானைப் பார்த்துக் கேட்கின்றான். மனிதன் தன் விருப்பத்துக்கு விரோதமாக ஏதோ ஒரு சக்தியினாலே , பலாத்காரமாக இருக்கப்பட்டது மாதிரி, பாவம் செய்கிறானே... அந்த சக்தி என்ன? அப்படி என்று கேட்கிறான். பகவான் பதில் சொல்கிறார். " காமமும் குரோதமும் தான் அந்த சக்திகள். அதாவது ஆசையும் சினமும்! இது இரண்டும் உன்னுடைய எதிரிகள் என்பதை புரிந்து கொள்! "என்கின்றார்.

இன்னமும் நுணுக்கமாக பார்த்தால் காமத்தினுடைய மறு உருவங்கள் தான் குரோதமும்– லோபமும்! ஆசை நிறைவேறவில்லை என்றால் குரோதம்– அதாவது கோபம்! நிறை வேறி விட்டால் –லோபம் அதாவது பேராசை! பாவத்தை கட்டுப்படுத்த வேண்டும் என்றால் அதுக்கு மெயின் ஸ்விட்ச் எது என்று இப்பொழுது தான் தெரிகின்றது! அதற்கு மனிதன் தெரிந்தே தான் தவறு செய்கின்றான் என்று பேசிக் கொண்டோமே அதற்கு ஒரு உதாரணம்.

ஒரு ஆள் ஹோட்டலில் சாப்பிடப் போனான். சாப்பிட்டு முடித்தான். எழுந்து வந்து முதலாளியிடம் பில்லைக் கொடுத்தான். காசை கொடுக்கவில்லை! முதலாளி பணம் கொடு என்று கேட்டார். இவன் " என் கிட்ட பணம் இல்லை ! " என்றான். முதலாளி கொஞ்சம் கூட அலட்டிக்கவில்லை! உள்ளேயிருந்து ஒரு ஆளைக் கூப்பிட்டார். இவனைக் கூப்பிட்டுக் கொண்டு போய் இட்லிமாவு ஆட்டச் சொல்லு! என்றார். இவனும் கவலைப் படாமல் உள்ளே போனான்.

அப்பொழுது அழைத்துக் கொண்டு போகும் ஆள் கேட்டான்." ஏன் சார் .. சாப்பிடுவதற்கு முன்னாடி காசு இல்லை என்பது உங்களுக்குத் தெரியாதா? "என்றான். தெரியும் .. காசு இல்லை என்பதும் தெரியும்;! காசில்லாமல் சாப்பிட்டால் மாவாட்டனும் என்பதும் தெரியும்! என்றார் இவர். " அப்படியென்றால் நீங்கள் உங்கள் வீட்டிலேயே சாப்பிட்டிருக்கலாமே. "என்றான். அதுக்கு இவர் .. "அது எப்படி ? அங்கே சாப்பிட்டாலும் நான் இதே வேலையை செய்ய வேண்டியிருக்குமே!" என்றார்.

# சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்கா தடை; ஜனாதிபதி கருத்து வெளியிட வேண்டும்

## ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்து

(கொழும்பு)

தேசப்பற்றுக்காக உரத்துக் குரல் கொடுத்தவர்கள், படையினருக்காக கண்ணீர் சிந்தியவர்கள் என எவரும் இராணுவத் தளபதிக்கு அமெரிக்கா விதித்துள்ள தடை பற்றிப் பேசுவதில்லை என ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த ஸ்ரீ வர்ண சிங்க தெரிவித்தார்.

பத்தரமுல்லயிலுள்ள ஜாதிக ஹெல உறுமய அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக அமெரிக்கா விதித்துள்ள தடையை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இது நாட்டின் அபிமானத்திற்கு பெரிய கரும்புள்ளி. அரசாங்கம் இந்த விடயத்தில் வழங்கி வரும் பதில் குறித்து நாங்கள் திருப்தியடைய மாட்டோம்.

அமெரிக்கத் தூதுவரை அமைச்சரும் அமைச்சின் செயலாளரும் அமைச்சுக்கு வருமாறு



அழைத்து கலந்துரையாடியுள்ளனர்.

அது மாத்திரமே நடந்துள்ளது. ஈரான் இராணுவப் பிரதானி கொலை செய்யப்பட்ட போது, அந்நாட்டின் அனைத்து மக்களும் வீதியில் இறங்கி அமெரிக்காவுக்கு எதிராக பல நாட்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்தக் கொலையானது ஈரானின் பாதுகாப்புக்கு எதிராக மேற்கொண்ட தாக்குதலுக்கு இணையானது என்பதே இதற்குக் காரணம்.

அரசாங்கத்தில் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் பலர், அமெரிக்கக் குடியுரிமையை வைத்துள்ளனர். இவர்கள் நாட்டை உண்மையில் நேசிக்கின்றனர் என்றால், அமெரிக்காவுக்குப் பதில ளித்திருக்க வேண்டும்.

நாட்டின் ஜனாதிபதி இது சம்பந்தமாக கருத்து வெளியிட வேண்டும். அவர் இந்த நாட்டின் முன்னாள் இராணுவ அதிகாரி என்பது மாத்திரமல்ல, நீண்ட காலம் அமெரிக்கக் குடியுரிமையைப் பெற்றிருந்தவர்.

கடந்த காலத்தில் தேசப்பற்றுக்காக படையினருக்காக கண்ணீர் சிந்திய எவரும் இப்போது பேசுவதில்லை.

வசந்த பண்டார, குணதாச அமரசேகர, சரத் வீரசேகர, மாகல்கந்தே சுகந்த தேரர், பொதுபல சேனா போன்ற அமைப்பினர் ஏன் தற்போது பேசுவதில்லை.

உண்மையில் தேசப்பற்று இருக்குமாயின் தற்பொழுது இதற்காக குரல் கொடுங்கள். நாங்கள் எங்களது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம் என நிஷாந்த வர்ணசிங்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# 200 அடி பள்ளத்தில் பாய்ந்து ஆட்டோ விபத்து; மூவர் படுகாயம்



(தலவாக்கலை)

தலவாக்கலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் ஆட்டோ ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 200 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயங்களுக்குள்ளாகினர்.

தலவாக்கலை டீருப் தோட்டப் பகுதியிலிருந்து தலவாக்கலை நகரத்திற்கு சென்று கொண்டிருந்த குறித்த ஆட்டோ வண்டி நேற்று முன்தினம் இரவு தலவாக்கலை பிரதேசத்தில் வீதியை விட்டு விலகி இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

எதிரே வந்த வாகனம் ஒன்றுக்கு இடமளிக்கும் போதே இவ்விபத்து நேர்ந்துள்ளதாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் தெரிவித்தனர்.

ஆட்டோவில் சாரதி உட்பட மூவர் பயணித்துள்ளதாகவும், மூவரும் பலத்த காயங்களுக்குள்ளாகி நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-7)

# 10 பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்ட நபர் உள்நாட்டுத் துப்பாக்கியுடன் கைது

(தினியாவலை)

தினியாவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இஹலஹேவெஸ்ஸ பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை மேல் மாகாண புலனாய்வுப் பிரிவு மற்றும் மாவட்ட புலனாய்வுப் பிரிவினர்களுக்கு கிடைத்த தகவல்களின்படி தினியாவலை பொலிஸ் நிலையத்தின் உத்தியோகத்தர்களால் சோதனைகள் மேற்கொள்ளப்பட்ட போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் திறந்த 10 பிடியாணைகள் உள்ள சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 32 வயதுடைய ஆயுகல, இஹலஹேவெஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

சந்தேக நபர் மத்துகம நீதவான் நீதி மன்றில் முன்னிலைப்படுத்தப்பட வுள்ளார். மேலதிக விசாரணைகளை தினியாவலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# "சிறிகொத்தா மீது இடி விழுந்துள்ளது"

## தினேஷ் சீண்டல்

(கேகாலை)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றியால் ஐக்கிய தேசியக் கட்சியை வீட்டுக்கு அனுப்ப முடிந்துள்ளதென வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அக்கட்சியின் தலைமையகமான சிறிகொத்தா மீது இடி விழுந்துள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

கேகாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் ஐக்கிய முன்னணியின் மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் நாட்களில் ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களுக்குப் பக்கபலமாக அமையும் வகையிலான நாடாளுமன்றம் ஒன்று அவசியமெனவும் 19 ஆவது திருத்தம் காரணமாக



நாட்டு மக்கள் பல இழப்புக்களைச் சந்திக்க நேர்ந்துள்ளதாகவும் தெரிவித்தார். (இ-7)

# சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்கா பயணத்தடை ஆளும்தரப்பின் தேர்தல் பிரசாரத்திற்கு பயன்படும்

## ஹிருணிகா சுட்டிக்காட்டு; மைத்திரி மீது குற்றச்சாட்டு



(கொழும்பு)

இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் அமெரிக்காவுக்குள் பிரவேசிக்க விதிக்கப்பட்டுள்ள தடையை ஆளும் தரப்பினர் பொதுத்தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார்.

சிறந்த அரசாங்கத்தை உருவாக்க தனக்கு வாய்ப்பளிக்கவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் ஒருபோதும் குறிப்பிட முடியாது. நல்லாட்சியின் நோக்கத்தை இவரே இல்லாதொழித்தார் எனவும் அவர் குற்றம்சாட்டினார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக பொதுஜன பெரமுனவினர் ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தும் இன்று பொய்யாக்கப்பட்டுள்ளன. ஏப்ரல் 21 குண்டு த்தாக்குதலை முழுமையாக தங்களின் அரசியல் தேவைகளுக்காகப் பயன்படுத்திக் கொண்டார்கள். ஆட்சிக்கு வந்து ஒரு மாத காலத்தில் குண்டுத்தாக்குதல் குற்றவாளிகளைக் கைது செய்வதாகவும் குறிப்பிட்டார்கள். ஆனால் மூன்று மாத காலத்தில் எவரும் கைது செய்யப்படவில்லை.

மத்திய வங்கியின் பிணைமுறி கொடுக்கல்-வாங்கல்களையும் அரசியல் பிரசாரமாக்கினார்கள். தடயவியல் கணக்காய்வு அறிக்கையில் கடந்த அரசாங்கத்தில் பங்குச்சந்தையில் அதிகளவில் மோசடி இடம்பெற்றுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளமையால் இன்று பிணைமுறியை அரசியல் பிரசாரமாக்க ஆளும் தரப்பினர் விரும்பவில்லை.

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மற்றும் அவரது குடும்பத்தினர்கள் அமெரிக்காவிற்கு செல்ல விதிக்கப்பட்டுள்ள தடையை அரசாங்கம் இராஜதந்திரமட்டத்தில் மாத்திரம் திருத்திக்கொள்ள வேண்டும். பொதுத்தேர்தலில் இதனை ஆளும் தரப்பினர் முழுமையாகத் தங்களின் அரசியல் தேவைகளுக்காக பிரசாரமாக்கிக் கொள்வார்கள்.

சிறந்த அரசாங்கத்தைக் கட்டியெழுப்ப முடியாமைக்கு வாய்ப்பு வழங்கவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. அவரினாலேயே நல்லாட்சி அரசாங்கம் பலவீனமடைந்தது. தேவையற்ற விடயங்களுக்காக அரசாங்கத்துடன் முரண்பட்டுக் கொண்டார்.

அதனை எதிர்த் தரப்பினர் முழுமையாக பயன்படுத்திக் கொண்டு ஆட்சியை கைப்பற்றிக் கொண்டனர்.

மிக் விமானக் கொள்வனவு விவகாரத்தில் கைது செய்யப்பட்ட உதயங்க வீரதுங்க போயா நாட்டில் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டார். இன்னும் ஓரிரு நாட்களுக்குள் அவருக்குப் பிணை வழங்கப்படும். ஆட்சி மாற்றத்தின் மாற்றங்களை மக்கள் இனியாவது புரிந்துகொள்ள வேண்டும்.

அரசியல் ரீதியில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் முரண்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. வெகுவிரைவில் ஜனாதிபதி அரசியல் ரீதியில் தனிமைப்படுத்தப்படுவார். அவருடன் சஜித் பிரேமதாஸவினால் மாத்திரமே இணைந்து செயற்பட முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2020-13.03.2020



விகாரி வருடம் மாசி மாதக் கிரக நிலை களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசி நாதன் சுக்கிரன் உச்சம் பெற்றி ருக்கிறார். உங்கள் இராசிக்கு அஷ்ட மாதிபதியாக விளங்கும் சுக்கிரன், 6ஆம் இடத்தில் உச்சம் பெற்று விளங்கும் பொழுது, விபரீத இராஜயோக அடிப்படையில் பலன்கள் நடைபெறும். பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். தொழிலில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் இலாபம் கிடைக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும் இந்த நேரத்தில் இதைச் செய்வோமா, அதைச் செய்வோமா என்று குழப்பம் ஏற்படும். எதைச் செய்தாலும் எளிதில் செய்யக் கூடிய நேரம் இது.

தொட்டது துலங்கும். தொல்லைகள் அகலும். திட்டங்கள் தீட்டி, எந்தச் செயலை எப்படிச் செய்ய வேண்டும் என்று விரும்பு கிறீர்களோ, அப்படிச் செய்து முடிப்பீர்கள். உங்களது இலட்சியக் கனவுகள் நனவாகும் நேரம் இது. எதிர்காலத்தைப் பற்றிய பயம் அகலும். இனி எல்லாம் சிறப்பாக நடைபெறும் என்ற சிந்தனை மனதில் பதியும். புனிதப் பயணங்களும், புகழ்மிக்கவர்களின் ஒத்து ழைப்பும் கிடைக்கும்.

சகோதர ஸ்தானத்தில் செவ்வாய், குரு சேர்க்கை இருப்பதால், உடன் பிறப்புகளின் திருமண விழா சிறப்பாக நடைபெறும்.

பொதுவாக குரு - மங்கள யோகம் நடைபெறும் இம்மாதம் குடும்பத்தில் சுபகாரியங்கள் அடுக்கடுக்காக நடைபெறும். 'படிப்பிற்கேற்ற வேலை கிடைக்கவில்லையே, எப்பொழுது தான் நல்ல வேலை கிடைக்கும்?' என்று கவலைப்பட்டவர்களுக்கு. இப்பொழுது அரசு வேலை கூட கிடைக்கலாம். அல்லது அதற்கு இணையான வேலைகளும் அமையலாம்.

ஜீவன ஸ்தானம் பலம்பெறுவதால் உத்தி யோகத்தில் உள்ளவர்களுக்கு உன்னதமான நேரம் இது. பணி நிரந்தரம் ஆகாமல் பல வருடங்களாக வேலை பார்க்கிறோமே, எப்பொழுது தான் பணி நிரந்தரமாகி சம்பள உயர்வு கிடைக்குமோ என்று நினைத்த வர்களுக்கு இப்பொழுது அவர்களின் எண் ணங்கள் நிறைவேறப் போகிறது.

வராத சம்பளப் பாக்கிகள் வந்து சேரும். எதிர்பார்த்த சலுகைகளும், பதவி உயர்வும் இயல்பாக கிடைக்கும். கைநழுவிச் சென்ற வாய்ப்புகள் கூட கைகூடி வரும் நேரம் இது.

இம்மாதம் மகா சிவராத்திரி வருவதால், அன்றைய தினம் விரதமிருந்து சிவபெருமா னையும், உமையவளையும் வழிபட்டு வாரு ங்கள். அதுமட்டுமல்லாமல் நடராஜர் அபிஷே கத்தன்று சிவபுராணம் பாடி நடராஜப்பெருமா னையும் வழிபடுங்கள்.

வக்கிர புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்க ளுக்கு அதிபதியானவர் புதன். அவர் இம் மாதம் 21ஆம் திகதி வக்கிர கதியில் மகர இராசிக்கு வருகிறார். விரயாதிபதி சுக ஸ்தான

## ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் கூடும்

த்திற்கு வரும் பொழுது வசதி வாய்ப்புகளை பெருக்கிக் கொள்ள கொஞ்சம் செலவிடுவீர்கள். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்கள், டி.வி, மிக்சி, கிரைண்டர், மின்சாதனப் பொருட்கள், டேபிள், சேர், போன்ற அலங்காரப் பொருட்கள் மற்றும் ஆடை, ஆபர ணங்கள் வாங்கும் யோகம் உண்டு. தாயின் உடல் நலத்தில் கொஞ் சம் கவனம் தேவை. வாகனம் வாங்கும் முய

ற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பயணங்கள் பலன்தரும் விதத்தில் அமையும். அலைச்சல் ஏற்பட்டாலும் கூட ஆதாயம் தரும் நேரம் இது. வீடு மாற்றங்கள், இடமாற்றங்கள் வரலாம். சிலர் வாடகை வீட்டில் இருந்து சொந்த வீட்டிற்கு செல்லும் யோகம் உண்டு.

மேஷ சுக்கிரன் சஞ்சாரம்

உங்கள் இராசி நாதன் சுக்கிரன், மார்ச் 2ஆம் திகதி சப்தம ஸ்தானத்திற்கு சென்று அங்கிருந்தபடியே உங்கள் இராசியைப் பார்க்கப் போகிறார். இக்காலம் ஒரு பொற் காலமாகவே அமையும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். குறிப்பிட்ட இலக்கினை




அடைய நீங்கள் செய்த முயற்சிகள் வெற்றி தரும். உறவினர் பகை அகலும். பழைய் சடங்கு சம்பிரதாயங்களில் நம்பிக்கை வைப்பீர்கள். கௌரவம், அந்தஸ்து உயரும். ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் செயல் பட்டு தேக்கநிலையை மாற்றிக் கொள் வீர்கள்.

கும்ப புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு விரயாதிபதி மட்டு மல்லாமல், 9ஆம் இடத்திற்கும் அதிபதி யானவர் புதன். இவர் மார்ச் 12ஆம் திகதி கும்ப இராசிக்குச் செல்கிறார். உங்கள் இராசிக்கு 5ஆம் இடத் தில் புதன், சூரிய னோடு இருப்பதால்

பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி நீங்கள் எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அவர்களுக்கு நடைபெற வேண்டிய சுப காரியங்களில் ஏதேனும் தடைபட்டு இருந்தால் அது அகலும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக் கசப்புகள் மாறும். மனதைக் காயப்படுத்திய உறவினர்கள் இப்பொழுது வலிய வந்து பேசுவர்.

இம்மாதம் வெள்ளிக்கிழமை தோறும் வடக்கு நோக்கிய அம்பிகையை வழிப டுவதோடு சிவராத்திரியன்று சிவ தரிசனம் செய்வதும் உகந்தது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் எண்ணங்கள் எளிதில் செயலாகும். இல்லத்தில் மகிழ்ச்சி கூடும். உள்ளம் மகிழும் சம்பவங்கள் ஒவ்வொன்றாக நடைபெறும். கணவன் - மனைவிக்குள் கனிவும், பாசமும் கூடும். உறவினர் பகை அகலும். உதா சீனப் படுத்தியவர்கள் மறுபடியும் வந்தி ணைவர். தாயின் உடல்நலத்தில் கவ னம்தேவை.

உடன்பிறப்புகளின் இல்லத்தில் நடைபெறும் விழாக்களை முன்னின்று நடத்தி பாராட்டுப் பெறுவீர்கள். உங்கள் பெயரிலேயே இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு. பணத்தேவைகள் உட னுக்குடன் பூர்த்தியாகும்.

உத்தியோகத் தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த சலுகை, பதவி உயர்வு உண்டு. மனக் கலக்கம் அகல, குல தெய்வ வழிபாடுகளையும் சிவராத்திரி அன்று சிவனையும் அம்பிகையையும் வழிபட்டு வருவதன் மூலம் சிறப்பான பலன்களை வரவழைத்துக் கொள்ள இயலும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



விகாரி வருட மாசி மாதக் கிரக நிலை களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் தனாதிபதி குருவோடு சேர்ந்து தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே செல்வநிலை உயரும். செல்வாக்கு மேலோ ங்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வாக்கு, தனம், குடும்பம் என்பதை எடுத்துரைக்கும் இடமான இர ண்டாம் இடத்தில் 4 கிரக சேர்க்கை ஏற்பட்டு தன ஸ்தானமும் வலுபெற்றிருப்பதால் இம் மாதத்தில் எண்ணற்ற நல்ல காரியங்கள் நடைபெறப் போகிறது.

மங்கல ஓசையும், மழலையின் ஓசை யும் மனையில் கேட்கும் வாய்ப்பு கைகூடி வரலாம். தங்கு தடைகள் தானாக விலகும். தங்கம், வெள்ளி போன்ற விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் தனிக் கவனம் செலுத்துவீர்கள். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. ஒரு சிலருக்கு கட்டிய வீட்டை பழுது பார்க்கும் யோகம் ஏற்படும். தைரியமும், தன்னம்பிக்கையும் கூடும். கடன் சுமை குறைந்து, கவலைகள் தீரும். உடன்பிறப்புகளும், உடனிருப்பவர்களும் உங்கள் பணிக்கு உறுதுணையாக

இருப்பர். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும்.

உற்சாகத்தோடு செயற்பட்டு உன்னத நிலையை அடை வீர்கள். அதிகார பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். மதிப்பும், மரியாதையும் உயரும். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். கரைந்த சேமிப்பு களை ஈடுகட்டுவீர்கள்.

சுகஸ்தானத்தில் சூரியனும், புதனும் இணைந்து சஞ்சரிக்கிறார்கள். எனவே, புத -ஆதித்ய யோகம் உருவாகிறது. கல்வி மற்றும் கலைத்துறை சம்பந்தமாக புதிய முயற்சிகள் செய்தால் அதில் வெற்றி கிடை க்கும். தனியார் துறையில் இருந்து விலகி அரசு வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு இப்பொழுது நேர்முகத் தேர்வில் வெற்றி கிடைத்து, நினைத்தபடியே வேலையும் கிடைக்கலாம். பஞ்சம ஸ்தானத்தில் சுக்ரன் உச்சம் பெற்றிருப்பது யோகம்தான். பெண்க ளால் பெருமை சேரும். பூர்வீகச் சொத்து பிரச்சினைகள் அகலும். பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். குலதெய்வ பிரார்த்தனை களை நிறைவேற்றுவீர்கள். புனித பயண ங்கள் அதிகரிக்கும்.

இம்மாதம் வருகிற சிவராத்திரி அன்று சிவ கவசம் பாடி ஆறு கால பூஜையிலும் கலந்துகொண்டு, சிவனையும் உமையவ ளையும் தரிசித்தால் செல்வநிலை உயரும். தேசம் போற்றும் வாழ்வு அமையும். நடராஜர் அபிஷேகத்தன்று நடராஜர் பெருமானையும், சிவகாமி அம்மனையும் வழிபட்டால் நல்ல

## தொட்டது துலங்கும் நேரம்

வாய்ப்புகள் இல்லம் தேடிவரும்.

வக்கிர புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு அஷ்டம இலாபாதி பதியானவர் புதன். அவர் இம்மாதம் 21ஆம் திகதி மகர இராசிக்கு வக்கிர இயக்கத்தில் வருகிறார். அஷ்டமாதிபதி வக்கிரம் பெறுவது யோகம் தான். வெற்றிகள் ஸ்தானத்தில்

புதன் சஞ்சரிக்கும் பொழுது சொல்லும் சொற்களெல்லாம் வெல்லும் சொற்களாக மாறும். கௌரவம், அந்தஸ்து உயரும். நட்பால் வளமான வாழ்வை அமைத்துக் கொள்வீர்கள். முக்கிய புள்ளிகள் நீங்கள் முன்னேற்ற பாதையில் செல்ல வழி வகுத்துக் கொடுப்பர். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமை யும்.

உடன்பிறப்புகள் உங்களுக்கு உறுது ணையாக இருப்பர். தோட்டம், துரவு வைத்தி ருப்போர் தொடர்ந்து லாபம் காண்பார்கள். ஆர்வத்தோடு செய்யும் தொழிலில் நல்ல இலாபம் கிடைக்கும். போட்டியாளர்கள்




விலகுவார்கள். வெளிநாட்டு அழைப்பு வியக்க வைக்கும். போட்டி பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். பேட்டி கொடுக்குமள விற்கு பெரிய நிலையை அடையப் போகிறீர்கள்.

மேஷ சுக்கிரன் சஞ்சாரம்

உங்கள் ராசிக்கு 7, 12 ஆகிய இடங்க ளுக்கு அதிபதியானவர் சுக்கிரன். களத்திர ஸ்தானம் மற்றும் பயண ஸ்தானத்திற்கு அதிபதியான சுக்கிரன் 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் போது, குடும்பத்துடன் உல்லாச பயணங்களை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும். சிலருக்கு ஆன்மிக பயணங்கள் வாய்க்கும். பழைய நகைகளை கொடு த்துவிட்டு புதிய நகைகளை வாங்குவீர்கள். மாடு, கன்று வளர்ப்பிலும் ஆர்வம் காட்டு

வீர்கள். வீட்டை விரிவு செய்து கட்டும் முயற்சி, அடுக்கு மாடி கட்டிடமாக அமை க்கும் முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

கும்ப புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு அஷ்டம், இலாபா திபதியான புதன், மார்ச் 12ஆம் திகதி கும்ப இராசிக்கு செல்கிறார். அங்கு தொழில் ஸ்தானாதிபதி சூரியனோடு இணைவதால் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். எதிர்பார்த்ததை காட்டிலும் கூடுதல் லாபம் கிடைக்கும். புத - ஆதித்ய யோகம் ஏற்படு வதால் சகல தேவைகளும் பூர்த்தியாகும். சந்தோஷ வாய்ப்புகளை அதிகம் சந்தி ப்பீர்கள். மக்கள் செல்வாக்கு மேலோங்கும். மாற்று கருத்துடையோர் மனம் மாறுவர். கூட்டாளிகளால் நன்மை கிடைக்கும் நேரம் இது.

இம்மாதம் சதுர்த்தி அன்று ஆனை முகப் பெருமானை வழிபடுவதோடு,சிவ ராத்திரி நாளில் சிவன் வழிபாட்டையும் மேற்கொண்டால் செல்வ வளம் பெருகும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் வசதி, வாய்ப்புகள் பெருகும். வருமானம் இருமடங்காக உயரும். வருங் கால நலன் கருதி எடுத்த முயற்சி களில் வெற்றி கிடைக்கும். தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும். உற்சாகத்தோடு செயல்ப டுவீர்கள். தன்னம்பிக்கை, தையரியம் கூடும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். வாழ்க்கையில் வசந்த காலம் தொடங்கப்போகிறது. தாய்வழி ஆதரவும், சகோதர ஒற்றுமையும் அதிகரிக்கும். உடன் பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். ஆபரணங்கள் வாங்கி அணிந்து அழகு பார்க்கும் யோகம் உண்டு. அரசியல் வாழ்வில் இருப்பவர்களுக்கும் புதிய பொறு ப்புகள் வரலாம். பணிபுரியும் பெண்க ளுக்கு சம்பள உயர்வு வந்து சந்தோ ஷத்தை ஏற்படுத்தும். குலதெய்வ வழி பாடும், சிவராத்திரியன்று சிவாலய வழிபாடும் சிறப்பான வாழ்வை அமைத்துக் கொடுக் கும். (தொடரும்)



அண்ணா சிலையடி வள்ளுவர் சனசமூக நிலையம் 2020 ஆம் ஆண்டுக்கான சாதனையாளர்கள் 16 பேரை கௌரவிக்கும் நிகழ்வு யாழ்.மணியகாரன் தோட்டம் அ.த.க.பாடசாலை மண்டபத்தில் மு.சிவபாதசுந்தரம் தலைமையில் அண்மையில் நடை பெற்றது. (படங்கள்:- மகாலிங்கம்)

# ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை தோற்கடிப்பது வீண்

## சந்திம சாடல்

(கொழும்பு)

நாளை மறுதினம் வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை தோற்கடிக்க எதிர்க்கட்சிகள் முயற்சிப்பதாக அரசாங்கம் குற்றம் சாட்டியது.

காலியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

மேலும் கடந்த அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட திட்டங்களுக்கு நிதியளிக்கவே, ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை சமர்ப்பிக்க தற்போதைய அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு தனிப்பட்ட காரணங்களுக்காக இந்த ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை அரசாங்கம் தாக்கல் செய்யவில்லை எனவும்



சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

மேலும் நாட்டைப் பாதுகாக்கும் மற்றும் நாட்டின் எதிர்காலத்தை வலுப்படுத்தும் நாட்டிற்கு முக்கியமான ஒப்பந்தங்கள் மட்டுமே எதிர்காலத்தில் கைச்சாத்திடப்படும் என்றும் நல்லிணக்கமும் சமாதானமும் நாட்டின் சொந்த வழிகளில் உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை தோற்கடிக்க எதிர்க்கட்சிகள் எடுக்கும் தீர்மானம் வீண் என்றும் முடிந்தால் புதிய அரசாங்கத்தின் வரவு- செலவுத் திட்டத்தை தோற்கடித்து காட்டுமாறும் அவர் எதிர்க்கட்சிக்கு சவால் விடுத்தார். (ஐ)

# ஊர்காவற்றுறை பிரதேச சபைக்குட்பட்ட தமிழ் இந்துப் பெயர்களைக் கொண்ட வீதிகளின் பெயர்களை மாற்றுவதற்கு ஆட்சேபனை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச சபைக்குட்பட்ட பழைமையான தமிழ் இந்துப் பெயர்களைக்கொண்ட வீதிகளின் பெயர்களை மாற்றுவதற்கு ஆட்சேபனை தெரிவித்து அகில இலங்கை இந்து மாமன்ற பொதுச் செயலாளர் வே.கந்தசாமியால், கடிதங்கள் ஊர்காவற்துறை பிரதேச செயலர், ஊர்காவற்றுறை பிரதேசசபை தவிசாளர், மாகாணஆளுநர்,யாழ் மாவட்ட அரச அதிபர், உள்ளூராட்சி ஆணையாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "கடந்த 14.02.2020ஆம் திகதியிடப்பட்ட பத்திரிகையில் ஊர்காவற்றுறை பிரதேசசபைத் தவிசாளரின் ஒப்புகையுடன் பிரசுரிக்கப்பட்டிருந்த, வீதிப்பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல் கண்டு அதிர்ச்சியடைந்ததுடன் வீதிப்பெயர் மாற்றத்திற்கு எமது கடும் ஆட்சேபனையையும் தெரிவிக்கின்றோம்.

இந்துக்கள் ஆண்டாண்டு காலம் வாழ்ந்த இடங்களில், வந்து இடங்களைக் கைப்பற்றிய மேலைத்தேயத்தவர் கூட செய்யாத ஒரு செயலை ஊர்காவற்றுறை பிரதேசசபை ஏதோ ஒரு பின்புலத்தில் செய்ய முயற்சிக்கின்றமை மிகவும் கண்டனத்திற்குரியது.

தங்கள் ஆட்சியெல்லைக்கு உட்பட்ட ஊர்காவற்றுறை, பருத்தியடைப்பு, கரம்பொன், கரம்பொன் தென்கிழக்கு, நாரந்தனை, நாரந்தனை தெற்கு, புளியங்கூடல் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 21 வீதிகளின் பெயர்கள், அதிலும் சைவ ஆலயங்களின் பெயர் கொண்ட வீதிகளின் பெயர்கள் கத்தோலிக்கப் பெயர்களையும் உள்ளடக்கி மாற்றுவதற்கான நடவடிக்கைகளை உடன் நிறுத்துமாறு கோரிக்கை விடுப்பதுடன் தர்மத்திற்கு விரோதமாக தமிழ் இந்துப் பாரம்பரிய மிக்க இடங்களின் அடையாளங்களை அழிக்க வேண்டாம் எனவும் கேட்டுக்கொள்கின்றோம்.

தங்களது இத்தகு பொறுப்பற்ற பணிகள் மேலும் மதங்களுக்கிடையிலான- மக்களுக்கிடையிலான வெறுப்புணர்வினை வளர்த்து சக வாழ்வினை அச்சுறுத்தலுக்குள்ளாக்கி முரண்பாடுகளை அதிகரிக்கச் செய்யக்கூடியது என்பதை உணர்ந்து - மதம் கடந்த மக்கள் பிரதிநிதிகளாக செயற்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சைவ ஆலய வீதிகளுக்கு கத்தோலிக்க பெயர் விவகாரம்; ஊர்காவற்றுறை பிரதேசசபைத் தவிசாளர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச சபையினால்1971 ஆம் இலக்க 2016.06.10 ஆம் திகதிய இலங்கை ஜனநாயக குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வீதிகளின் பெயர்களில் உள்ள திருத்தங்களை சீர் செய்வதற்கு ஏதுவாக பொதுமக்களின் அபிப்பிராயங்களை பெற்றுக் கொள்வதற்காகவே விளம்பரம் பிரசுரிக்கப்பட்டது.

குறித்த விளம்பரம் தொடர்பாக எம்மிடம் மேலதிக விளக்கம் கோராமல் மதத்தோடு தொடர்புபடுத்தி செய்தி பிரசுரிக்கப்பட்டமை எமக்கு மிகவும் மனவருத்தத்திற்குரிய விடயமாக காணப்படுவதுடன் ஏற்றுக் கொள்ள முடியாததாகவும் உள்ளது எனத் தவிசாளர் ம.ஜெயகாந்தன் தெரிவித்தார்.

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வீதியினை அடையாளப்படுத்தும் முகமாக வீதிகளுக்கு இலக்க கல் நடும் பணி இடம்பெற்றது. பின்னர் வர்த்தமானி பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டது. யுத்தம் முடிவடைந்த பின்னரான அனைத்து இடங்களும் விடுவிக்கப்பட்ட நிலையில் பொதுமக்கள் மீள் குடியமர்ந்த வகையில் வீதிப் பெயர்கள் மீள் பரிசீலனை செய்யப்பட்ட போது புதிய வீடுகள் மற்றும் பிழையாக இனம் காணப்பட்ட வீதிகள் என்பன திருத்தத்துக்காக முன்வைக்கப்பட்டன.

இது தவிர ஆதன வரி மதிப்பீடு இடம்பெற ஆயத்தம் செய்யும் முகமாக வீதிகளுக்கான பெயர்ப்பலகை இடும் பணி இடம்பெற்ற போது வீதிப் பதிவு புத்தகம் மற்றும் உண்மையான வீதிகள் தொடர்பில் கள ஆய்வு செய்த வகையில் பல வீதிகள் வீதிப் பதிவு புத்தகத்தில் பதியப்படவில்லை. பல வீதிகள் இல்லாமலே இடம் பெற்றது. குழப்பமான வீதிகள் இன்று வரை பெயர் மாற்றம் செய்யப்படவில்லை.

இவை தவிர முன்னர் குறிப்பிட்ட வகையில் வீதிகளே இல்லாமல் பெயர் குறிப்பிடப்பட்டு இருந்த வீதிகளுக்கு வழங்கப்பட்ட வீதி இலக்கங்கள் புதிதாக பதியப்பட்ட வீதிகளுக்கு வழங்கப்பட்டது.

வீதிப் பெயர் பதிவு புத்தகத்தில் காணப்பட்ட உண்மையில் பிரதேசத்தில் காணப்படாத (வீதிகளின் தொடக்க, முடிவிடம் என்பன இப் பிரதேசத்திலே இல்லை) வீதிகளே கதிரேசன் கோவில் முதலாம் ஒழுங்கை, கதிரேசன் கோவில் இரண்டாம் ஒழுங்கை, கதிரேசன் கோவில் மூன்றாம் ஒழுங்கை, கதிரேசன் கோவில் நான்காம் ஒழுங்கை என்பனவாகும்.

வீதி இல: NJKYE 132, வீதியின் தொடக்கம்: கதிரேசன் கோவில் வீதி, வீதியின் முடிவிடம்: தனியார் காணி, 1971 ஆம் இலக்க 2016.06.10 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வீதியின் பெயர்: கதிரேசன் கோவில் முதலாம் ஒழுங்கை.

வீதி இல: NJKYE 133, வீதியின் தொடக்கம்: கதிரேசன் கோவில் வீதி, வீதியின் முடிவிடம்: 3ஆம்ஒழுங்கை, 1971 ஆம் இலக்க 2016.06.10 ஆம் திகதிய வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட்ட வீதியின் பெயர்: கதிரேசன் கோவில் இரண்டாம் ஒழுங்கை.

வீதி இல: NJKYE 134, வீதியின் தொடக்கம்: கதிரேசன் கோவில் வீதி, வீதியின் முடிவிடம்: 4ஆம் ஒழுங்கை, 1971 ஆம் இலக்க 2016.06.10 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வீதியின் பெயர்: கதிரேசன் கோவில் மூன்றாம் ஒழுங்கை.

வீதி இல: NJKYE 135, வீதியின் தொடக்கம்: கதிரேசன் கோவில் வீதி, வீதியின் முடிவிடம்: பருத்தியடைப்பு, 1971 ஆம் இலக்க 2016.06.10 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வீதியின் பெயர்: கதிரேசன் கோவில் நான்காம் ஒழுங்கை.

மேற்குறித்தவாறு தொடக்க இடம் முடிவிடங்களையுடைய வீதிகள் எவையும் இப் பிரதேசத்தில் இல்லை. எனவே இவ்வீதி இலக்கங்களை கொண்ட மேற்குறிப்பிடப்பட்ட வீதிகளுக்குப் பதிலாக புதிதாக பதிவு செய்யப்பட்ட பின்வரும் வீதிகளுக்கு குறிப்பிட்ட வீதிப் பதிவு இலக்கம் கொண்ட வீதிகளாக மாற்றம் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

வீதி இல: NJKYE 132, வீதியின் தொடக்கம்: ஊர்காவற்றுறை- பண்ணை வீதி, வீதியின் முடிவிடம்: மண்குழி வீதி, புதிதாக பதிவு செய்யப்படவுள்ள வீதியின் பெயர்: புனிதமரியாள் பிரதான வீதி.

வீதி இல: NJKYE 133, வீதியின் தொடக்கம்: புனித மரியாள் பிரதான வீதி, வீதியின் முடிவிடம்: தனியார் வீடு, புதிதாக பதிவு செய்யப்படவுள்ள வீதியின் பெயர்: புனிதமரியாள் 2ஆம் குறுக்கு வீதி.

வீதி இல: NJKYE 134, வீதியின் தொடக்கம்: ஊர்காவற்றுறை- பண்ணை வீதி, வீதியின் முடிவிடம்: குடியேற்ற திட்ட 2ஆம் வீதி, புதிதாக பதிவு செய்யப்படவுள்ள வீதியின் பெயர்: குடியேற்றத்திட்ட 1ஆம் வீதி.

வீதி இல: NJKYE 135, வீதியின் தொடக்கம்: ஊர்காவற்றுறை- பண்ணை வீதி, வீதியின் முடிவிடம்: குளம், புதிதாக பதிவு செய்யப்படவுள்ள வீதியின் பெயர்: குடியேற்றத் திட்ட 2ஆம் வீதி.

மேலும் கந்தசாமி கோவில் முதலாம் ஒழுங்கை, சிறி ஞானவைரவர் வீதி என்பன அவ்வாறு பொதுமக்களால் பயன்படுத்தப்படாத வீதிகளின் பெயர்களாக காணப்படுவதனால் அவற்றை பொதுமக்களால் பயன்படுத்தப்படும் பெயர்களுக்கே பெயர் மாற்றம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

வீதி இல: NJKYE 199, வீதியின் தொடக்கம் ஊர்காவற்றுறை பண்ணை வீதி, வீதியின் முடிவிடம்: கந்தசாமி கோவில் வீதி, 1971 ஆம் இலக்க 2016.06.10 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வீதியின் பெயர்: கந்தசாமி கோவில் வீதி 1ஆம் ஒழுங்கை, மாற்றம் செய்யப்படவுள்ள வீதியின் புதிய பெயர்: கொட்டடங்காடு வீதி.

வீதி இல: NJKYE 202, வீதியின் தொடக்கம்: ஊர்காவற்றுறை பண்ணை வீதி, வீதியின் முடிவிடம்: கந்தசாமி கோவில் வீதி, 1971 ஆம் இலக்க 2016.06.10 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வீதியின் பெயர்: சிறி ஞான வைரவர் வீதி, மாற்றம் செய்யப்படவுள்ள வீதியின் புதிய பெயர்: தேவகொட்டடங்காடு வீதி.

இவை தவிர சென்மேரிஸ் ஒழுங்கை, சென்ஜேம்ஸ்ஒழுங்கை ஆகியன கத்தோலிக்க மதம் சார்ந்த பெயராக உள்ளபோதும் அவற்றின் தொடக்கம், முடிவிடம் என்பவற்றின் அடிப்படையில் மக்களால் பயன்படுத்தப்படும் பொதுப் பெயர்களுக்கே மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே இவற்றினை கருத்திற் கொள்ளாது மத ரீதியாக செயற்படுவதாக தங்கள் செய்தியில் குறிப்பிடப்பட்டது எமது சபைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது என அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மோடியின் உள்ளத்தில் மலையக மக்களுக்கு பிரத்தியேக இடமுண்டு

## இந்திய பதில் உயர்ஸ்தானிகர் வெளிப்படுத்தல்



(கொழும்பு)
மலையக மக்களின் மேம்பாட்டுக்காக இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் எதிர்காலத்திலும் உதவிகள் தொடரும் என உறுதியளித்ததுடன் பாரதப் பிரதமரின் உள்ளத்தில் உங்கள் அனைவருக்கும் (மலையக மக்களுக்கு) பிரத்தியேக இடமுண்டு என இந்தியப் பதில் உயர்ஸ்தானிகர் விநோத் கே.ஜேக்கப் தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தின் நிதிப் பங்களிப்புடன் மலையக மக்களுக்காக நிர்மாணிக்கப்படவுள்ள 10 ஆயிரம் தனி வீடமைப்பு வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் காலை ஹற்றன் வெலிஓயா தோட்டம் மேற்பிரிவில் இடம்பெற்றது.

இதன்போது 50 வீடுகளை நிர்மாணிப்பதற்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இந்தியப் பதில் உயர்ஸ்தானிகர் விநோத் கே.ஜேக்கப் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அண்மையில் இந்தியாவுக்கு வெற்றிகரமான பயணத்தை மேற்கொண்டிருந்தார். இவ்விடயத்தின்போது அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானும் இணைந்திருந்தார். மிகவும் முக்கிமான விடயங்கள் குறித்து இரு தரப்புகளுக்குமிடையில் கலந்துரையாடப்பட்டன.

2017 ஆம் ஆண்டில் பாரதப் பிரதமர் மோடி இங்கு வந்த போது அவருக்கு உணர்வுபூர்வமான வரவேற்பை அளித்தீர்கள். அதனை இன்னும் அவர் நினைவில் வைத்துள்ளார். குறிப்பாக உங்கள் அனைவருக்கும் அவரின் இதயத்தில் தனியான இடமுண்டு.

இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வெலிஓயா தோட்டத்தில் 50 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அதற்கான உட்கட்டமைப்பு அபிவிருத்தி வசதிகள் செய்துகொடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் மேலும் 50 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டப்படுகின்றது.

இந்திய வீட்டுத்திட்டமானது ஏனையவற்றிலிருந்து மாறுபட்டு காணப்படும் என்பதுடன் வெற்றிகரமான திட்டமாகும். அதனை முழுமைப்படுத்துவதற்காக மக்கள், அரசாங்கம், அமைச்சு, தோட்ட நிர்வாகம் என அனைத்துத் தரப்புக்களினதும் முழுமையான ஒத்துழைப்பு அவசியம்.

அந்த வகையில் அனைவரினதும் வினைத்திறன்மிக்க ஈடுபாடுமூலம் 50 வீடுகளை விரைவில் பூரணப்படுத்த முடியும் என நம்புகின்றேன். இவற்றைக் கண்காணிப்பதற்கு வருகைதருவோம். இவை கட்டப்பட்ட பின்னர் 100 வீடுகளும் மக்களுக்கு கையளிக்கப்பட வேண்டும். அதற்கான முழு ஒத்துழைப்பும் வழங்கப்படும்

பெருந்தோட்டப்பகுதியில் 14 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்படும் என்ற உறுதிப்பாட்டை இந்தியா வழங்கியுள்ளது. அதன் ஓர் அங்கமே இந்த வீட்டுத் திட்டம். எஞ்சிய நிர்மாணப்பணிகள் விரைவில் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கின்றேன்.

மலையக மக்களுக்காக கல்வி, சுகாதாரம், தொழில் பயிற்சி, புலமைப்பரிசில் என முக்கியமான உதவிகளை இந்தியா வழங்கியுள்ளது. இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து எதிர்காலத்திலும் பல திட்டங்கள் முன்னெடுக்கப்படும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சவேந்திர சில்வாவிற்கு விதித்த பயணத்தடைக்கான பொறுப்பை அரசாங்கம்தான் ஏற்க வேண்டும் கிரியெல்ல தெரிவிப்பு



(கொழும்பு)
இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவிற்கு அமெரிக்கா விதித்த பயணத்தடைக்கான பொறுப்பை இலங்கை அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

மேலும், அரசாங்கத்தின் இயலாமையின் வெளிப்பாடாகவே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா உள்ளிட்ட இராணுவத்தினர் இந்த நாட்டுக்காக செய்த சேவையை வார்த்தைகளால் கூறமுடியாது.

அவர்களால் தான் நாம் இன்று சுதந்திரமாக இருக்கின்றோம். இதற்காக நாம் காலம் முழுவதும் அவர்களுக்கு நன்றிக்கடன் பட்டுள்ளோம்.

நல்லாட்சி அரசாங்கம் கடந்த நான்கரை வருடங்களாக ஆட்சியில் இருந்தது. இந்தக் காலத்தில், சவேந்திர சில்வா உள்ளிட்ட எவருக்கும் பயணத்தடைகள் வரவில்லை.

இந்த நிலையில், இந்த அரசாங்கத்தின் பலவீனம் காரணமாகவே சவேந்திர சில்வாவுக்கு இந்தப் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் என்ற ரீதியில் இலங்கை அரசாங்கம்தான் சர்வதேசத்திற்கு இது தொடர்பில் விளக்கமளித்திருக்க வேண்டும்.


அவ்வாறு செய்து இந்தப் பிரச்சினை ஏற்படாமல் தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும். இப்போது ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சினைக்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1980

## உஷாந்

உன்னோட வயசு என்ன பாப்பா??
வீட்டுல 12
ஸ்கூல்ல 13
பஸ்லயும் ட்ரைன்லயும் 10
பேஸ் புக்ல 18 —
கேப்பியா?? கேப்பியா?

## சிப்சன்





## சிந்து

அண்ணே எனக்கு ஒரு சந்தேகம். அமலாபால் பேர் கெட்டுப் போய்ச்சுனா என்ன பேர் வைப்பாங்கண்ணே?
ம்...அமலா தயிர் என்று வைப்பாங்கடா கரிச்சட்டி மண்டையா.



## லக்சனா

முந்தியெல்லாம் ஒரு பொன்ண காதலிக்க வைக்கிறது கஷ்டம்.



இப்பலாம் அது நம்மள மட்டுமே காதலிக்க வக்கிறது தான் பெருங்கஷ்டம்...

## அனு

உலகத்துல 3 பங்கு கடல் 1 பங்கு நிலம் இருக்கிறதா சொல்றாங்க.
தண்ணிக்கு கீழேயும் நிலம் தானே இருக்கு...



அப்டின்னா 4 பங்கும் நிலம் தானே?

## சர்வின்

கோழி ஏன் முட்டை போடுது?



ஏன்னா அதுக்கு 1, 2, 3 போட தெரியாது சார்..

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

### சாய்ந்தமருது போன்று

# கல்முனை உப பிரதேச செயலகம் தரமுயர்த்தப்பட வேண்டும்-சுரேஷ்



(கல்முனை)

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற மக்களின் கோரிக்கையை தற்போதைய அரசாங்கம் நிறைவேற்றுமென்று நம்புவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

கல்முனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்படுவதற்கு சில அரசியல்வாதிகள் எதிர்ப்பை வெளியிடுவது கவலையளிப்பதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை சாய்ந்தமருது நகரசபையை உருவாக்கும் நோக்கத்தில் கல்முனை மாநகர சபையைக் கலைப்பதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தலொன்றை அண்மையில் அரசாங்கம் வெளியிட்டிருந்தது.

குறித்த விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக சாய்ந்தமருது பிரதேசம் ஒரு நகரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதற்கான எல்லைகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

மேலும் சாய்ந்தமருது நகர சபையின் பதவிக் காலத்தை 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக்குமாறு குறித்த விசேட வர்த்தமானி ஊடாக அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி கல்முனை மாநகர சபை கலைக்கப்பட உள்ளதுடன், அன்றைய தினம் முதல் அதன் எல்லைகளும் மாற்றியமைக்கப்படவுள்ளன.

இந்நிலையிலேயே கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரம் உயர்த்த தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென நம்புவதாக சுரேஷ் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜயந்த எம்.பிக்கு எதிராகப் பிடியாணை

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீரவை கைதுசெய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.



நீதிமன்றில் நேற்றுத் திங்கட்கிழமை முன்னிலையாகத் தவறிய நிலையில், கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் இந்தப் பிடியாணை உத்தரவைப் பிறப்பித்தது.

அரச வாகனங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமை மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராகச் செயற்பட்ட காலத்தில் இடம்பெற்ற முறைகேடுகள் குறித்து அவருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கொழும்பு துறைமுக நகரத்திற்கு ஜனாதிபதி கண்காணிப்பு விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு துறைமுக நகருக்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார்.

ஜனாதிபதி தலைமையில் அண்மையில் இடம்பெற்ற தேசிய சட்ட மாநாட்டின்போது கொழும்பு துறைமுக நகர திட்டம் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கையின் வரைபடத்தை மாற்றி கொழும்பு நகரின் ஒரு நீட்சியாக இந்நகரம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

கடலை நிரப்புதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு China Communication Construction நிறுவனம் செலவிடவுள்ள தொகை 1.4 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

கட்டடத் தொகுதிகளுக்காக மேலும் 15 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படவுள்ளன. புதிய நிலப் பிரதேசத்திற்காக தயாரிக்கப்பட்டுள்ள சட்ட வரைவு விசேட குழுவொன்றால் ஆராயப்பட்டு வருகின்றது.

அது நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் விசேட பொருளாதார வலயமாக பிரகடனப்படுத்தப்படும். சேவைகளுக்கான முதலாவது விசேட பொருளாதார சேவை வலயம் இதுவாகும்.

நகர அபிவிருத்தி அமைச்சு, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் China Communication Construction நிறுவனமும்இணைந்து முத்தரப்பு உடன்படிக்கையொன்றின் கீழ் இத்திட்டம்செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

கட்டட நிர்மாணப் பணிகள் இவ்வருடம் நடுப் பகுதியில் ஆரம்பமாகும். முதற்கட்டம் 2023 ஆம் ஆண்டு நிறைவு செய்யப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தொடர்பாக எந்த முடிவும் இல்லை-ஐ.தே.க.

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தை தோற்கடிப்பதற்கான எந்த முடிவும் இதுவரை எட்டப்படவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்படவுள்ள ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை தோற்கடிக்க எதிர்க்கட்சிகள் முயற்சிப்பதாக அரசாங்கம் குற்றம் சாட்டியிருந்த நிலையில் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா கயந்த கருணாதிலக்க நேற்று திங்கட்கிழமை மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)



## செய்தித்துளிகள்

### அனுமதிச் சீட்டின்றி

# புகையிரதத்தில் பயணித்த 100 பேருக்கு அபராதம்

(கொழும்பு)

பயண அனுமதிச் சீட்டின்றி புகையிரதத்தில் பயணித்த 100 பேருக்கு அபராதம் விதிக்கப்பட்டதாக புகையிரதப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

கம்பஹா புகையிரத நிலையத்தில் 4 மணிநேரம் முன்னெடுத்த சுற்றிவளைப்பிலேயே பயண அனுமதியின்றி பயணித்த 100 பேர் இவ்வாறு அடையாளம் காணப்பட்டனர்.

அவர்களிடம் மூவாயிரத்து 20 ரூபாய் வீதம், மூன்று இலட்சத்துக்கும் அதிக தொகை அபராதமாக அறவிடப்பட்டதாக புகையிரத பாதுகாப்புப் பிரிவு தெரிவித்தது.

இதேவேளை புகையிரத நிலையங்களை மையப்படுத்தி இவ்வாறான சுற்றிவளைப்புக்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கொழும்பு நோக்கிப் பயணித்த புகையிரதத்தில் திடீர் தீ விபத்து

(மொரட்டுவ)

மொரட்டுவையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த புகையிரதத்தில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

நேற்றுக் காலை 7.50 மணியளவில் மொரட்டுவையிலிருந்து பயணித்த புகையிரத இயந்திரத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக புகையிரதத் திணைக்களத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

தீயைக் கட்டுப்படுத்துவதற்காக திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்ட நிலையில் கொள்ளுப்பிட்டி புகையிரத நிலையத்தில் புகையிரதம் நிறுத்தப்பட்டு தீயணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (இ-7)

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

(மோதரை)


மோதரை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இராஜமல்வத்தைப் பிதேசத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் மோதரை பொலிஸாருக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் சோதனை மேற்கொள்ளப்பட்ட போது 5 கிராம் 20 மில்லி கிராம் ஹெரோயினுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் 27 வயதுடைய மட்டக்குளிப் பிரதேசத்தை சேர்ந்தவராவார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 120 | 120 | 160 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 100 | 100 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 150 | 120 | 130 | 130 | 200 |
| தக்காளி | 250 | 250 | 240 | 200 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 120 | 80 | 120 |
| கோவா | 120 | 150 | 260 | 110 | 160 |
| கரட் | 300 | 250 | 280 | 250 | 240 |
| பூசணி | 100 | 150 | 140 | 150 | 160 |
| புடோல் | 120 | 140 | 140 | 110 | 160 |
| வாழைக்காய் | 80 | 90 | 80 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 260 | 200-300 | 350 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 150 | 200-220 | 260 | 280 |
| பாகற்காய் | 150 | 150 | 140 | 140 | 200 |
| வெண்டிக்காய் | 120 | 130 | 140 | 110 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 70 | 80 | 80 | 120 |
| பயற்றங்காய் | 140 | 100 | 130 | 110 | 160 |
| லீக்ஸ் | 200 | 300 | 280 | 340 | 240 |
| பீற்றூட் | 170 | 140 | 160 | 200 | 160 |
| கறிமிளகாய் | 200 | 200 | 220 | 180 | 160 |
| முருங்கைக்காய் | 200 | 400 | 400 | 500 | 600 |
| போஞ்சி | 180 | 120 | 200 | 180 | 160 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | – | 140 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 40 | 40 | 50 | 50 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 75 | 40-60 | 60 | 40-70 |
| இராசவள்ளி | 170 | 130 | 160 | 160 | 200 |
| வெங்காயப்பூ | 150 | 120 | 160 | 190 | 240 |
| முள்ளங்கி | 80 | 50 | 80 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 40 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 70 | 30 | 20 | 30 |
| ஈரப்பலா | 100 | – | – | 110 | 120 |




# மூளை இல்லாத கழுதை



அது ஒரு அடர்ந்த காடு. அந்தக் காட்டில் ஒரு வயதான சிங்கம் ஒன்று வாழ்ந்து வந்தது. வயதாகிவிட்ட காரணத்தால் அந்தச் சிங்கத்தினால் வேகமாக ஓடவும் வேட்டையாடவும் முடியவில்லை. அதனால சாப்பிட எதுவும் கிடைக்காமல் அந்தச் சிங்கம் ரொம்பக் கஷ்டப்பட்டது.

சிங்கமும் "எத்தனை நாட்கள் இப்படியே இருப்பது? சாப்பிடுவதற்கு ஏதாவது செய்தாகணுமே?" என்று யோசித்தது.

யோசித்துக்கொண்டு இருக்கும்பொழுது அந்த பாதையின் வழியே குள்ளநரி ஒன்று வந்துகொண்டிருந்தது. உடனடியா சிங்கமும் இந்த நரியைத் தவிர வேறு யாரும் இந்த மாதிரி வேலைக்குச் சரிபட்டுவர மாட்டார்கள் என்று நினைத்தது. சிங்கமும் உணவைச் சேகரிச்சிட்டு வர இந்த குள்ளநரியை உதவியாளனாக நியமிக்க முடிவு செய்தது.

உடனே சிங்கம் நரியை வரவழைத்தது.

"இனிமேல் நீதான் என் அமைச்சர். உன்னைக் கேட்டுத்தான் எதையும் செய்வேன்" என்று சிங்கம் அந்தக் குள்ளநரியிடம் கூறியது.

நரியால் சிங்கத்தின் பேச்சை நம்ப முடியல. "ராஜா, உங்களுக்கு அமைச்சரா இருக்கிறது என் அதிர்ஷ்டம்" என்று நரி சிங்கத்திடம் கூறியது.

"உனக்கே தெரியும், இந்தக் காட்டுக்கே நான்தான் ராஜா. ஒரு ராஜா உணவுக்காக மற்ற விலங்குகளின் பின்னாடி ஓடினா அது பார்க்கிறதுக்கு நல்லாயிருக்குமா? அதனால, எனக்குத்தேவையான உணவை நீ எப்படியாவது ஏற்பாடு செய்யணும். அதுதான் உன் முதல் வேலை" என்றது சிங்கம்.

நரியும் பயந்து போய் நின்றது. "சிங்கத்துக்கு எப்படி நம்மால் சாப்பாடு போட முடியும்" என்று யோசித்தது.

சிங்கமும் அந்த நரியை விடவில்லை. "நீ ஒரு நாளைக்கு ஒன்றொன்றாக தினமும் ஒரு விலங்கை எனக்காகக் கூப்பிட்டு வரணும். நீதான் கெட்டிக்காரனாச்சே. ரொம்ப சுலபமா செய்திடுவேன்னு எனக்குத் தெரியும்" என்று சிங்கம் நரியை புகழ்ந்து பேசியது. சிங்கத்தின் புகழ்ச்சிப் பேச்சில் மயங்கிய நரியும் ஒப்புக்கொண்டது.

சிங்கத்துக்காக உணவு தேடும் வேலையில் இறங்கியது நரி. அப்போது ஒரு கழுதை எதிரில் வந்தது. கழுதையிடம் போய், "நண்பா, எங்கே ரொம்ப நாளா ஆளையே காணோம்? எங்க போயிட்டாய்?" என்றது.

"இங்கேயேதானே நான் சுத்திக்கிட்டு இருக்கேன்? என்ன விடயம்?" என்று கழுதை கேட்டது.

"நீ ரொம்ப் அதிர்ஷ்டக்காரன். நம்ம காட்டின் சிங்கராஜா உன்னை முதலமைச்சரா தேர்ந்தெடுத்திருக்காரு" என்றது.

"ஐயோ எனக்கு சிங்கத்தைப் பார்த்தாலே பயம்பா. அவர் ஒரே அடியில் என்னைக் கொன்று சாப்பிட்டிடுவாரு. அவர் எதுக்காக என்னை முதலமைச்சரா தேர்வு செய்ய வேண்டும்? ஆளை விடு" என்றது கழுதை.

"பயப்படாதே நீ மட்டும் முதலமைச்சரா இருந்தால், உன் நிலைமை எங்கேயோ போயிடும். ராஜாவுக்கு அடுத்தபடியா நீதான். எல்லா விலங்குகளும் உனக்கு மரியாதை தரும். ஏதாவது காரியம் ஆகணும்னா உன் பின்னாடிதான் வருவாங்க" என்றது நரி.

அப்பாவியான கழுதை, நரியின் பேச்சை உண்மை என நம்பியது. சிங்கத்தைப் பார்க்க நரியோட சென்றது.

நரியும் கழுதையும் சிங்கத்தின் இருப்பிடத்தை அடைந்தன. சிங்கம் கழுதையைப் பார்த்துச் சிரிச்சுக்கிட்டே, "வா நண்பா. இன்று முதல் நீ தான் என்னோட முதலமைச்சர்" என்று கூறியது.

கழுதையும் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தது. வெட்கத்துடன் தலை குனிந்தபடி சிங்கத்துக்குப் அருகில் வந்து நின்றது. சிங்கம் அதன் தலையில் ஓங்கி ஒரு அடி அடிச்சது. கழுதை அந்த நிமிடமே உயிரை விட்டது.

சிங்கம் கழுதையைச் சாப்பிட ஆரம்பித்தது. "மகாராஜா, கொஞ்சம் பொறுங்க. என்னதான் பசியா இருந்தாலும் ஒரு ராஜா குளிக்காம சாப்பிடக்கூடாது இல்லையா?" என்று சிங்கத்திடம் நரி கூறியது.

சிங்கமும் அதை ஒப்புக்கிட்டு குளிக்கப் போச்சு.

நரி கழுதையின் உடலைப் பார்த்தது. அதற்கும் ஒரே பசி. கழுதையின் தலையைக் கிழிச்சு, மூளையை எடுத்துச் சாப்பிட்டது.

குளித்துவிட்டு வந்த சிங்கம் கழுதையின் உடல் முன்பு போல் இல்லை என்று கண்டுபிடித்தது. "கழுதையின் தலை ஏன் கிழிந்து உள்ளது? உள்ளே ஒன்றுமே இல்லையே?" என்று சிங்கம் கேட்டது.

"என்ன மகாராஜா! உங்களுக்குத் தெரியாதா? கழுதைகளுக்கு எல்லாம் மூளையே கிடையாது" என்று நரி சிங்கத்திடம் கூறியது.

சிங்கம் நரியை நம்பவில்லை. "அது எப்படி மூளை இல்லாம இருக்கும்? பொய் சொல்லாதே" என்று சிங்கம் கேட்டது.

"கழுதைக்கு மூளை இருந்திருந்தா என்கூட வந்திருக்குமா?" ஏன்று நரி சிங்கத்திடம் கேட்டது.

நரி சொல்வது சரிதான்னு சிங்கமும் அமைதியாகியது.

## விடுகதைகளும் விடைகளும்

- குளித்தால் கறுப்பு: குளிக்காவிட்டால் சிவப்பு.
  **நெருப்பு**
- நட்டமாய் நிற்கிறவனுக்கு நறுக்கு நறுக்கென்று கடிக்கிற வேலை.
  **அரிவாள்மனை**
- தாய் இனிப்பாள். மகள் புளிப்பாள். பேர்த்தி மணப்பாள்.
  **பால், மோர், நெய்**
- உண்டதை நினைப்பான். உதையை மறப்பான். உயிரையும் கொடுப்பான், வழியும் நடப்பான்.
  **நாய்**
- காலையில் ஊதும் சங்கு: கறி சமைக்க உதவும் சங்கு.
  **சேவல்**
- கறுப்புச் சட்டைக்காரன் காவலுக்குக் கெட்டிக்காரன்.
  **பூட்டு**
- தொட்டால் மணக்கும் குடித்தால் புளிக்கும்.
  **எலுமிச்சம்பழம்**
- நடக்கத் தெரியாதவன் நடப்பவனுக்கு வழி காட்டுகிறான்.
  **கைகாட்டி**
- ஏரிக்கரை உயர்ந்திருக்கும். எட்டிப் பழம் சிவந்திருக்கும். காகம் கறுத்திருக்கும். காக்கைக் குஞ்சு வெளுத்திருக்கும்.
  **அடுப்பு, நெருப்பு, கரி, சோறு**
- இரவிலே பிறந்த இளவரசனுக்குத் தலையிலே குடை.
  **காளான்**
- உலர்ந்த கொம்பிலே விரிந்த பூ - அது என்ன?
  **குடை**
- ஈரப் புடைவைக்காரி இருபத்தெட்டுச் சுற்றுக்காரி.
  **வெங்காயம்**

## கீழே குறிப்பிட்டுள்ள விலங்குகளின் பெயர்களை கண்டுபிடியுங்கள்

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| G | E | S | U | O | M | H | N | W | R | B | W | C | W | L |
| X | D | A | Q | H | J | X | O | O | M | L | T | H | W | J |
| B | W | S | H | N | L | H | T | P | I | C | R | A | W | M |
| Y | W | M | E | F | F | A | R | I | G | L | K | D | O | G |
| R | C | K | R | R | R | S | Y | K | T | H | I | P | P | O |
| J | T | O | W | I | E | F | B | X | X | L | Q | R | J | E |
| D | R | O | T | A | G | I | L | L | A | E | B | Z | H | X |
| T | H | N | X | P | I | C | L | F | C | R | V | Z | S | Z |
| V | N | H | R | S | T | H | E | T | D | R | I | B | I | Q |
| N | Z | A | C | S | T | Y | X | L | W | I | N | H | F | L |
| W | U | Q | H | K | L | J | A | E | A | U | F | A | H | F |
| V | Q | Q | D | P | O | Y | K | N | V | Q | Z | A | T | V |
| X | M | T | L | Q | E | T | J | Y | E | S | Y | R | C | H |
| T | A | C | K | Q | C | L | K | M | O | N | K | E | Y | R |
| P | T | S | H | W | L | Y | E | T | D | R | A | H | T | L |

| | | | |
|---|---|---|---|
| CAT | HIPPO | MOUSE | TIGER |
| DOG | SQUIRREL | MONKEY | |
| BIRD | GIRAFFE | ALLIGATOR | |
| ELEPHANT | FISH | LION | |

## பழமொழிகள்

- படிக்கிறது தேவாரம் இடிக்கிறது சிவன் கோயில்.
- பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது.
- மாமியார் உடைத்தால் மண்குடம் மருமகள் உடைத்தால் பொன் குடம்.
- முள்ளை முள்ளால் எடுக்கவேண்டும்.
- வெண்ணெய் திரண்டுவர தாழி உடைவது போல்.
- வைக்கோற் போர் நாய் போல
- யானை இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன்.

வேண்டாம் என்றாலும்
நமக்கென்று உள்ளது போகாது
~ ஔவையார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அமெரிக்காவின் தடையை விட அதன் பதிலே பலமானது

இலங்கையின் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவும் அவரது குடும்பத்தினரும் அமெரிக்காவுக்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் இந்த அதிரடி நடவடிக்கை இலங்கை அரசுக்கான முதலாவது எச்சரிக்கை எனலாம்.

ஏலவே சவேந்திர சில்வாவை இராணுவத் தளபதியாக நியமித்தமை தொடர்பில் சர்வதேச அளவில் கடும் எதிர்ப்பு ஏற்பட்டிருந்தது.

போர்க்குற்றம் புரிந்தவர் என்று குற்றம் சாட்டப்பட்ட ஒருவரை இராணுவத் தளபதியாக நியமிப்பது நியாயமாகாதென்ற அடிப்படையில், சவேந்திர சில்வாவுக்கான எதிர்ப்பு சர்வதேச மட்டத்தில் வலுப் பெற்றிருந்தது.

எனினும் இதனைப் பொருட்படுத்தாமல் இராணுவத் தளபதியாக அவர் நியமிக்கப்பட்டார்.

இவ்வாறு நியமிப்பதன் மூலம், சர்வதேசத்தின் எதிர்ப்பைத் தாம் பொருட்படுத்தவில்லை என்பதை உலகுக்குக் கூறுவது இலங்கை ஆட்சியாளர்களின் முதன்மை நோக்கமாக இருந்தது.

இதுதவிர, சர்வதேச நாடுகளின் எதிர்ப்பு சிறிது காலம் மட்டுமே நின்று நிலைக்கும். பின்னர் அது மறக்கப்பட்ட விடயமாகிப் போய் விடும் என்ற நினைப்பிலும் சவேந்திர சில்வா இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

நிலைமை இதுவாக இருக்கையில், இலங்கை இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவும் அவரது குடும்பத்தினரும் அமெரிக்காவுக்குள் நுழைய முடியாது என அமெரிக்கா அதிரடியாக அறிவித்தது.

ஒரு நாட்டின் இராணுவத் தளபதியாக இருக்கக்கூடிய ஒருவரைத் தனது நாட்டுக்குள் நுழைய விட முடியாது என இன்னொரு நாடு அறிவிக்குமாக இருந்தால், சம்பந்தப்பட்ட இராணுவத் தளபதிக்கு அதைவிட்ட அவமானம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

இந்நிலையிலேயே அமெரிக்கத் தூதுவர்களை அழைத்து சவேந்திர சில்வா மீது அமெரிக்கா விதித்த தடையை நீக்குமாறு இலங்கை அரசாங்கம் கேட்டுள்ளது.

இவ்வாறு கேட்கப்பட்டதற்கு, சவேந்திர சில்வா போர்க்குற்றம் புரிந்ததற்கான ஆதாரம் தம்மிடம் உள்ளதாக அமெரிக்காவின் பதில் அமைந்தது.

இவ்வாறு அமெரிக்கா தெரிவித்த பதிலானது அந்த நாடு சவேந்திர சில்வாவுக்கு விதித்த தடையை விட, காத்திரமும் கனதியுமானது என்பதுதான் இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

அதாவது, இலங்கையின் இராணுவத் தளபதியாக இருக்கக்கூடியவர் போர்க்குற்றம் புரிந்தவர் என அமெரிக்கா கூறுகிறது என்றால், இலங்கை ஆட்சியாளர்கள் எவ்வாறாக தங்கள் அதிகாரத்தை சிறுபான்மைத் தமிழ் மக்கள் மீது பிரயோகிக்கின்றனர் என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

# சவேந்திர சில்வாவுக்கு எதிரான தடைக்கு மங்களவும் ரணிலுமே காரணம்

## டியூ குணசேகர குற்றச்சாட்டு

(கொழும்பு)

இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு எதிராக அமெரிக்கா விதி த்திருக்கும் தடை யா னது எமது நாட்டின் கௌர வம் மற்றும் இறை யா ண்மைக்கு விடுக்கும் அச்சுறுத்தலாகும் என இல ங்கை கம் யூனிஸ்ட் கட்சி யின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான டியூ குணசேகர தெரிவித்தார்.

அத்துடன் அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்கு கடநத அரசாங்கத்தில வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீர மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரே காரணம்.

யுத்தக்குற்றம் தொடர்பாக இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்திற்கு இலங்கை இணை அனுசரணை வழங்கத் தீர்மானித்தது. அதற்கான ஆவணத்தில் மங்கள சமரவீர கைச்சாத்திட்டிருந்தார். ரணில விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமையவே மங்கள சமரவீர இதனை மேற்கொண்டிருந்தார்.

அன்று மங்கள சமரவீர கைச்சாத்திட்டதன் பின்விளைவையே தற்போதும் நாங்கள் அனுபவிக்க வேணடியிருக்கின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி நேற்று கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## ஐ.தே.கட்சியின் தலைவர் பதவிக்கு ரணிலே பொருத்தமானவர்-ரோஹித

(பத்தரமுல்ல)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவிக்கு ரணில் விக்கிரமசிங்கவே பொருத்தமானவரென இராஜாங்க அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

"தற்போது ஐக்கிய தேசியக்கட்சி யானை, இதயம் என சின்னங்கள் காரணமாக பிளவுபட்டு காணப்படுகின்றது.

அத்துடன் ரணில் நாட்டை ஆட்சி செய்வதற்கு பொருத்தமற்றவர். ஆனால் ஐ.தே.கவின் கட்சித் தலைவர் பதவிக்கு பொருத்தமானவர்" என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் பல்வேறு இடங்களில் இந்து மதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக இந்துசமயப் பேரவைக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றது.

இந்நிலையில் இது போன்ற சம்பவங்களைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு சட்ட வரம்புகளுக்கமைய பொருத்தமான உடனடி நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கான ஆலோசனைகளைப் பெறுவதற்கான அவசர கூட்டம் பலாலி வீதியில் அமைந்துள்ள இந்து சமயப் பேரவைத் தலைமைச் செயலகத்தில் நாளை புதன்கிழமை மாலை 4 மணிக்கு பேரவைத் தலைவர் சி.சக்திகிரீவன் தலைமையில் நடைபெறும்.

இத்தகைய செயற்பாடுகளில் பாதிக்கப்பட்டவர்களையும் சைவ நிறுவனங்களையும் கலந்து கொ ண்டு முறைப்பாடுகளையும்ஆலோசனைகளையும் வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-9)

## பலாலி கிழக்கு பகுதியில் பாரியளவில் கல் அகழ்வு

(யாழ்ப்பாணம்)

பலாலி கிழக்கு பகுதியில் பாரிய அளவில் கல் அகழ்வு முன்னெடுக்கப்படுவதாக தெரிவித்துள்ள அப்பகுதி மக்கள் தமது பிரதேசம் பெரும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

பலாலி கிழக்கு ஜே / 253 கிராம உத்தியோகத்தர் பிரிவில் அத்துமீறிய கல் அகழ்வு பக்கோ மூலம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது. இதனால் அப் பகுதியில் பாரிய கிடங்குகள் உருவாகியுள்ளன. எதற்கும் பயன்படாத பகுதியாக குறித்த பக்தி மாறிக்கொண்டு வருகிறது.

தனியார் சட்டத்துக்கு முரணான வகையில் கற்களை பாரிய அளவில் அகழ்ந்து வருகின்றனர். இந்த விடயத்துக்கு பொறுப்பாக உள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவருக்கும் குறித்த விடயம் தொடர்பாக தெரியப்படுத்தப்பட்ட போதும் அவர்கள் எந்தவித நடவடிக்கையும் இதுவரை முன்னெடுக்கவில்லை.

கடந்த மூன்று மாதங்களாக தொடர்சியாக இந்த கல் அகழ்வு இடம் பெற்று வருகிறது. என்வே எமது பிரதேசம் பயன்பாடற்று போவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து இதை தடுத்து நிறுத்த வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர் (ம-3,09)

## உயர்தரப் பரீட்சைக்கு மாணவர்கள் விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் கல்விகற்று 2019 ஆம்ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவாகளில் இரண்டாம் தடவை பாடசாலையூடாக க.பொ.த உயர்தர பரீட்சைக்கு விண்ணப்பிக்கவுள்ள மாணவர்கள் 2020.02.20ம் திகதிக்கு முன் பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு அதிபர் அறிவித்துள்ளார். (இ-7)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

ஒருமுறை வந்தால் கனவு, இருமுறை வந்தால் ஆசை, பலமுறை வந்தால் லட்சியம்.

-அப்துல் கலாம்

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழஅழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும்பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** அல்வாய், நாவலடி, ஸ்ரீலங்கா பாடசாலை, வியாபாரி மூலை, இன்பருட்டி, சுப்பர் மடம், சுப்பர்மடம் மரின் வெல்த் ஐஸ் தொழிற் சாலை, வராத்துப்பளை, புனித நகர், கற்கோவளம், தும்பளை, வெளிச்சவீடு, முதலாம் குறுக்குத்தெரு, 2ஆம் குறுக்குத்தெரு, 3ஆம் குறுக்குத் தெரு, மரின்வெல்த் ஐஸ் தொழிற்சாலை, ஜெயந்தா கைத்தொழிற்சாலை பிறைவேற் லிமிற்ரெட் கற்கோவளம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** மதவுவைத்தகுளம் கிராமம், பகல அளுத்வத்த கிராமம், இலுப்பைக்குளம், சாம்பல்தோட்டம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### மனம் ஒரு குளம் போன்றது



ஒரு மனிதனுடைய குணத்தை இந்த சம்ஸ்காரங்கள் மொத்தமுமே நிர்ணயிக்கின்றன. நல்ல சம்ஸ்காரங்கள் மேலோங்கி இருந்தால் குணம் நல்லதாக அமைகிறது. தீயவை மேலோங்கி இருந்தால் குணம் தீயதாக அமைகிறது.

ஒரு மனிதன் தொடர்ந்து தீய வார்த்தைகளைக் கேட்டு தீய எண்ணங்களையே எண்ணி, தீய செயல்களையே செய்து கொண்டு இருந்தால் அவனுடைய மனம் தீய சம்ஸ்காரங்களில் நிறைகிறது. அவை அவனுடைய சிந்தனையையும் செயலையும் அவன் அறியாமலே ஆட்டிப் படைக்கின்றன.

உண்மையில் இந்தத் தீய சம்ஸ்காரங்கள் தொடர்ந்து செயற்பட்டவாறே இருக்கின்றன. அவற்றின் விளைவு தீமையாகத்தான் இருக்கும். அதன் காரணத்தால் அந்த மனிதன் தீயவனாக இருக்கிறான். அவனால் இதைத் தவிர்க்க முடியாது. இந்த சம்ஸ்காரங்கள் மொத்தமும் தீய செயல்களைச் செய்வதற்கான ஆற்றல்மிக்கதொரு தூண்டுசக்தியை அவனுள் உருவாக்கும். தன் சம்ஸ்காரங்களின் கையில் மனிதன் எந்திரம் போலாகி விடுகிறான். அவை அவனை தீமை செய்யும்படிக் கட்டாயப்படுத்துகின்றன.

# ஐ.பி.எல். கிண்ணம் சென்னைக்கே அடித்துச்சொல்கிறார் ஹர்பஜன்சிங்

இந்தாண்டு நடைபெறவுள்ள ஐ.பி.எல்.தொடரில், எந்த அணி கோப்பையை ஜெயிக்கும் என்று சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வீரர் ஹர்பஜன் சிங் தெரிவித்துள்ளார். இந்தியாவில் நடைபெற்று வரும் ஐ.பி.எல்.தொடர், வரும் மார்ச் மாதம் 29 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான முதல் போட்டியில் சென்னை-மும்பை அணிகள் மோதுகின்றன.

இப்போட்டி மும்பையில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக சென்னை வீரர்கள் மார்ச் முதல் வாரத்தில் இருந்து பயிற்சியை தொடங்குவார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழகம் வந்த சென்னை அணி வீரர் ஹர்பஜன் சிங் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசினார். அதில், பஞ்சாப் தவிர்த்து அதிக ரசிகர் களை கொண்ட மாநிலமாக தமிழகம் உள்ளது.

என்னுடைய 17 ஆவது வயதில் கிரிக்கெட் பயணத்தை தொடங்கினேன். முதல் ஹட்ரிக் விக்கெட்டுகளை அவுஸ்திரேலியாவுக்கு எதிராக எடுத்தது எனது சாதனையாக இன்றும் உள்ளது.




தொடர்ந்து கிரிக்கெட்டில் பயணம் செய்த நான் இப்போது முதல் முறையாக படத்தில் நடிக்கிறேன். அதுவும் தமிழில் எனது முதல் படம் என்பது பெருமையாக உள்ளது. கிரிக்கெட்டில் கொடுத்த ஆதரவை எனது திரையுலக பயணத்திலும் நீங்கள் அளிக்க வேண்டும்.

இந்த ஐ.பி.எல்.தொடரில் டோனிதலைமையிலான சென்னை அணியே கோப்பையை வெல்லும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. நீங்கள் சென்னை அணிக்கு எப்போதும் போல் ஆதரவு கொடுங்கள் என்று கூறியுள்ளார். (க)

# உலகக்கோப்பையில் டி வில்லியர்ஸ் உறுதிப்படுத்தினார் பயிற்சியாளர்

ஏ.பி.டி வில்லியர்ஸ் விரும்பினால் வரவிருக்கும் இருபது-20 உலகக் கோப்பைக்கான அணியில் அவரும் ஒருவராக இருப்பார் என்று தென்னாபிரிக்காவின் தலைமை பயிற்சியாளர் மார்க் பவுச்சர் உறுதிப்படுத்தியுள்ளார்.

டிசெம்பர் மாதம் தென்னாபிரிக்க அணியின் தலைமை பயிற்சியாளராக மார்க் பவுச்சர் பொறுப்பேற்றதிலிருந்து அதிரடி மன்னன் டி வில்லியர்ஸ் அணியில் மீண்டும் இடம்பிடிப்பார் என்று யூகங்கள் பரவி வருகின்றன.



தென்னாபிரிக்காவின் முன்னாள் அணித்தலைவர் டி வில்லியர்ஸ் 2018 மே மாதம் அனைத்து சர்வதேச கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வு பெற்றார்.

இருப்பினும், 2019 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடந்த 50 ஓவர் உலகக் கோப்பையின் போது மீண்டும் கிரிக்கெட் விளையாட விருப்பம் தெரிவித்தார். இருப்பினும்,தென்னாபிரிக்க அணி நிர்வாகமும் தேர்வாளர்களும் அவர் விருப்பத்திற்கு எதிராக முடிவு செய்தனர்.

இந்நிலையில், இங்கிலாந்து அணிக்கு எதிரான இருபது-20 தொடரை 2-1 என தென்னாபிரிக்கா இழந்த பிறகு செய்தியாளர்களை சந்தித்த பயிற்சியாளர் மார்க் பவுச்சர், டி வில்லியர்ஸ் ஊடகங்கள் மற்றும் பொதுமக்களிடையே விவாதமாக உள்ளார்.

ஆனால் அவர் எனக்கு எந்த விவாதமும் இல்லை. நான் அவருடன் உரையாடியிருக்கிறேன், என்ன நடக்கப் போகிறது என்பது விரைவில் தெரியவரும்.

நான் பொறுப்பேற்ற முதல் நாளிலிருந்து நான் சொன்னது போல், நாங்கள் உலகக் கோப்பைக்குச் செல்கிறோம் என்றால், சிறந்த வீரர்களை அணியில் வைத்திருக்க வேண்டும் என விரும்புகிறேன்.

டி வில்லியர்ஸ் நல்ல வடிவத்தில் இருந்தால், நாங்கள் அவரிடம் கேட்டுக் கொண்ட நேரத்தில் விளையாட விருப்பமாக இருந்தால், அந்த இடத்திற்கு அவர் தான் சிறந்தவர் என்றால், பின்னர் கண்டிப்பாக டி வில்லியர்ஸ் விளையாட வேண்டும்.

இது ஈகோக்கள் அல்லது எதையும் பற்றியது அல்ல, அந்த போட்டியை வென்று வெற்றிபெற உங்கள் சிறந்த அணியை உலகக் கோப்பைக்கு அனுப்புவது பற்றியது என்று பவுச்சர் கூறினார். (க)

# சென்லூட்ஸ் விளையாட்டு கழகம் புனரமைப்பு

சென்.லூட்ஸ் கழகத்தின் புனரமைப்பு கூட்டம் கடந்த 31 ஆம் திகதி தொடர்மாடி மண்டபத்தில் நடைபெற்றது. அதில் தலைவராக கொ.டொனால் சரத், செயலாளராக அ.க.ஏணெஸ்ற், பொருளாளராக யே.லிண்டன், உபதலைவராக எஸ்.மலிக், உப செயலாளராக அ.கி.மதுசன் ஆகியோரை உள்ளடக்கிய 7 பேர் கொண்ட குழு தெரிவு செய்யப்பட்டது. (க)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# நான் மனநிறைவுடன் செயற்பட்டேன் தலைவர் பொறுப்பை கைவிட்டபின் டுபிளசிஸ்

தென்னாபிரிக்க வீரர் டு பிளசிஸ் டெஸ்ட் மற்றும் இருபது-20 ஆகிய இரண்டு அணித் தலைவர் பதவியில் இருந்தும் விலகுவதாக அறிவித்தார்.

அவுஸ்திரேலியாவில் நடைபெறும் இருபது-20 உலகக் கோப்பைக்கு பின் சர்வதேச கிரிக்கெட்டில் தான் விளையாடப்போவதில்லை என்று 35 வயதான டு பிளசிஸ் இந்த ஆண்டு தொடக்கத்தில் குறிப்பிட்டிருந்தார்.



டு பிளசிஸின் முடிவை தென்னாபிரிக்கா கிரிக்கெட் தனது அதிகார்பூர்வ டுவிட்டர் பக்கத் தில் வெளிப்படுத்தியது.

இது நான் எடுத்த கடினமான முடிவுகளில் ஒன்றாகும், ஆனால் நாங்கள் தொடர்ந்து ஒரு குழுவாக மீண்டும் கட்டமைக்கவும் மீண்டும் ஒருங்கிணைக்கவும் இருப்பதால், குயின்டன், மார்க் மற்றும் எனது அணியினரை ஆதரிப்பதில் நான் முழுமையாக உறுதியாக இருக்கிறேன்.

நான் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டபோது, வழிநடத்துவதற்கும் செயற்படுவதற்கும் மிக முக்கியமாக சேவை செய்வதற்கும் நான் உறுதியுடன் இருந்தேன். அணி புதிய தலைவர்களுடனும் இளம் வீரர்களுடனும் ஒரு புதிய திசையில் செல்லும் போது, அணித்தலைவர் பதவியை கைவிடுவது தென்னாபிரிக்க கிரிக்கெட்டின் சிறந்த நலன்களுக்காக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

எனது அணித்தலைவர் பதவியின் கடைசி சீசன் இன்றுவரை மிகவும் சவாலானது. ஏனெனில் எனக்கு நிறைய சிக்கல்கள் இருந்தன. சிறந்த வெற்றிபெற்ற போதும் மற்றும்மோசமாக தோற்ற போதும் அணியை கண்ணியத்துடனும் நம்பகத்தன்மையுடனும் வழிநடத்த நான் பாடுபட்டேன். எனது பதவிக்காலத்தில் என்னால் முடிந்த அனைத்தையும் செய்தேன்.

தென்னாபிரிக்க கிரிக்கெட் ஒரு புதிய சகாப்தத்தில் நுழைந்துள்ளது. புதிய தலைமை, புதிய முகங்கள், புதிய சவால்கள் மற்றும் புதிய உத்திகள்.

ஒரு வீரராக இப்போது விளையாட்டின் மூன்று வடிவங்களிலும் விளையாட நான் உறுதியாக இருக்கிறேன், மேலும் எனது அறிவையும் நேரத்தையும் அணியின் புதிய தலைவர்களுக்கு வழங்குவேன் என டு பிளசிஸ் கூறினார். (க)

# பந்துவீசினால் விரல் வெட்டப்படும் சிறுவயதில் பட்ட துயரை பகிர்ந்த அஸ்வின்

இந்திய அணியின் சுழற் பந்து வீச்சாளரான அஸ்வின், தன்னுடைய சிறுவயதில் சந்தித்த அனுபவம் குறித்து பகிர்ந்துள்ளார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு இந்திய அணியில் அறிமுகமான தமிழக வீரர் அஸ்வின், அதன் பின் மூன்று வித போட்டிகளிலும் தன்னுடைய அற்புதமான பந்து வீச்சில் மூலம் மிரட்டி வந்தார்.

ஒரு சில போட்டிகளில் இவர் பட்ஸ்மேனாகவும் கலக்கியுள்ளார். 70 டெஸ்ட் போட்டிகள் மற்றும் 111 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள இவர், டெஸ்ட் போட்டிகளில் விரைவாக 250, 300 மற்றும் 350 விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

இருப்பினும் அண்மைக்காலமாக மோசமான பார்ம் மற்றும் இளம் வீரர்களின் வருகையால், அஸ்வின் இந்திய அணியில் இடம் பிடிக்க முடியாமல் தவித்து வருகிறார்.

இந்நிலையில் தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட அவர், தன்னுடைய சிறுவயதில் கிரிக்கெட் குறித்த அனுபவங்களை பகிர்ந்தார்.

அப்போது, இருக்கும் போது உள்ளூர் கிரிக்கெட்டில் நான் சென்னையில் விளையாடி கொண்டிருந்தேன். அப்போது, இறுதிப் போட்டிக்கு எங்கள் அணி தகுதி ஆனதும், நான்கு முதல் ஐந்து பேர் கொண்ட கும்பல் ராயல் என்பீல்டு வாகனத்தில் வந்து என்னை பின்புறம் அமர்த்தி ஒரு கடைக்கு கொண்டுசென்றனர்.

மேலும் அங்கு டீ, சமோசா மற்றும் பஜ்ஜி போன்ற அனைத்தையும் எனக்கு வாங்கி கொடுத்தனர்.

பின்னர் அதை சாப்பிட்ட பின் போட்டிக்கு போகலாம் நேரமாகி விட்டது என்று நான் கூறியபோது அவர்கள் என்னை மிரட்டத் தொடங்கினார்கள்.

எதிரணி வீரர்கள் எனக்கு தெரிந்தவர்கள். நீ இன்றைய போட்டியில் விளையாடக்கூடாது. அதனால்தான் உன்னை கூட்டி வந்தோம்.

மீறி நீ பந்து வீசினால் உனது விரலை வெட்டி விடுவோம் என்று அவர்கள் என்னை மிரட்டியதாக கூறியுள்ளார். (க)

## மூதாட்டி ஒருவர்...

இதில் வித்தகபுரம் தெல்லிப்பழையைச் சேர்ந்த கந்தையா இராஜேஸ்வரி (வயது–78) என்பவரே உயரிழந்தவராவார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம–3)

## மின்சாரம் தாக்கி...

இச்சம்பவமானது நேற்று திங்கட்கிழமை யாழ்.நகரில் அமைந்துள்ள குளிர்பானக் கடையொன்றில் இடம்பெற்றுள்ளது.

சங்கானை தேவாலய வீதியைச் சேர்ந்த நந்தகுமார் நிஷாந்தன் (வயது–18) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம–3)

## தமிழர்களின்...

வித்தார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை ஊடகங் களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சாய்ந்தமருதை தனி பிரதேச செயலக பிரிவாக பிரித்தமை உண்மையில் வரவேற்கத்தக்க ஒன்றாகும். இதுதொடர்பில் இன்று பலரும் அச்சமடைந்து, சமூக ஊடகங்கள் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் எதிர்ப்பினை வெளியிட்டு வருகிறார்கள்.

ஆனால், அவ்வாறு அச்சமடையத் தேவையில்லை. இது மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடாகத்தான் நாம் கருதுகிறோம்.

அதேபோல், 30 வருடங்களாக கல்முனையில் தனிப் பிரதேச செயலகம் வேண்டும் என தமிழ் மக்கள் கோரிக் கொண்டிருக்கிறார்கள். இதுதொடர்பாக போராட்டங்களைக் கூட தமிழர்கள் மேற்கொண்டிருந்தார்கள்.

எனவே, சாய்ந்தமருது மக்களுக்கு செய்த சேவையைப் போல, இந்த தமிழ் மக்களுக்கான கோரிக்கையையும் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசாங்கத்திடம் நாம் கேட்டுக் கொள்கிறோம்.

எனவே, கல்முனையில் தனியான பிரதேச சபை ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதுதான் எமது கோரிக்கையாக இருக்கிறது.

சஹ்ரானின் சம்பவத்தை வைத்துக் கொண்டு இந்த விடயத்தில் சிலர் கருத்து வெளியிட்டாலும், அரசாங்கத்தின் தற்போதைய செயற்பாடு தொடர்பாக எவரும் குழப்பமடையத் தேவையில்லை" என அவர் கூறினார். (ம–3)

## அமெரிக்கா மட்டு...

வின் கட்டளையானது தமிழ் மக்களின் பாரிய எண்ணிக்கையிலான படுகொலைகளுக்கு இடமளித்தது.

சில்வாவை ஒரு துணிச்சலான வீரன் என்று பூச்சடிக்கப் பார்ப்போர், அப்பாவிப் பொதுமக்களுக்கு வேண்டுமென்றே பொய்யாகப் பயங்கரவாதிகள் பட்டம் சூட்டி கொன்று தீர்த்தமை துணிச்சல் என்ற வார்த்தைக்குள்ளும் வீரத்தினுள்ளும் எவ்விதத்திலேனும் அடங்காதென்பதை உணர வேண்டும் என தெரிவித்துள்ளார் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன்.

நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைத் தமிழர் சார்பாக நான் என் கருத்தைத் தெரிவிக்கின்றேன். சவேந்திர சில்வா மற்றும் அவர் குடும்பத்தவருக்கு எதிராக அமெரிக்கா பயணத்தடை விதித்துள்ளமையை வடகிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் வரவேற்கின்றார்கள்.

அமெரிக்க அரசின் செயலாளர் மைக் பொம்பியோவின் தீர்மானமாக போதிய நம்பத்தகு சாட்சியங்களின் அடிப்படையில் கொடூரமான மனித உரிமை மீறல்களில் ஆணையிடும் பொறுப்பின் அடிப்படையில் சில்வா ஈடுபட்டிருந்தார் என்று கண்டு சில்வாவை மதிப்புக்குரியவரற்ற ஒருவராக அடையாளம் கண்டுள்ளதை நாம் மனப்பூர்வமாக மெச்சிப் பாராட்டுகின்றோம்.

2009ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் சில்வா சட்டத்திற்குப் புறம்பான சாகடித்தல்களை நடத்துமாறு ஆணையிட்டார் என்பதற்கு ஆதாரபூர்வமான குற்றச்சாட்டுக்களை சனல் 4 ஆவணப்படுத்தியுள்ளது. தொலைக்காட்சி மூலம் தரப்பட்ட அதன் அறிக்கையில், அப்போதைய பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ அனுப்பிய ஆணையை சில்வா இலங்கை இராணுவத்தின் 58வது படையணி அலுவலர்களுக்கு மறுஒலிபரப்பு செய்தபோது பின்வரும் சில்வாவின் கட்டளையும் உள்ளடக்கப்பட்டுள்ளது- "செய்யக் கூடியதைச் செய்க! எவ்வாறெனினும் செய்க!.. (ஆனால்) முடிக்க வேண்டிய முறையில் அதை முடிவுக்குக் கொண்டு வரவும்!" சில்வாவின் இந்தக் கட்டளையானது தமிழ் மக்களின் பாரிய எண்ணிக்கையிலான படுகொலைகளுக்கு இடமளித்தது. அது அப்பாவிப் பொது மக்களையும் சரணடைந்த போராளிகளையும் (கெட்ட பெயரெடுத்த வெள்ளைக்கொடி நிகழ்வு) உள்ளடக்கியது.

சில்வாக்கெதிரான அமெரிக்காவின் பயணத்தடை மற்றைய நாடுகளும் பின்பற்றக் கூடிய ஒரு காரியமாக அமைகின்றது. இலங்கையில் படையணியினரால் ஆற்றப்பட்ட போர்க்குற்றங்கள், மனித இனத்திற்கெதிரான குற்றங்கள், இனப்படுகொலைகள் சம்பந்தமாக சர்வதேச நாடுகள் வழக்குத் தொடர வேண்டிய அத்தியாவசிய கடப்பாட்டினை இந்தக் காரியம் கோடிட்டுக் காட்டுகிறது.

ஐ.நா. மனித உரிமை பேரவையின் தொடர் தீர்மானங்கள் பலவற்றை ஸ்ரீ லங்கா தொடர்ந்து நடைமுறைப்படுத்த மறுத்து வந்துள்ளது. அந்தத் தீர்மானங்கள் கலப்பு முறையான நீதிமன்றங்களை உருவாக்கி போர்க்குற்றவாளிகளை விசாரித்து தீர்ப்பு வழங்க வலியுறுத்தி வந்துள்ளன. சில்வாவை ஒரு துணிச்சலான வீரன் என்று பூச்சடிக்கப் பார்ப்போர், அப்பாவிப் பொது மக்களுக்கு வேண்டுமென்றே பொய்யாகப் பயங்கரவாதிகள் பட்டம் சூட்டி கொன்று தீர்த்தமை துணிச்சல் என்ற வார்த்தைக்குள்ளும் வீரத்தினுள்ளும் எவ்விதத்திலேனும் அடங்காதென்பதை உணர வேண்டும்.

துல்லியமான குற்றரீதியான பொறுப்புகளை சுமப்பவர்கள் என்று தெளிவாகக் காணப்படும் படையணியினர் யாவரும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் கட்டாயமாக விசாரிக்கப்பட வேண்டியவர்கள் அல்லது அவ்வாறு விசாரிக்க வல்ல நியாயாதிக்கத்தினைக் கொண்ட மன்றமொன்றினால் விசாரிக்கப்பட வேண்டியவர்கள்.

ஐ.நா. பட்டயத்தின் VIIவது அத்தியாயத்தின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உலகளாவிய நியாயாதிக்கக் கோட்பாட்டின் கீழ் மற்றும் றோம் நியதிச்சட்ட வரைவில் கையெழுத்திடாத நாடுகளின் குடிமக்கள் சம்பந்தமாக குறித்த நியதிச்சட்ட ஏற்பாடுகளை அவர்கள் மீது நடைமுறைப்படுத்த கையாள வேண்டிய நடைமுறை போன்றவற்றின் கீழ் சர்வதேச சமூகம் வழக்குத் தொடர இருக்கும் அதிகாரம் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

தொடர்ந்து வந்த மூன்று இலங்கை அரசாங்கங்கள் பத்து வருடங்களுக்கு மேலாக குறித்த குற்றங்களை விசாரிப்பதைத் தட்டிக் கழித்து வந்ததில் இப்பொழுதாவது சட்டத்தின் அதிகாரம் கட்டாயமாக நிலைநிறுத் தப்பட வேண்டியுள்ளது. தமிழ் மக்களின் நீதிக்கான பயணத்தில் ஒரு முக்கிய கட்டம் தற்போது பரிணமித்துள்ளது. "கள களதே பள பளவே" என்பது ஒரு சிங்களப் பழமொழி. முற்பகல் செய்த வினை பிற்பகல் விளையும்" என்பது அதன் அர்த்தம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ம–3)

## கிளிநொச்சியில்...

ஒருவர் தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏனையவர்கள் காட்டுக்குள் தப்பியோடியுள்ளதால் பொலிஸார் காட்டுக்குள் தேடுதல் நடவடிக்கையை மேற் கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் குறித்த பகுதியில் ஆரம்பமான குழு மோதல் நேற்று அதிகாலை 2 மணி வரை தொடர்ந்துள்ளது.

பொலிஸார் குறித்த பகுதிக்கு சென்ற போது அனைவரும் காட்டுப்பகுதிக்குள் தப்பி ஓடியுள்ளனர். அப்போது ஒருவர் கைது செய்யப்பட்டதுடன், 4 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

குழு மோதலில் ஈடுபட்டவர்களின் 6 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஒரு டிப்பர் ரக வாகனத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

காட்டுக்குள் தப்பிச் சென்றவர்களை பொலிஸாரை தேடி வருவதுடன் கைது செய்யப்பட்டவரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம–9,316)

## காணாமல்ஆக்கப்...

இதனையடுத்து குறித்த கூட்டத்தை தாம் நிறுத்திவிட்டதாக மனித உரிமைகள் செயற்பாட்டாளர் ஒருவர் தெரிவித்தார்.

காணாமல் போனவர்களின் உறவினர்கள் தமது உறவுகளின் நிலையை தெரிந்து கொள்ள பல வருடங்களாக காத்திருக்கின்றனர்.

இந்தநிலையில் ராஜபக்ஷவினர் ஆட்சிக்கு வந்தபின்னர் படையினர் காணாமல் போனோர் உறவுகளை பயமுறுத்தி அவர்களின் கோரிக்கைகளை மழுங்கடிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மனித உரிமை நடவடிக்கையாளர் ஒருவர் தெரிவித்ததாக சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி சுட்டிக் காட்டியுள்ளார்.

2005-2015 ஆண்டு காலப்பகுதியில் தற்போதைய ஜனாதிபதியே அப்போதைய பாதுகாப்பு செயலாளராக இருந்தார். தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவே அப்போதைய ஜனாதிபதியாக இருந்தார்.

இதன்போது ஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாமலாக்கப்பட்டனர். இந்த நிலையில் காணாமல்போனவர்கள் இறந்துவிட்டதாக தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது பொறுப்புக்களை தவிர்க்கும் செயற்பாடாக பார்க்க வேண்டியுள்ளது. இந்தநிலையில் இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் உறுதியளித்தபடி காணாமல்போனோர் விடயத்தில் குற்றவாளிகளை நீதிக்கு முன் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பத்தின் ஆசியப் பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி கோரிக்கை விடுத்துள்ளார். (ம–3)

## சுதந்திரக் கட்சி...

கட்சியின் தலைவராக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் கட்சியின் தவிசாளராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் நியமிக்கப்பட்டுள்ளதுடன் கட்சியின் பொதுச் செயலாளராக பசில் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளராக இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர மற்றும் அமைச்சர் விமல் வீரவன்ச ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கட்சியின் உப செயலாளராக உதய கம்மன்பில நியமிக்கப்பட்டுள்ளதுடன் உப தவிசாளர்களாக திஸ்ஸ விதாரண, இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, டியூ குணசேகர ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ம–3)

மெகா பவர்
திகதி 2020/02/17
சீட்டிழுப்பு இலக்கம் 0499
N 10 25 33 49 61

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2020/02/17
சீட்டிழுப்பு இலக்கம் 1505
15 16 24 43 60 50 67

மஹஜன சம்பத
திகதி 2020/02/17
சீட்டிழுப்பு இலக்கம் 4116
L 5 2 1 2 8 0

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 17-02-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2395
வெற்றி இலக்கங்கள்
Y 19 44 49 79

ராசி அதிர்ஷ்டம்
திகதி 17.02.2020 வெற்றி வாரம் 2772 வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள்
மகரம் 22 24 38 59
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,547,334
டபள் சான்ஸ் விசேட இல.
ரூ.500 பரிசுக்குரிய 9303
ரூ.100 பரிசுக்குரிய 746
2020.02.18 ம் திகதி செவ்வாய் கிழமை சிவப்பு நிற டிக்கட்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 886
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.02.17
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,515,905/-
வெற்றி இலக்கங்கள்
21 22 37 42 J

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3302 திகதி: 2020.02.17
நீலம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள்
10 34 60 63 Y
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 33,677,150/-

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1129
சீட்டிழுப்பு திகதி 17.02.2020 திங்கள்
Y 16 64 72 77
3240
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.96,469,540

# எம்மால் முடிந்த அனைத்தையும் செய்து விட்டோம்

# இலங்கை தனது வாக்குறுதியை நிறைவேற்றுவதை உறுதி செய்க

## அமெரிக்க தூதுக்குழுவிடம் இரா.சம்பந்தன் வலியுறுத்து

(கொழும்பு)

எம்மால் இயலுமான அனைத்தையும் நாம் செய்து விட்டோம். இனிமேல் இலங்கை அரசாங்கம் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதை சர்வதேச சமூகம் உறுதி செய்ய வேண்டும் என அமெரிக்க தூதுக் குழுவிடம் தெரிவித்துள்ளார் இரா.சம்பந்தன்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க காங்கிரஸ் சபை உறுப்பினரும் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியங்களின் வெளிவிவகார உபகுழுவின் தலைவருமான அமிபேரா நேற்று கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை சந்தித்து கலந்துரையாடினார்.

இது தொடர்பில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து குழுவினரை தெளிவுபடுத்திய இரா.சம்பந்தன், தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் கடந்த அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசியல் யாப்பு உருவாக்கம் தொடர்பிலும் தெளிவுபடுத்தினார். ஆனால் தற்போதைய அரசாங்கம் வேறுவிதமான நிலைப்பாட்டினை கொண்டுள்ளதாகவும் பெரும்பான்மை மக்கள் அதிகார பரவலாக்கத்திற்கு அங்கீகாரம் அளிக்கவில்லை எனவும் அத்தகைய சந்தர்ப்பத்தில் மாற்று வழிகளை யோசிக்க வேண்டும் எனவும் உண்மைக்கு புறம்பாக அறிக்கைகள் வெளியிடுவதனையும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சியாக வந்த அரசாங்கங்கள் இந்த விடயம் தொடர்பில் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியுள்ளனர். அவை அனைத்தும் பதியப்பட்டவையாக உள்ளன. எனவே இத்தகைய நிலையில் சர்வதேச சமூகம் ஐந்தே வாக்குறுதிகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றுவதனை உறுதி செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இந்த வாக்குறுதிகள் அனைத்தும் விடுதலைப் புலிகளின் காலத்தில் கொடுக்கப்பட்டவை எனவும் தற்போது விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டு விட்டார்கள் என்கிற காரணத்தினால் வாக்குறுதிகளில் இருந்து இலங்கை அரசாங்கம் பின்வாங்க முடியாது என்பதனையும், வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் இருக்க முடியாது என்பதனையும் இரா.சம்பந்தன் வலியுறுத்தினார்.

உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ளவாறு ஒரு அதிகார பரவலாக்கத்தின் மூலமான அரசியல் தீர்வொன்றினை நாம் எதிர்பார்க்கிறோம் என வலியுறுத்திய இரா.சம்பந்தன், இலங்கை எனது நாடு. இங்கே சம உரிமையுள்ள பிரஜையாக நான் மதிக்கப்பட வேண்டும். அண்மையில் இலங்கை பிரதமருடனான ஊடக சந்திப்பில் இந்திய பிரதமர் இலங்கை மக்கள் நீதியுடனும் சமத்துவத்துடனும் அமைதியுடனும் வாழ்வதற்கான சூழல் அமைய வேண்டும் என்பதனை வலியுறுத்தி இருந்தார் என்பதனையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

நியாயமுள்ள அரசியல் தீர்வொன்றினை அடைய முடியாதே போனால் அது பாரிய பின்விளைவுகளை கொண்டுவரும் என தெரிவித்த சம்பந்தன், தமிழ்த் தலைவர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை சிங்கள தலைவர்கள் மதிக்காததன் விளைவே விடுதலைப்புலிகளின் உருவாக்கத்திற்கு காரணம் என்பதனையும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது கருத்து தெரிவித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், 2012ம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய இராஜ்ஜியம் மனித உரிமை பேரவையில் முன்வைத்த பிரேரணையின் அமுலாக்கத்தின் அவசியம் குறித்து தெளிவுபடுத்தினார். நிலையான அரசியல் தீர்வு மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றினை நிலைநாட்ட வேண்டுமெனில் பிரேரணையில் உள்ள விடயங்கள் அமுலாக்கப்படவேண்டும் எனவும் சுமந்திரன் வலியுறுத்தினார்.

இதற்கப்பால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலைமை தொடர்பில் உண்மைகள் கண்டறியப்படுவதன் அவசியத்தினை விளக்கிய சுமந்திரன், தம் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதனை அறிந்துகொள்ளாமல் எந்தவொரு நஷ்ட ஈட்டிற்கும் எம்மக்கள் அனுமதிக்கப் போவதில்லை, அவர்கள் அரச படைகளிடம் கையளிக்கப்பட்டவர்களாக இருந்திருப்பின் அவர்கள் எவ்வாறு இறந்தார்கள் என்ற உண்மை வெளிக்கொணரப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

உண்மையை கண்டறிந்து நஷ்ட ஈடு வழங்குவதில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் மற்றும் நஷ்ட ஈட்டு அலுவலகம் என்பன சேர்ந்து இயங்க வேண்டும் என தாம் எதிர்பார்த்ததாகவும், அது தற்போது நிகழ்வதற்கான சாத்தியங்கள் குறைவு எனவும் தெரிவித்த இரா,சம்பந்தன், எம்மால் இயலுமான அனைத்தையும் நாம் செய்து விட்டோம் இனிமேல் இலங்கை அரசாங்கம் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதை சர்வதேச சமூகம் உறுதி செய்ய வேண்டும் என இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

பொருளாதார முன்னேற்றம் தொடர்பில் கருத்து தெரிவித்த எம்.ஏ.சுமந்திரன். வேலைவாய்ப்பின்மையை குறைக்கும் முகமாக புதிய அபிவிருத்தி திட்டங்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களிற்கு தேவை என்பதனை சுட்டி காட்டினார். மற்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களிற்கு ஒரு விசேட வேலைத்திட்டம் தேவை என்பதனையும் சுட்டிக்காட்டிய சுமந்திரன், மீன்பிடித்துறை, விவசாயம், பண்ணை வளர்ப்பு போன்ற துறைகள் நவீனமயப்படுத்தப்பட வேண்டிய தன் அவசியத்தினையும் சுட்டிக்காட்டிய அவர் அவ்வாறு செய்யப்படுகின்ற பொழுது உச்ச பயன்பாட்டினை அடைய முடியும் என்பதனையும் எடுத்துக்கூறினார்.

சர்வதேச சமூகத்தின் குரல் இலங்கை விடயம் தொடர்பில் பல்வேறு மட்டங்க்ளில் கேட்க வேண்டும் எனவும் தமிழ் மக்களிற்கான ஒரு அரசியல் தீர்வு எட்டப்படும் பணியில் சர்வதேசத்தின் பங்களிப்பு அத்தியாவசியமானது எனவும் இரா.சம்பந்தன் வலியுறுத்தினார்.

இச்சந்திப்பில் கருத்து தெரிவித்த குழுத் தலைவர், இலங்கை அரசாங்கமானது தனக்கு வாக்குறுதிகளை நிறைவேற்றுவதனை உறுதிசெய்யும் வகையில் ஐக்கிய அமெரிக்கா அனைத்து முயற்சிகளையும் எடுக்கும் என தெரிவித்தார் என குறிப்பிடப் பட்டுள்ளது. (ம-3)




**பணிப்பெண் தேவை**

வீட்டு வேலை செய்வதற்கு
பணிப்பெண் தேவை.
இடம் – மானிப்பாய்
தொடர்பு : 076 312 1476
(C-9275)

**காணி விற்பனைக்கு**

இராசபாதை வீதி, பாலா மாஸ்டர் கடை ஒழுங்கையில் பங்குக்கிணற்றுடன் பத்து அடிப்பாதை உட்பட 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(தரகர் தேவையில்லை)
(2288)
நேரடித் தொடர்புகளுக்கு – 076 992 3075



**பிரதேச செய்தியாளர்களை நியமித்தல்**

வலம்புரி பத்திரிகையின் பிரதேச செய்தியாளர்களாக பணியாற்றுவதற்கு பொருத்தமும் விருப்பமும் உடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

செய்தியாளர்களாக செயற்பட விரும்புகின்றவர்கள்
தமது முழுப்பெயர்,
நிரந்தர முகவரி,
பால்,
பிறந்த திகதி,
தே.அ.அ.இலக்கம்,
தொலைபேசி இலக்கம்
கல்வித் தகைமை, தொழில்

போன்ற விபரங்களை உள்ளடக்கியதான
விண்ணப்பத்தை எதிர்வரும் 20.02.2020ஆம்
திகதிக்கு முன்னதாக

பிரதம ஆசிரியர்,
வலம்புரி நாளிதழ்
இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

எனும் முகவரி இட்டு சாதாரண தபால் மூலமாகவோ அன்றி நேரிலோ ஒப்படைக்கவும்.

குறிப்பு: செய்தியாளராகச் செயற்படுவதற்கு ஆர்வமுடையவர்கள் விரும்பினால் குறுங்காலப் பயிற்சி வழங்கப்படும்.

பொதுமுகாமையாளர்
வலம்புரி (க)



**விரைவு பொதிகள் சேவை**
விசேட விலை குறைப்பு
UK – 550*/=Kg
DELIVERY IN 3-5 DAYS
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
0768226240
V2 TRAVELS
(C-8785)

**நெல்லியடியில்...**
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை
லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=
சலுகை அட்டை (Discount Card)
பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.
076 443 1576
அருள்
பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி.
(C-9193)

**போட்டிப்பரீட்சை மாலை நேர வகுப்புகள்**
ஆரம்பம் :- இன்று
செவ்வாய் (18.2)
IQ 4.45pm-6.45pm
செவ், புதன், வியா
4.45 pm - 6.45 pm
SLTES
(Open/limited)
பதிவாளர், சட்டமாணி
T.P : 076 688 3394
யாழ்ப்பாணக்கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
(C-9277)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.